Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20 ரூபா 12/00
දිනමුරසු වාරමලර් ஆக. 20-26, 2000

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 370

## தீர்வுத் திட்டத்தில் அடுத்த நகர்வு?



## சச்சின் சந்தித்த சச்சின்

## திருமண விபரீதம்

## 'ஒப்பரேஷன் ஜென்டில்மென்'

# முரசம்

## காலம் காத்திருக்கப்போவதில்லை!

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

'நந்தவனத்தில் ஓர் ஆண்டி
அவன் நாலாறு
மாதமாய்க் குயவனை
வேண்டிக் கொண்டு
வந்தான்னொரு
தோண்டி
அதைக்
கூத்தாடிக் கூத்தாடிக்
போட்டுடைத்தாண்டி...'
என்று பாடுமாற் போல்
நாலாறல்ல
பல
மாதங்களாய்
தயாரித்த இந்தத்
தீர்வுத் திட்டத்தை
இறுதியாக
இப்போது பாராளுமன்றத்துக்குக்
கொண்டு வந்து
போட்டுடைத்து விட்டு
நிற்கிறது அரசாங்கம்.

இது உடைந்ததற்கு
இரண்டு காரணங்கள்.
ஒன்று, இது
உடையக்கூடிய அளவு
மலினமாக்கப் பட்டிருந்தது.

அதாவது,
இப்படியான ஒரு தீர்வுக்கு
முக்கியமாக ஆதரவளிக்க
வேண்டிய
தமிழ்த் தரப்பினரைத்
திருப்திப்படுத்தக்கூடிய அளவு
நிறைவானதாக அது
இருக்கவில்லை.

ஆனால்,
தமிழ்த்தரப்பின்
ஒரு பகுதியினர்,
இதனை ஏற்காவிட்டால்
தீர்வுக்கான வேறு ஒரு
சந்தர்ப்பம்
கிடைக்காது போய்விடுமென்று
ஆதரித்தாலும்
இன்னொரு பகுதியினர்
எதிர்ப்புத் தெரிவித்தனர்.

பாராளுமன்றத்தில்
மூன்றில் இரண்டு
பெருன்பான்மை தேவைப்படும்
இக்கட்டான சந்தர்ப்பத்தில்
ஒவ்வொரு வாக்கும்
தங்க வாக்காகக்
கருதப்பட்ட சமயத்தில்
தமிழ்த் தரப்புப்
பாராளுமன்ற உறுப்பினர்களில்
ஒரு பகுதியினர் எதிர்ப்பதென்பது
பாரிய பின்னடைவாக
அமைந்திருந்தது.

தீர்வுத் திட்டத்தில்
முஸ்லிம்களைத்
திருப்திப் படுத்த
எடுத்த அக்கறை கூட
தமிழரின் ஆதங்கங்களை
மதிப்பதில் காட்டப்படவில்லை.

உதாரணத்துக்கு
வடக்கு-கிழக்கு
பிராந்திய சபையின்
இடைக்கால நிர்வாகத்தில்
புனர்வாழ்வு அமைச்சு
முஸ்லிம் பிரதிநிதி
முதலமைச்சருக்கு
வழங்கப்படவேண்டுமென்று
வலியுறுத்தும் துணிவு
ஏற்பட்டிருக்க முடியாது.

தமிழர்கள் பிரதானமாக
பாதிக்கப்பட்டவர்களாக
இருக்க
இடைக்கால நிர்வாக சபையின்
முஸ்லிம் அமைச்சருக்கு
இந்த அமைச்சை
வழங்கவேண்டும் என்று
கேட்கத் துணிந்தது
தமிழ் மக்கள் இன்று
வாயில்லாப் பூச்சிகள் என
எண்ணிக் கொண்ட
துணிவினாலாகும்.
முஸ்லிம் மக்களும்
பாதிக்கப்பட்டவர்கள் தான்.

ஆனால் அதற்காக
தமிழ் மக்களுக்குரிய
அமைச்சை
கபளீகரம் செய்ய
அனுமதிக்க முடியாது.

இதே வேளை
இந்தத் தீர்வுத் திட்டத்தை
அமுல்ப்படுத்த
கையாண்ட முறை
இதன் தோல்விக்கு
இரண்டாவது காரணம்.

எதிர்க் கட்சியினரை
ஆசைகாட்டி வாங்கி
வெற்றியீட்ட நினைத்தது
அதே குட்டையிலூறிய
மட்டையான ஐ.தே.க.வின்
மாற்றுத் தந்திரத்தால்
முறியடிக்கப்பட்டுவிட்டது.
இனிமேலாவது
குறுக்கு யோசனைகளில்
இறங்காமலும்
தமிழ் மக்களை
இயலாக் கட்டத்தில்
ஆதரிப்பவர்களாக
ஆக்க நினைக்காமலும்
நேர்மையாக முயற்சித்தாலே
அர்த்தமுள்ள தீர்வை
ஈட்ட முடியும்.
ஆனால்
காலம்
காத்திருக்கப் போவதில்லை.

**மீண்டும் மறுமடலில்**
**வந்து கலக்கும்வரை**

**என்றென்றும் அன்புடன்,**
**ஆசிரியர்.**

## சேவை! தொண்டு! பணி

இந்து மதம் சேவை செய்வதை முக்கிய கடமையாகக் கருதுகிறது. யாரேனும் பயனடையும் பொருட்டுச் செய்கின்ற உதவி சேவை எனப்படுகிறது. பிரதிபலன்களையும் சாதி மத பேதங்களையும் கடந்து உதவி செய்ய வேண்டும்.

மக்கள் சேவையே மகேசன் சேவை என்கிறது இந்து தர்மம். மக்களுக்குச் செய்கின்ற மகத்தான பணி ஈஸ்வரனுக்குச் செய்கின்ற தொண்டாகிறது. மனிதனை உன்னத நிலைக்கு உயர்த்துவது சேவையாகும்.

சேவையினை 'நிஷ்காமிய கர்மா' என்று வடமொழி கூறுகின்றது. நிஷ்காமியகர்மா என்றால் தன்னலமற்ற தொண்டாகும். தன்னலமற்ற சேவையில் மனித மனம் தூய்மையடைகிறது. "எங்கு தன்னலமற்ற சேவை இடம் பெறுகிறதோ அங்கு நான் இருப்பேன்!" என்று இறைவன் ஒரு இடத்தில் கூறியிருக்கிறான்.

இறைவன் எமக்களித்த இந்தச் சரீரத்தால் பிறர் நம்மையடையும் படி பணிசெய்ய வேண்டும். சேவையிலீடுபடுகின்றவர்குளுக்கு இறையருள் நிச்சயம். இறையருள் மட்டுமே மனிதனுக்கு வெற்றியைக் கொடுக்கும்.

தம்பிலுவில் தங்க-தவராஜா.

# ஆன்மீகம்



## வீண் பழி சுமத்தாதீர்கள்

இஸ்லாம் பலதர மணங்களை ஆகுமானதாக ஆக்கியிருக்கிறது. ஒருவருக்கு வாய்ப்பு வசதிகள் இருந்தால் பல பெண்களை மணம் புரிந்து ஒருவருக்கொருவர் அநீதி இழைக்காது சமமாக நடாத்துவதையே இது குறிக்கிறது. ஆனால், எமது சமூகத்தில் அனேகமாக இவற்றிற்கு மாற்றமாகவே நடக்கிறது. ஒரு பெண்ணை மணம் புரிந்து குடும்ப வாழ்க்கை நடாத்திக்கொண்டிருக்கும் போது ஏதோ சிறு காரணத்திற்காக அவதூறு கூறி வீண்பழி சுமத்திவிட்டு, இன்னொரு பெண்ணை மணம் முடித்து ஏமாற்றப்பட்ட பெண்ணிடம் உள்ள சொத்துக்களை அநியாயமாக அபகரித்து விடுகிறார்கள். இப்படிப் பட்டவர்களுக்கு அல்குஆர் என்ன கூறுகிறது?

"நீங்கள் ஒரு மனைவியை நீக்கிவிட்டு மற்றொரு பெண்ணை மணந்து கொள்ள விரும்பினால் அவர்களுக்கென நீங்கள் ஒரு பொற்குவியலைக் கொடுத்திருந்தாலும், அதிலிருந்து எதனையும் எடுத்துக்கொள்ளாதீர்கள். மேலும், அவர்களை வீண்பழி சுமத்தி அபாண்டமாகவும், பகிரங்கமாகவும் கேவலப்படுத்தி விடாதீர்கள்." (அல்குர்ஆன் 40:20)

நன்றி 'சுவனம் செல்ல போதனைகள்'

வை.எம்.தாஹிர்கரீம்-கல்முனை-06.

## "நீ வெட்கப்படுவதில்லை!"

"ஆண்டவராகிய என் தலைவர் துணை நிற்கிறார். நான் அவமானம் அடையேன். என் முகத்தைக் கற்பாறை ஆக்கி கொண்டேன். இழிநிலையை நான் அடைவதில்லை என்றறிவேன். (ஏசாயா 50:7)

நாம் வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் ஏமாற்றமும் பொய்யும் உண்மை போன்ற தோற்றத்துடன் நம்மை வெட்கப்படுத்துவதைப் போன்று தோன்றலாம். இப்படியான சந்தர்ப்பங்களில் தான் நாம் மனந்தளராது இறைவனின் பாதங்களைப் பற்றிக் கொள்ளவேண்டும். நம்மை இறைவன் வெட்கப்படவிடமாட்டார். பல தடவைகள் இதை அனுபவ ரீதியாகவும் அறிந்துள்ளேன். கிறிஸ்தவர்களுடைய வாழ்வில் சோதனை நிறையவே ஏற்படுவதுண்டு. அன்புள்ளங்களே! நீங்கள் உண்மையாகவே இயேசுவில் நம்பிக்கை வைத்துள்ளீர்களா! நிச்சயமாக நீங்கள் வெட்கப்படுவதில்லை என்பதை உணர்வீர்களாக. தேவன் தன் பிரதிநிதிகள் வாயிலாக நீங்கள் வெட்கப்படாதபடி நிச்சயமாக காத்துக் கொள்வார்.

நாம் பிறரால் ஏமாற்றப் பட்டு நொந்து போன, வேதனை நிறைந்த உள்ளத்துடன் துன்புறுவதைப் பார்த்து மகிழ்ச்சியடைபவர்கள் தலைகுனிந்து வெட்கப்படுவார்கள். உண்மைகள் மலரும் போது தேவன் நம்மை நாம் வெட்கப்பட்டு போகாதபடி தலை நிமிர்ந்து நிற்கச் செய்வார்.

ஜோசப் அருள்சாமி-ரஜவெல்ல.

## கவிதைப் போட்டி இல.370



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 26.08.2000

கவிதைப் போட்டி இல.370
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

## கவிதைப் போட்டி இல.367

### பரிசுக்குரிய கவிதை

### சதியா விதியா?

**பாதியுடல் மறைத்து**
**நாதியற்று**
**வீதியோரம் வீற்றிருக்கும்**
**நறுமலரே!**
**இது காலத்தின் சதியா?**
**இல்லை உன் தலை விதியா?**

திருமலை-க.மலர்ராஜன்.

### அறியாயோ?

தரையில்
அமர்ந்து நீ
சிறையிலுள்ள தந்தையையா
எண்ணுகிறாய்....?
அவர் மாண்டு
ஆண்டுகள் பல
கடந்திட்டதே...!

பீ.விக்னேஸ்வரன்-அட்டன்.

### எதைப் பார்க்கிறாய்?

எதிர்பார்க்கும் எண்ணங்கள்
எவையாக இருந்தாலும்
அவையாவும் கிடைக்காமல்
எதிர் சென்று போகிறதே ஒளி
கதிராக நம்கரம்
வரும் என்ற சமாதானம்
புதிராகிப் போனதே-என
விடை எதிர்பார்த்து
இருக்கின்றாயா?

ந.அபிராமி-வவுனியா.

### காலெடுத்தால்....!

கண்டு கொண்டாள்
கண்டு கொண்டாள்
காலடியில் கண்ணிவெடி!
கண்மணி இவள்
காலெடுத்தால் காலெடுக்கும்
கண்ணிவெடி!.

ஆர்.இராஜேஸ்-கந்தேகெதர.

### சந்ததிக்கே முற்றுப்புள்ளி

மூன்றே.... வயததில்
மூண்ட சண்டையில்...;
சொந்தங்களை-இழந்து
மூளையது பேதலிக்க-இப்பிஞ்சு செய்த பாவம்,
திராவிட பரம்பரையில் உதித்ததுதானா?

பெரியகல்லாறு டினேஸ்-மஸ்கெலியா.

### எதிர்பார்ப்பு!

குழந்தாய்
நீ
உற்றுப் பார்ப்பது
தெரிகிறது;
ஆனால்,
சமாதானம்
நீ பார்த்து
தெரிந்து கொள்ளும்
தொலைவில்
இல்லை என்பது
உறுதி!

வீரசிங்கம் ஸ்ரீதரன்-மூதூர்.

### ஐயோ பரிதாபம்

உன் மானம் காக்க,
உன் கைகளும்,
முன் வரவில்லையா?
ஓ...?
செல் தாக்குதலினால்
உன் கைகள்
செயலிழந்து விட்டனவோ?

ஜீ.எச்.கே.அஜந்த-அக்கரைப்பற்று 08.



### சிந்திக்கும் தங்கையே!

நடந்தவை யாவும் நடந்தவைதான்-இனி
நடக்கவிருப்பதும் காலத்தின் கைகளில்-ஏனெனில்
நிகழக் கூடியது நிகழ்ந்து விடுமானால்-அது
நிகழ்வதைப் பொய்யாக்கக் கூடியது
எதுவுமில்லை, இவ்வையகம் தனில்....

நிஷீ-சாய்ந்தமருது.

### சமாதானம்

சமாதானம் என்கிறார்களே
அது எப்படி இருக்கும்?
ஓ-அது
தொலைந்து விட்ட ஒன்றா?
அதனால் தான்
என் கண்களுக்கு
தென்படவில்லையா?

செல்வி-காத்தான்குடி.

### நான் அநாதை

எண்ணிப் பார்க்கத் தெரியவில்லை;
எத்தனை நாள் இந்த கோலமென்று
எடுத்துச் சொல்ல முடியவில்லை;
வார்த்தைக்கு உயிர் ஊட்ட
உணவுக்கு பஞ்சமென்பதால்....!
ஆனால் உண்மை ஒன்று புரிகிறது
நான் அநாதை என்று தெரிகிறது!

த.விதுரன்-மட்டக்களப்பு.

# வாசக(ர்)சாலை

எனது அன்பின் இனிய முரசே!

வாரம் தோறும் சுவையான அம்சங்களைச் சுமந்து ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வரும் உன் வருகைக்கு மிக்க நன்றி. அதிலும் ஆசிரியர் ஐயாவின் 'அன்புள்ள உங்களுக்கு வணக்கம்', 'மோனிக்கா என் மோனிக்கா', 'பாப்பா முரசு', 'ஸ்போர்ட்ஸ்', 'நில் கவனி முன்னேறு' போன்ற ஆக்கங்கள் என்னை மிகவும் கவர்ந்தவை. என்றும் எனது முரசுக்கு வாழ்த்துக்கள் கூறி விடைபெறுகிறேன்.

நாகராஜா சுமதி-கசூர்-குவைத்.

அன்பின் முரசே!

ஒவ்வொரு வியாழக்கிழமைகளில் நீ சுமந்து வரும் 'செய்திகள்', 'அரசியல்', 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', ஜூலை 16. 22,2000ம் திகதி வெளியான 'பீகார் மாநிலப் படுகொலைகள்' எங்களின் மனதை உருக்கியது, 'மர்மக்கதை மன்னன்' என்னும் புகழ்பெற்ற பட்டுக்கோட்டை பிரபாகரின் கதை அருமை, இராபத்மநாதன் எழுதிவரும் 'ஈழத்து எழுத்துச் சிற்பி' தொடர் நன்று. வடக்கு-கிழக்கு பிரச்சனைகள் எப்படி போகின்றது என்று அறியாத மக்களை தினமுரசு மூலம் அறிய வைக்கின்றார் 'அலசுவது-இராஜதந்திரி',. வெளி நாடுகளில் நடைபெறும் சம்பவங்களை தெரியாத எங்களுக்கு தெரியப்படுத்துகிறது 'தகவல் பெட்டி',. 'மன்னாதி மன்னன்' என்ற கதையை எழுதிவரும் இராஜகுமாரன், மற்றும் அனைத்து ஆக்கங்களையும் எழுதிவரும் புதிய பழைய எழுத்தாளர்களின் பணி தொடர வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

கோ.சிவலிங்கம்-மூதூர்.

இனிய முரசே!

வாரத்திற்கு வாரம் வசந்தம் அளிக்கும் உனக்கும், உன்னைச்சார்ந்தோருக்கும் வாழ்த்துக்கள். பட்டுக்கோட்டை பிரபாகரின் புதிய தொடர் உனக்கு மேலும் மெருகூட்டியுள்ளது. வாசகர்களின் கேள்விகளுக்கு திறமையாகவும், விவேகமாகவும் பதிலளிக்கும் 'சிந்தியா'வுக்கும் என் நன்றிகள் உரித்தாகட்டும்.

வாழ்க முரசு! வளர்க புகழ்!!

ஏ.எல்.முஹம்மட் றஸ்மி-அட்டாளைச்சேனை-02.

பத்திரிகையுலகின் 'ஜாம்பவான்' அமரர் எஸ்.டி.சிவநாயகம் பற்றிய தொடர் முரசுக்கு தனித்துவம் சேர்க்கிறது. மிலேனிய ஆண்டில் மேலும் புதுமைகளை எதிர்பார்க்கிறோம். கீப்-இட்-அப்.

கலைநேசன் ஜவாத்-புத்தளம்.

என் அன்பின் (நண்பன்)
தினமுரசே!

வாரா வாரம் நம் கரங்களிலே பல் சுவை அம்சங்களுடன் தவழ்ந்துடுவியாம்!


பல புதுபுதுச் செய்திகளை-சுடச் சுடத்தந்துடுவியாம்!

'தகவல் பெட்டியில்' பல அதிசயங்கள் தந்துடுவியாம்! 'பாப்பா முரசுப்' பகுதியை மூளைக்கு வேலையாக தந்துடுவாய்!

'ஜோக்ஸ்' பகுதியை சிரித்து மகிழத் தந்திடுவியாம்!

முரசே! இப்படியாக பல் சுவை அம்சங்களை தெவிட்டாத வண்ணம் விருந்தாக்கும் பெருமை உன்னையே சாரும். நீ வாழ்க வளர்க என வாழ்த்தும் உன் இணைபிரியாத (நண்பன்) வாசகனில் ஒருவன்.

என்.எம்.நிஸாம்-காத்தான்குடி-02.




என் அபிமான முரசே!

உன்னில் அடங்கியுள்ள அனைத்து அம்சங்களும் என் மனதில் ஆழமாகப் பதிகின்றன! கிரிக்கெட் சபையின் வெப்தள முகவரியை முன்கூட்டியே தந்த முரசுக்கு மிக்க நன்றி! ஒவ்வொரு வாரமும் உன் வருகையை ஏக்கத்துடன் எதிர்பார்த்திருக்கிறேன்! உன் பணி தொடர எனது வாழ்த்துக்கள்!

எம்.எம்.எம்.ஹஸன்-ஹெமாதகம.

என் அன்பின் முரசே!

இன்று தமிழ் பேசும் மக்களின் இதயங்களில் குடிகொண்டிருக்கும் பத்திரிகை தினமுரசு என்றால் அது மிகையாகாது. உன் முரசு1 முதல் தற்போது வந்துள்ள 367வது முரசு வரை நான் அனைத்தையும் தவறாமல் வாசித்து வருகின்றேன். இனியும் தவறாமல் வாசிப்பேன். மற்றும் முரசே உன்னில் நீ மாணவர்களுக்குத் தேவையான முக்கிய விசயங்களை கட்டாயம் கொண்டுவர வேண்டும்! என்பதே இந்த அபிமான வாசகனின் அன்பு வேண்டுகோள். மற்றும் உன்னில் வரும் அனைத்து அம்சங்களும் சுவையானதாகவே இருக்கின்றன. இதே போல் நீ எப்போதும் சுடர் விட்டுக் கொண்டு ஜொலிக்க வேண்டும் என்று கூறி தற்போது உன்னிடமிருந்து விடை பெறுகிறேன்.

எச்.எம்.ஹிபாஜி-திருகோணமலை.

அன்பின் இனிய முரசே!

மத்திய கிழக்கு நாடுகளில் வாழும் அனைத்து இலங்கை தமிழர்களும் உண்மை தமிழ் செய்திகளை படிக்க கிடைக்க வாய்ப்பாகிறாய். இந்த நாடுகளில் தமிழ் நெஞ்சங்களுக்காக உண்மை செய்திகளையும், கதைகள், கவிதைகள், பல நாட்டாரையும் கவரக் கூடிய விதத்தில் 'சினிமா' என பல அம்சங்களையும் கடல் கடந்து எமக்காகத் தாங்கி வரும் முரசே! நீ என்றும் உண்மையில் விளங்க ஆசிரியர் சக பணியாளர்கள் அனைவரும் முரசுக்காக விடா முயற்சியில் உழைக்க, வாழ்க என வாழ்த்துகிறேன். பொய்மை மறந்து உண்மை வளர்க!

அ.பிரேமானந்தன்-டோகா-கட்டார்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):- 074-513266

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# பொதுத் தேர்தலைக் கண்காணிக்க சர்வதேச சமூகம்

# ஐரோப்பிய ஒன்றியம் விரிவான ஏற்பாடு

**அடுத்து வரும் பொதுத் தேர்தலைக் கண்காணிக்க ஐரோப்பிய சமூகம் 100 பேர் கொண்ட ஒரு குழுவினரை இலங்கைக்கு அனுப்பி வைக்கவிருப்பதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து செய்திகள் வெளியாகியுள்ளன. அண்மைக் காலங்களில் நடைபெற்ற தேர்தல்களின் போது இடம்பெற்ற பல முறைகேடான சம்பவங்கள் பற்றி வெளியான செய்திகள்தான் ஐரோப்பிய சமூகத்தின் இத்தகைய முடிவுக்கு வழிவகுத்துள்ளது, என்று தெரிகிறது.**

பாராளுமன்றம் எந்த நேரத்திலும் கலைக்கப்படலாம். இந்தச் செய்தி வாசகர்களாகிய உங்களுக்கு எட்டும்போதே பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலுக்கான திகதியும் அறிவிக்கப் பட்டிருக்கலாம்.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது உலக சமூகத்தின் அனைத்து கண்களும் இலங்கையின் பால் ஈர்க்கப் பட்டிருக்கும் என்பது நிச்சயம். இலங்கையில் தொடர்ந்து நடைபெற்றுவரும் இன மோதல்களினாலும், இதனை முடிவுக்குக் கொண்டு வர அரசாங்கம் முன் வைத்துள்ள தீர்வுத் திட்டத்தினாலும், தொடர்ந்தும் இந்நாட்டின் எதிர்காலம் எவ்வாறு இருக்கப் போகிறது என்ற எண்ணத்தினாலும் சர்வதேச சமூகம் இந்நாட்டின் பால் அதிக அக்கறை கொண்டிருப்பது வெளிப்படை.

கடந்த காலங்களில் இந் நாட்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தல்களிலும் மாகாணசபை மற்றும் ஜனாதிபதி தேர்தல்களிலும் பல மோசடிகள் இடம் பெற்றதாகப் பரவலாக எழுந்த குற்றச் சாட்டுகள் இந் நாட்டின் மீது அதிக அக்கறை கொண்ட பல சர்வதேச நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளன. முக்கியமாக ஐரோப்பிய சமூகம் கூடுதலான அக்கறை காட்டி வருகிறது. ஆகவே எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல்களை அவதானிக்க ஐரோப்பிய சமூகம் முன்வந்திருக்கிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த சில பிரமுகர்கள் ஏற்கனவே இலங்கைக்கு வந்து விட்டதாக ஒரு செய்தி கூறுகிறது. இங்குள்ள தேர்தல் நடைமுறைகள், வாக்களிப்புத் தொடர்பான நடவடிக்கைகள், ஆகியவற்றை இவர்கள் ஆராய்ந்து வருவதாகவும் அறியவருகிறது.

இந்நாட்டின் அரசியல்வாதிகள், பொதுத்துறை சார்ந்த பிரமுகர்கள், வர்த்தக சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோரையும் இக் குழுவினர் கண்டு கலந்துரையாடி தகவல்களைச் சேகரித்து வருவதாகவும் கூறப்படுகிறது. தேர்தலைக் கண்காணிக்க ஐரோப்பிய சமூகத்தைச் சேர்ந்த 100 பேர்களைக் கொண்ட அவதானிகள் குழுவொன்று எதிர்வரும் பொதுத் தேர்தலைக் கண்காணிக்கவும் மேற்பார்வையிடவும் இங்கு வந்து சேரவிருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தகவல்கள் பொசிந்துள்ளன. இவர்கள் நாடெங்கிலும் சென்று விரிவானமுறையில் கண்காணிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது. ■

## காரைதீவுப் பிரதேசத்தில் உழவு இயந்திரங்கள் திருட்டு

(காரைதீவு நிருபர்)

காரைதீவுப் பிரதேச செயலகப் பகுதியில் கடந்த 12ம் திகதி நள்ளிரவு 2.00 மணியளவில் இரு உழவு இயந்திரங்கள் வெவ்வேறு இடங்களில் திருடப்பட்டுள்ளன.

ஒரு உழவு இயந்திரம் காரைதீவு மத்திய பகுதியிலிருந்தும், மற்ற உழவு இயந்திரம் மாவடிப்பள்ளியிலிருந்தும் திருடப்பட்டுள்ளன. காரைதீவைச் சேர்ந்த கே.தட்சணாமூர்த்தி என்பவரின் உழவு இயந்திரம் பெட்டியுடன் திருடப்பட்டுள்ளது. துப்பாக்கியை காட்டி பயமுறுத்தி கொண்டு சென்றதாக சம்மாந்துறைப் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எவரும் கைதாகவில்லை.

மாவடிப்பள்ளி ஆதம்வீதியிலுள்ள வீடொன்றில் வைத்து உழவு இயந்திரம் (135-மெனிபேர்குஷன்) திருடப்பட்டிருக்கிறது. சாய்ந்தமருதைச் சேர்ந்த முதலாளியின் இவ்வுழவு இயந்திரத்தை சாரதி ஏ.ஜாயிஸ் மறு நாள் வேலையை நேரகாலத்துடன் தொடங்கு வதற்காக மாவடிப்பள்ளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சமயமே இத் திருட்டு இடம்பெற்றதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் பெறுமதி மூன்றரை இலட்ச ரூபா எனக் கூறப்பட்டிருக்கிறது.

இந்த இரு உழவு இயந்திரங்களது திருட்டு ஏனைய உரிமையாளர்களை கதிகலங்கவைத்துள்ளது.

## கற்பிட்டியில் மீனவர்கள் கைது

கற்பிட்டிக்கடலில் இரவு நேரத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 13 மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

"இப்பிரதேசத்தில் பாதுகாப்புக் காரணங்களுக்காக காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரையுமே மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. கடற்றொழிலையே நம்பி வாழும் இந்த மீனவர்களுக்கு மேற்படி குறிப்பிட்டகாலக் கெடுவுக்குள் மீன்பிடித்து சீவியம் நடத்துவது கடினமாக இருந்தமையினால், சில சந்தர்ப்பங்களில் அவர்கள் மாலை கடந்த பின்னரும் கடலில் தாமதிக்க நேரிடுகிறது. இவ்வாறான நிலையில்தான் இந்தப் 13 பேரும் கைதாக நேர்ந்துள்ளது" என்று கற்பிட்டியைச் சேர்ந்த செய்னுல் ஆப்தீன் முரசுக்கு அறிவித்துள்ளார்.

## வானொலி கலைஞர் நாகூர் மறைவுக்கு அஸ்வர் பா.உ. அனுதாபம்!

இலங்கை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சிகளில் மறக்க முடியாத கலைஞராகத் திகழ்ந்த நாகூர் அவர்கள் கடந்த 9ம் திகதியன்று காலமாகி விட்டார். அன்னாரின் மறைவு ஒரு மாபெரும் இழப்பாகுமென்று பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் அவர்கள் தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

"வரலாற்று நாடகங்களிலும் தொடர் நாடகங்களிலும் விவரணச் சித்திரங்களிலும் பங்கு கொண்டு தனக்கென ஒரு தனியான இடத்தைப்பிடித்துக் கொண்டவர். என் தாலிப், சபா மஹ்மூர் போன்ற மூத்த வானொலிக் கலைஞர்களோடு பட்டொளி விட்டுப் பிரகாசித்தவர் நாகூர்.

கலை வாழ்வில் மாத்திரம் அவர் தொக்கி நிற்கவில்லை. அவருடைய சேவா மனப்பான்மை அனைத்துக் கலைஞர்கள் இல்லங்களுக்கும் தனது துவிச்சக்கர வண்டி மூலம் அவரை அழைத்துச் சென்றது. அதன் மூலம் கலை உறவுப் பாலம் அமைத்தவர் நாகூர். அனைவரும் அவரை அன்போடு நேசித்தனர். அவருக்குப் பகைவர்களே இல்லை.

அவர் ஒரு சாதாரண கலைஞர் மட்டுமல்ல, நல்ல இறை பக்தரும் கூட" என்று திரு.அஸ்வர் அவர்கள் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். ■

## இடம் பெயர்ந்த அகதிகளுக்கு தற்காலிக நிவாரணம்!

யாழ்குடாநாட்டில் இடம்பெற்றுவரும் மோதல்கள் காரணமாக குடிபெயர்ந்த மக்களுக்கு உரிய நலப்பணிகள் தாமதமாகவே நடைபெற்று வருவது கண்கூடு. இவ்வாறு துன்பப்படும் 3000 குடும்பங்களுக்கு, குடும்பத்துக்கு ரூபா.2000 வீதம் தற்காலிக நிவாரணமாக கொடுக்கப்படுவதற்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிச் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஏற்பாடு களைச் செய்துள்ளார்.

இதற்கிடையில் ரூபா 2000 ஒரு குடும்பத்துக்கு போதாது என்றும், இத்தொகை ரூபா 10,000மாக அதிகரிக்கப்படவேண்டுமென்றும் பிறிதொரு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அறிக்கை விடுத்துள்ளார். இது நடைமுறைக்கு ஒவ்வாத வெறும் பிரசார அறிக்கையே என்று யாழ் பொதுமக்கள் அபிப்பிராயப்படுகின்றனர். ■

## யாழ்ப்பாணப் பத்திரிகையின் தவறான வழிகாட்டல்!

பொதுத் தேர்தலுக்கான காலம் நெருங்கிக் கொண்டு வருவதனால் யாழ்ப்பாணத்தில் பல்வேறு தமிழ் அரசியல்கட்சிப் பிரமுகர்களின் நடமாட்டமும் செயற்பாடுகளும் அதிகரித்துவருவதைக் காணக் கூடியதாகவிருக்கிறது.

அரசியல் கட்சிகள் மட்டுமல்லாமல் தனிப்பட்ட சிலரும் கூட திடீரென பொது மக்கள் மீது-குறிப்பாக இடம்பெயர்ந்து வாழும் மக்கள் மீதும் அதிக அக்கறைகாட்டத் தொடங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் வெளிவரும் பத்திரிகையொன்றின் அதிகாரியொருவரும் தேர்தலில் குதிக்க ஆசைப்படுகிறார் என்ற வதந்தியும் பரவலாக அடிபடுகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு யாழ் மாவட்டத்தில் மக்கள் சேவையில் நீண்ட காலமாக இதய சுத்தியுடன் பணிபுரிந்துவரும் ஓர் அரசியல் கட்சிமீது அவதூறுகளை வேண்டுமென்றே இப்பத்திரிகை பிரசுரித்து வருவதைக் காணக்கூடியதாகவிருக்கிறது.

கொழும்பிலிருந்து வெளியாகும் தமிழ்ப் பத்திரிகைகள் யாழ்ப்பாணத்திற்கு வந்து சேர்வதில் தடங்கல் ஏற்பட்டுள்ள நிலையில் 'விறால் இல்லாத குளத்துக்கு கொரட்டை இறாஜா' என்பதுபோல் குறிப்பிட்ட இந்தப் பத்திரிகை மக்களைத் தவறானவழியில் இட்டுச் செல்வதை மக்கள் அவதானிக்காமலில்லை.

## நம்பிக்கையில்லாத் தீர்மானம்

(கண்டி நிருபர்)

மத்திய மாகாண முதலமைச்சர் திரு.நந்தமித்திர ஏக்கநாயக்காவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் மத்திய மாகாண சபையில் கொண்டுவரப்பட்டுள்ளது.

சொத்துக்கள், வளங்கள், நிர்வாகமும் அரசசேவையும் அதிகார துஷ்பிரயோகம், அபிவிருத்தி குறைதல், மாகாண சபையை தவறான வழியில் இட்டுச் சென்றமை, பொதுமக்களின் நலன் புரிச்செயல் ஆகிய அம்சங்களில் இடம்பெற்றுள்ள சீர்கேடுகள் பற்றிய குற்றச்சாட்டுக்களின் பேரிலேயே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது.

மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் திரு.கெஹலிய ரம்புக்வெல்ல பிரஸ்தாப தீர்மானத்தை சபையில் முன்மொழிய முன்னர் முதலமைச்சர்கள் திரு.டபிள்யூ.பீ.பீ.திசாநாயக்க வழிமொழிந்திருக்கிறார்.

இந்தத் தீர்மானம் குறித்து விவாதிக்க இன்னும் திகதி குறிப்பிடப்படவில்லை. சபைத் தலைவர் திரு.மகிந்த அபயகோன் முன்னிலையில் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டது.

மத்திய மாகாணசபையில் இப்போதைய உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 58.

## மட்டக்களப்பில் புலிகளின் தாக்குதல்கள் அதிகரிப்பு

மட்டக்களப்பின் புறநகர்ப் பகுதிகள் சிலவற்றில் ஆங்காங்கே சிறு சிறு தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

பாதுகாப்புத் தரப்பினருக்குச் சவால் விடுக்கும் விதமாக ஊடுருவித் தாக்கி விட்டுத் தப்பியோடும் முயற்சியினால் படையினர் சீற்றமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் படையினர் காவல் நின்ற பாதுகாப்பு எல்லைக்குள்ளே ஊடுருவி ஓட்டோ வண்டியில் வந்து தாக்கி விட்டுப் புலிகள் திரும்பியுள்ளனர்.

இச்சம்பவத்தில் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டார். அவரது துப்பாக்கியும் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. மற்றொரு படைவீரர் காயமடைந்தார்.

ஓட்டோ வண்டி கைவிடப்பட்ட நிலையில் பின்னர் கண்டெடுக்கப்பட்டது. சாரதி கைது செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டன. இச்சம்பவம் கடந்த 08ம் திகதி காலை நடந்தது.

மறுநாள் நள்ளிரவுக்குச் சற்று முன்னர் ஓட்டமாவடி முஸ்லிம் நகருக்குள் பொலிஸார் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது. இதில் 4 பொலிஸார் காயமடைந்தனர்.

ஓட்டமாவடி மத்தியில் முஸ்லிம் ஊருக்குள் உள்ள ஹஸ்ரத் வீதிச் சந்தியல் இச்சம்பவம் இடம்பெற்றது.

வழமையாக முஸ்லிம் பகுதிக்குள் தாக்குதல்களை எதிர்பார்த்திராத பொலிஸார் திடீரெனத் தாக்கப்பட்டதினால் அதிர்ச்சியடைந்துள்ளனர். சம்பவத்தின் பின்னர் அப்பகுதி முஸ்லிம்கள் தீவிரமாக விசாரணைக் குட்படுத்தப்பட்டனர். ■

## சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தங்கள்

அத்தியாவசியப் பொருள் பண்டங்களின் விலைகள் பல மடங்கு அதிகரித்துள்ளதனால் வாழ்க்கைச்செலவு சமாளிக்க முடியாதளவு உயர்ந்துள்ளது.

அதிகரிக்கப்பட்டுள்ள பொருட்களின் விலை உயர்வுக்கேற்ப தமது சம்பளத்தையும் அதிகரிக்குமாறு கோரிக்கைகள் வலுக்கத் தொடங்கியுள்ளன.

இதன் நிமித்தம் நாடளாவிய ரீதியில் பல்வேறு தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து வேலை நிறுத்தப் போராட்டத்தை நடாத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே பல அடையாள வேலை நிறுத்தங்களும் இடம்பெற்றுவிட்டன.

பாராளுமன்ற ஆயுட்காலம் முடிவடைவதற்கும்,பொதுத் தேர்தலுக்கும் மிகச் சொற்ப காலமே இருக்கும் இத்தறுவாயில் அரசுக்கு இத்தகைய நெருக்கடி நிலை தோன்றியுள்ளது.

நாடளாவிய ரீதியில் உண்ணாவிரதப் போராட்டங்கள், மறியல் போராட்டங்கள், பொதுவேலை நிறுத்தங்கள் தோன்றினால் அது அரசுக்குப் பெரும் நெருக்கடியாக இருக்கும் என்று அவதானிகள் கருதுகிறார்கள்.

## மூதூரில் இசை, நடன வகுப்புக்கள் தொடர ஏற்பாடுகள்

மூதூர் கல்வி வலயத்தில் சங்கீதம், நடனம் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாமையினால், தொண்டர் அடிப்படையில் இரு சங்கீத ஆசிரியர்களும், ஒரு நடன ஆசிரியரும் நியமிக்கப்பட்டு, கிழமையில் இறுதி நாட்களில் மூதூர் புனித அந்தோனியர் மகா வித்தியாலயத்தில் காலை 10.00 மணி தொடக்கம் கற்பிக்கப்பட்டு வந்தது.

தற்போது நிதியற்ற நிலையில் மூதூர் கோட்ட கல்வி வலயம் இப்பணியை நிறுத்தியுள்ளதால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் ஈ.பி.டி.பி. மாவட்ட அமைப்பாளர் த.புஸ்பராசாவிடம் முறையிட்டனர்.

மேற்படி அமைப்பாளரிடம் முன்வைத்த இக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா (பா.உ) அவர்கள் தொடர்ந்தும் மாணவர்களுக்கு கற்பிக்குமாறும், ஆசிரியர்களுக்குரிய மாதாந்த வேதனத்தை கட்சியின் நிதியிலிருந்து வழங்க உறுதியளித்துள்ளார், எனத் தெரியவருகிறது.

சுமார் 150 மாணவர்கள் ஆண்டு நான்கு தொடக்கம் உயர் தரம் வரை இப்பணியால் நன்மை பெறுகிறார்கள்.

மூதூர் கல்வி வலயத்தைக் கொண்ட கிராமங்களான சம்பூர், கேனையூர், கட்டை பறிச்சான், கிளிவெட்டி, ஈச்சிலம்பற்று, வெருகல், முகத்துவாரம் போன்ற மூதூர் பிரதேச அனைத்துக் கிராமங்களும் இதனால் நன்மை பெறும். ■

## வவுனியாவில் பரவலான தாக்குதல்கள்!

வவுனியா நகரிலும், சூழ உள்ள பிரதேசங்களிலும் அண்மைக் காலமாகப் பரவலான தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன.

இதனால் பலத்த இழப்புகளும் ஏற்பட்டுள்ளன. அரச சொத்துக்கள் நாசமாக்கப்படுவது ஒரு புறமிருக்க, உயிர்ச் சேதங்களும் அதிகரித்து வருகின்றன.

கைது செய்யப்படுவோரின் தொகையும் காணாமல் போவோரின் கதையும் மீண்டும் தொடர்கிறது.

மின்மாற்றித் தகர்ப்பு, பஸ்கள் குண்டு வைத்துத் தாக்கி அழிப்பு போன்ற அரச உடமைகளை அழிக்கும் தாக்குதல்களும், மற்றொருபுறம் பாதுகாப்புத் தரப்பினர் மீதான தாக்குதல்களும் அதிகரித்துள்ளன.

கடந்த 09ஆம் திகதி மன்னார்-வவுனியா வீதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது புலிகள் தாக்கியதில் ஒரு அதிகாரியும் 4 சிப்பாய்களும் பலியானார்கள். 8 பேர் காயமடைந்தார்கள்.

பெரிய தம்பளைக்குத் தென்புறமாக வவுனியா பிரமனாலங்குளத்தில் பொழுது புலரும் போது இத்தாக்குதல் இடம்பெற்றது.

வவுனியா-மன்னார் வீதியில் இடம்பெற்ற இன்னுமொரு சம்பவத்தில் 10 பொலிஸார் காயமடைந்தார்கள். அவர்களில் பெரும்பாலானோர் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இச்சம்பவமும் அன்று காலை எட்டு மணியளவில் இடம்பெற்றது. வவுனியா-மன்னார் வீதியிலுள்ள "பிரிவு-டி' பொலிஸ் காவலரனே அன்று தாக்கப்பட்டது.

## யுத்தத்தில் கொல்லப்பட்ட சீருடையினர் விவரங்கள்

(கண்டி நிருபர்)

வடக்குகிழக்கு யுத்தம் தொடர்பாக கொல்லப்பட்ட முப்படைகளினதும் பொலீஸ் படையினரதும் வீரர்களின் மொத்த எண்ணிக்கை 18,700 என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவர்கள் பற்றிய வாழ்க்கை மற்றும் உறவினர்கள் தொடர்பான முழு விபரங்களும் கட்டுகஸ்தோட்டையில் நிர்மாணிக்கப் பட்டுள்ள படைவீரர் நினைவகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் 1600 முஸ்லிம் வீரர்களும் இடம்பெறுகின்றனர். மற்றும் தமிழர், கிறிஸ்தவர்கள் ஆகியோரின் பெயர் விபரங்களும் இங்கு சேகரித்து வைக்கப் பட்டிருக்கின்றன.

இவ்வகில இலங்கை (ரனவிரு பதனம) யுத்த வீரர் அமைப்பகத்தில் கொல்லப்பட்ட படைவீரர்களின் படங்களும் அவர்களது வாழ்க்கை பற்றிய சுயவிபரக்கோவைகளும் இங்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கின்றன.

இதே வேளையில் மாண்ட 18,700 படைவீரர்களின் குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரண உதவியும் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## தமிழ்க் கைதிகள் விடுதலை நிறைவேறாத வாக்குறுதிகள்!

1994ம் ஆண்டு பொதுத் தேர்தலிலும் 1999ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போதும் தமிழ் மக்களின் வாக்குகளைக் குறிவைத்து பலவகையான வாக்குறுதிகள் வாரியிறைக்கப்பட்டன. அவற்றில் எவையும் உருப்படியானதாக நிறைவேற்றப்படவில்லை.

கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டிருக்கும் தமிழ்ச் சிறைக் கைதிகளுக்கெதிரான வழக்குகள் ஜனவரி மாத முடிவிற்கிடையில் தாக்கல் செய்யப்படாத பட்சத்தில் அவர்களைப் பெப்ரவரி மாதத்திற்குள் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் பிரசாரத்தின் போது கூறியிருந்தார். இதனைப் பெரும் பாலான தமிழ் மக்கள் நம்பியிருந்தனர்.

ஜனாதிபதியால் வாக்குறுதியளிக்கப்பட்டு எட்டு மாதங்கள் கழிந்து விட்டபோதும் இன்னமும் எவருக்கும் விடுதலை கிடைக்கவில்லை. அதற்குப் பதிலாக கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்படுவோரின் தொகையும் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

மீண்டும் இப்பொழுது புதிய வாக்குறுதிகளுக்கான தேர்தல் காலம் நெருங்கியிருக்கிறது.

# டென்னிஸ் உலகை அசத்தும் தமிழ் வீராங்கனை



இவர் பெயர் சோனியா ஜெய சீலன். கனடாவில் வசித்து வரும் இந்தத் தமிழ்ப் புயலின் பூர்வீகம் இலங்கை. இலங் கையைச் சேர்ந்த டென்னிஸ் பயிற்சி யாளர் ரெஜி ஜெய சீலனின் மகள் தான் சோனியா.

இலங்கையில் ஏற்பட்ட இனப் பிரச்சனை காரண மாக ரெஜி ஜெய சீலன் பல வருடங் களுக்கு முன் கன டாவில் குடியேறிய வர். இவரது மனைவி ரமணி.

அண்மையில் நடந்து முடிந்த விம் பிள்டன் டென்னிஸ் போட்டிகளின் போது தமிழ் வீராங்கனை ஒருவர் அசத்தலான வெற்றிகளைப் பெற்றுப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார்.

குறிப்பாக விம்பிள்டன் போட்டியின் 3ம் நாளன்று டென்னிஸ் தரவரிசையில் நான்காம் நிலையில் இருக்கும் கொஞ்ஜிதா மாட்டினஸைத் தோற்கடித்தார். இந்தத் தமிழ் வீராங்கனை.

இரு கைகளா லும் மட்டையைப் பிடித்து ஆடுவதில் வல்லவராக இருக்கிறார் சோனியா. முன்பு இப்படி ஆடுவதில் வல்லமைப் படைத்தவராக இருந்தவர் மோனிகா செலஸ்.

புத்தாயிரமாம் ஆண்டின் தொடக்கத்தில் சோனியா டென்னிஸில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறார். இவ்வருடம் ஜனவரி மாதம் அவுஸ்திரேலிய ஒப்பன் டென்னிஸ் போட்டியில் முதல் சுற்றில் ஃபிரான்ஸின் நத்தாலியேஸை நேர் செட்களில் வெற்றார்.

பின் ஏப்ரல் மாதம் அமெரிக்காவின் அமீலியா தீவில் நடந்த போட்டியில் இவ்வருட விம்பிள்டன் சாம்பியனான வீனஸ் வில்லியம் ஸைத் தோற்கடித்தார்.

தொடர்ந்து கொலம்பியாவின் பொகாட் டாவில் நடந்த போட்டியின் இறுதிவரை சோனியா முன்னேறினார். பின் பாரிஸ் நகரில் நடந்த ஃபிரெஞ்ச் ஒப்பன் போட்டியில் முன்னணி வீராங்களைகளில் ஒருவரான ஸ்பெயினின் அரண்ஸா சான்சென் விகாரி யோவை எதிர்கொண்டு அவரைத் திணறடித்தார் சோனியா. எனினும் போட்டி யில் சான்செஸ் வெற்றிபெற்றார்.

சமீபத்திய விம்பிள்டன் போட்டியில் கொஞ்ஜிதா மார்ட்டிஸை வென்று பரபரப்பை ஏற்படுத்தினார்.

தற்போது கனடாவுக்காக விளையாடி வரும் சோனியா, தனது தந்தையின் ஊக்கத்தி னால் தான் டென்னிஸ் வீராங்கனையாக வலம் வருவதாகத் தெரிவித்துள்ளார்.

"என்னை டென்னிஸ் துறையில் புகுத் தியவர் என்தந்தைதான். ஆறாவது வயதில் இருந்து என்னை வளர்த்தார். இப்போது நான்கு ஆண்டுகளாகத்தான் தனியாக வாழ்ந்து வருகிறேன். வீனஸ் வில்லியம்ஸ் மற்றும் கொஞ்ஜிதா மார்ட்டிஸை வென்ற துமே எனது மிகப் பெரிய வெற்றிகள் என்கிறார்.

ஆனால் டென்னிஸ் உலகில் இந்தியா வின் ராமநாதன் கிருஷ்ணன் மற்றும் அவரது மகன் ரமேஷ் கிருஷ்ணன், அமிர்தராஜ் சகோதரர்கள் போன்ற தமிழர்கள் பிரகாசித் தார்கள்.

பெண்கள் டென்னிஸ் உலகில் பிரகா சிக்கும் ஒரே தமிழ் வீராங்கனை சோனியா மட்டுமே.

## இன்னொரு தமிழ் வீரன்



கனடாவில் குடியேறி டெனி ஸ்ஸில் பர பரப்பை ஏற் படுத்தி வரும் சோனியா ஜெய சீலனைப் போல், இன்னொரு தமிழ் வீரனும் கனடாவில் பர பரப்பை ஏற்படுத் தியிருக்கிறார்.

கஜன் சிவ பாலசிங்கம் என்ற இந்தச் சிறுவனின் வயது ஆறு. இலங்கையில் இருந்து கனடாவுக்குக் குடி யேறியிருக்கும் இச்சிறுவன் சாதனை படைத் திருப்பது 'கோல்ஃப்' விளையாட்டில்.

கனடா சார்பாக சர்வதேச கோல்ஃப் விளையாட்டில் பங்குபெற 9 சிறுவர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றனர். அவர்களில் மிகவும் வயது குறைந்தவர் கஜன். 2ம் வகுப்பு படிக்கிறார்.

கோல்ஃப் விளையாட்டில் உலகப் புகழ் பெற்றவர் டைகர் வுட். டைகர் வுட்டின் வாரிசு என்றும் 'லிட்டில் டைகர்' என்றும் கஜனைப் பத்திரிகையாளர்கள் புகழ் கின்றனர்.

கஜன் தனது 4 வயதிலிருந்தே கோல்ஃப் விளையாடி வருகிறார்.


விளம்பரப் பகுதி

உடன தேவை **வீட்டுப் பணிப்பெண்**

40 வயதிற்கு உட்பட்ட குடும்பப்பொறுப்பற்ற, நன்கு சமைக்கத் தெரிந்த, மற்றும் வீட்டு வேலைகள் செய்யக் கூடிய பணிப்பெண் உடன் தேவை. உணவு, தங்குமிடம், உடை, இலவசம். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும் சுமாரான படிப்பறிவு விரும்பத்தக்கது.

நேரில் வரவும்

AMI

**No: 36, Stratford Terrace**
**Kirulapone, Colombo - 06**
**T.P. 597463 / 597462**


## 8ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 04 10 1938

உதிர்வு 12 08 1992

**ரா.இராஜகோபால்**

பாசத்தை பொழிவதற்கு பாரினிலே உதித்த பொக்கிஷமே நீங்கள் அன்பு காட்டி அறிவூட்டி அரவணைத்து வளர்த்து எம்மையெல்லாம் பரிதவிக்கவிட்டு பிரிந்து எட்டாண்டு சென்றன. காலத்தால் அழியாத உங்கள் பாச நினைவுகளை சுவாசித்து வாழ்ந்து கொண்டிருக்கும்

அம்மா, மனைவி, சகோதரர், பிள்ளைகள் மருமகன், பேரப்பிள்ளைகள்


**தேவை** நல்ல தோற்றமும் சிறப்பாக பேசும் ஆற்றலும் கொண்ட வரவேற்பாளர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு: **Studio Chhaya** 40 1/1, Galle Road, Wellawatta.



**மனோதத்துவ வைத்தியம்**

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் ஆகஸ்ட் 22 முதல் 27 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11.
T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 609388.

**கல்முனையில் செப்டம்பர் 02,03 திகதிகள்.**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் செப்டம்பர் 09,10 திகதிகள்.**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)


VANNIINN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21405, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM
NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.





**மலையாள மாந்திரிகம்**



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.


தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது ஃபெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
Dr.P.K. SAMY, J.P. (J.D.G.A.N.) HON. PROF. (I.U.M.A.)
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHJENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941344831.
Tel-00941466271.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-466620, 01-466820


## கண்ணீர் அஞ்சலி



மலர்வு 18 07 1960

உதிர்வு 26 07 2000

**துரைராசா (துரை)**

முல்லைத்தீவைச் (கல்விப்பாடு) சேர்ந்த துரைராசா (துரை) என்பவர் 26.07.00ல் இந்தியாவில் அகாலமரணமானார்.

இவர் காலம் சென்ற அந்தோனிப்பிள்ளை தையலி அவர்களின் அன்பு மகனும், இன்பராணியின் அன்புக்கணவரும், சதீஸ், பிருந்தா, அர்ச்சனா அவர்களின் அன்புத்தந்தையும் காலம் சென்ற வள்ளிப்பிள்ளை, குஞ்சுப்பிள்ளை வேலாயுதம் (இரத்தினம்), நகுலேஸ்வரி, பொன்னம்மா, தங்கம்மா, நல்லம்மா, துரைரத்தினம் (சித்திரா) ஆகியோரின் அன்பு சகோதரனும், இராசதுரை, சோமசுந்தரம் (காலம்சென்ற), இராசமலர், இராசலிங்கம் இலட்சுமணன், ஆனந்தவேல், சோதிசிவம், யமுனாதேவி. ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 27.07.00 மாலை 5 மணிக்கு இந்தியாவில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*தகவல்: சகோதரன் துரைரத்தினம் (Swiss) Tel. 041-2600483*
*பெறாமகன் ரட்ணராஜா (குட்டி) (Swiss) Tel. 0313336470.*


உலகப் புகழ்பெற்ற

**எக்ஸ் ஒயில்**

TRADE MARK

- காய்ச்சல்
- தலைச்சுற்று
- ஜலதோஷம்
- மூக்கடைப்பு
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை
- தலைவலி
- தலைப்பாரம்
- இருமல்
- பல்வலி



Rs.25/= Only (3.ml)

**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி**

எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்

**SINGHA HOLDINGS (PVT) LTD**
14,Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
T.P : 888214 Fax : 682984


## 1வது பிறந்த நாள் வாழ்த்து

செல்வி சி.கிருத்திகா

24 08 2000



அரியாலை நவாலியை சேர்ந்த சிவக்குமார்-அனுஷா தம்பதிகளின் செல்வப் புதல்வி கிருத்திகா தனது 1வது பிறந்த நாளை நோர்வேயில் உள்ள தனது இல்லத்தில் 24.08.2000 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். கிருத்தி குட்டியை அன்பு அப்பா, அம்மா, இலங்கையில் உள்ள அப்பப்பா இரணசிங்கம் அப்பம்மா சர்க்குணவதி, அத்தை ரேணுகா, அம்மப்பா கந்தையா, அம்மம்மா முத்துமணி, அன்ரிமார்-வதனி, கயோந்தினி, கமலா, கிருபாகுடும்பம் வவுனியா, பவளம்மாமா குடும்பம்.(பிரான்சில் உள்ள) உதயகுமார், உதயராணி, உதயராஜா, மலர்விழி, சாந்தகுமார் வதனி, ஜெயந்தன், கவிதா குடும்பத்தினர், (லண்டனில்) அகிலா நந்தன், பரமலிங்கம் மாமா, பெரியப்பா நாதன், சாந்தினி குடும்பம், அண்ணாமார், தர்மிஷன், கவிப்பிரியன் அக்காமார், பிரியதர்ஷினி, கபிலினி டிலானி, தாட்சாயினி மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் கிருத்தி குட்டியை கண்ணகை அம்மன் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

*தகவல் : கிருபாகரன் சித்தா-வவுனியா.*


வீடியோ கசற்றில் இருப்பதை C.D.க்கு மாற்றுங்கள்

ஸ்ரூடியோ **சாயா**

40 1/1, காலி வீதி, வெள்ளவத்தை.
T.P. 594492

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தீர்வுத் திட்டத்தில் அடுத்த நகர்வு?

இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கான பெருமுயற்சியாக காட்டப்பட்ட தீர்வுத் திட்டமும் அம்போவென்றாகி விட்டதையடுத்து, அடுத்தது என்ன என்பதே, அக்கறைகொண்ட அரசியல் வட்டாரங்களிடையே மட்டுமன்றி இப் பிரச்சனையின் பாத்திரவாளியான தமிழ்ப் பேசும் மக்களதும் கவலைக்குரிய கேள்வியாகும்.

இந்த முயற்சியின்தோல்வி, வெறுமனே ஒரு விளையாட்டுப் போட்டியில் ஏற்பட்ட தோல்வியைப்போல் 'போனால் போகட்டும், அடுத்தமுறை பார்க்கலாம்', என்று விட்டு விட்டுப் போகக்கூடிய விடயமல்ல-குறிப்பாக சிறுபான்மையினருக்கு.

இம் முயற்சியைப் பொறுத்தவரையில் பெரும்பான்மையினரிடையே ஏற்பதா, எதிர்ப்பதா என்ற இரு தெளிவான நிலைப்பாடுகள் தான் இருந்தன. ஆனால் சிறுபான்மையினரிடையே அப்படியல்ல. ஏற்றாலும் சிக்கல்; எதிர்த்தாலும் சிக்கல் என்ற நிலையே இருந்தது.

ஏற்பதானால், இத் தீர்வு போதுமானதா என்ற கேள்வி. எதிர்ப்பதானால் இந்தத் தீர்வையும் கைவிட்டுவிட்டால் இனி என்னாவது என்ற கேள்வி. இங்கு எதிர்ப்பவர்களுக்கு அதிக சிரமம் இல்லை. ஏதாவது போதாதென்றால் எதிர்த்துவிடலாம். கடைசிச் சொட்டு திருப்தி ஈட்டப்படும்வரை நிராகரித்தபடி இருக்கலாம்.

ஆனால் ஏற்பவர்கள் பக்கத்தில் அந்தரமான நிலமை ஒன்று காணப்படுகிறது. அதாவது தாம் ஏற்பவற்றைக் கொண்டு தமிழ்ப் பேசும் மக்களின் குறைந்த பட்ச அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய முடியும் என்ற நம்பிக்கையை அவர்கள் நிலைநிறுத்த வேண்டியதுடன் தாம் விட்டுச் செல்பவற்றைத் திரும்ப ஈட்டிக் கொள்ள முடியுமென்றோ அல்லது அவற்றை விட்டுக் கொடுப்பதால் பாதிப்பில்லையென்றோ சமாதானம் தெரிவிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

இப்போது சந்திரிகா அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தை விடுதலைப் புலிகள் ஏற்கெனவே நிராகரித்து விட்டார்கள். அவர்கள் இத் தீர்வுத் திட்ட முயற்சியின் ஆரம்பத் திட்டமான 1995ல் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்திலிருந்தே இதுவரை முன்வைக்கப்பட்ட சகலதையும் நிராகரித்திருந்தார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியோ 1995ல் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தை ஒரு தீர்வுக்கான அடிப்படையாக ஏற்கலாமெனக் கருத்துக் கூறியிருந்த போதிலும், பின்னர் 1997ல் முன்வைககப்பட்டவற்றை வெளியுலகுக்கு ஏற்க மறுத்தவர்களாகக் காட்டிக் கொண்டதுடன் தற்போது முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தை நிராகரித்துள்ளது. எனினும் 1997 தீர்வுத் திட்டத்தை வகுப்பதில் திரைமறைவில் இருந்து முழுமுச்சாகப் பங்காற்றியவர் கூட்டணியின் முக்கிய பிரமுகரான காலஞ்சென்ற கலாநிதி நீலன் திருச்செல்வம் தான். கூட்டணியைப் பொறுத்தவரை இரண்டு வழத்தாலும் இலாபமீட்டுகின்ற அரசியல் அணுகுமுறை ஒரு கைவந்த கலையாகவே இருந்து வருகிறது. அதாவது ஒருபுறம் அரசாங்கத்தோடு இரகசியமாகச் சேர்ந்து வேலை செய்வது, மறுபுறம் வெளியுலகுக்கு தாங்கள் எதிர்ப்பவர்களாகக் காட்டிக் கொள்வது.

ஒருபுறம் அரசாங்கத்துக்கு தாங்கள் ஆதரவாக நடப்பதாகக் காட்டி எடுக்கக்கூடிய அனுகூலங்கள் யாவற்றையும் எடுத்துக் கொள்வது. மறுபுறம் வெளிப்பார்வைக்குத் தம்மை கடுமையான எதிர்ப்பாளர்களாகக் காட்டிக் கொள்வது.

நீலன் விடயத்தில் இதனை நாம் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது. நீலன் அரசியல் அமைப்புச் சட்டத்தை வகுப்பதில் அரசாங்கத்துடன் சேர்ந்து வேலை செய்து கொண்டிருக்கும்போது ஜோசப் பரராசசிங்கம் மறுபுறத்தில் எதிர்ப் பிரசாரம் செய்துகொண்டிருந்தார். ஜோசப் பரராசசிங்கம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வருகின்றவேளை நீலன் புலிகளின் அரசியலை சர்வதேச ரீதியில் முறியடிக்கும் வகையில் லக்ஷ்மன் கதிர்காமரை அரசாங்கத்துக்கு வெளிநாட்டமைச்சராக சிபாரிசு செய்து கொடுத்திருந்தார்.

நீலனை வைத்துக்கொண்டு தாம் அரசாங்கத்துக்கு அனுசரணையாக இருப்போம் என்ற நம்பிக்கையை ஊட்டி காரியங்களைச் சாதித்து வந்த கூட்டணி, நீலனின் மறைவின் பின் இப்போது சம்பந்தரை அதற்குப் பயன் படுத்திவருகிறது.

இப்போது பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட உத்தேச அரசியலமைப்புச் சட்டத்தை ஆதரிப்பதா இல்லையா என்ற விடயத்திலும் கூட்டணி அதே இரட்டைத்தன்மை விளையாட்டை மேற்கொண்டது. ஜோசப் பரராசசிங்கம் இதை ஏற்க முடியாதெனப் பிரசாரம் செய்துகொண்டிருக்க, சம்பந்தன் இதை ஆதரிப்பதாக ஜனாதிபதியிடம் காட்டிக் கொண்டார். அத்துடன் நில்லாது அமைச்சர் அஷ்ரப்பிடம், தந்தை செல்வா உயிருடன் இருந்திருந்தால் இந்தத் தீர்வுத்திட்டத்தை ஆதரிக்கவே செய்திருப்பார் என்று கூறியிருந்தார். அமைச்சர் அஷ்ரப் இதனைப் பகிரங்கமாக அம்பலமாக்கியிருந்தார்.

இதேவேளை இவ்வரசியலமைப்புத் திட்டம் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடும் வரை கூட்டணி தனது மவுசைக் கூட்டிக்கொள்ளும் வகையில் அரசாங்கத்துடன் ஒருபக்கத்தில் உயர் மட்ட மந்திர ஆலோசனைகளை நடத்தி வந்தது. அம் மந்திர ஆலோசனைகளில், சில திருத்தங்களை முன்வைப்பதாகவும் அவற்றை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுவதாகக் கூறி இறுதியில் இத் தீர்வுத் திட்டத்தை ஆதரிக்கும் முடிவை வெளிப்படுத்தலாமெனவும் கூட்டணி முயன்றது. ஆனால் விடுதலைப் புலிகள் பக்கத்தில் மிகக் கடுமையாக நின்றதால் ஒத்தபடி இத்தகைய நிலைப்பாட்டை எடுக்க முடியாத நிலமை கூட்டணிக்கு ஏற்பட்டது. அதனால் அரசாங்கத்தை ஓரளவுக்கேனும் திருப்திப் படுத்தும்நோக்குடன் கூட்டணியின் ஒருசிலர் ஆதரிப்பதாகவும் இன்னொரு சிலர் எதிர்ப்பதாகவும் காட்டிக் கொண்டது. எந்த ஒரு வாக்குத் தமக்கு சாதகமாக வந்தாலும் ஏற்கத் துடித்துக் கொண்டிருந்த அரசாங்கத்துக்கு கூட்டணியிலிருந்து ஒன்றிரண்டு வாக்குகள் தமக்குக் கிடைக்குமானாலும் அது அத் தருணத்தில் பேருதவியாக இருக்குமென எண்ணும் நிலை இருந்தது. அதனால் கூட்டணி விட்ட கயிற்றை நம்பி ஜனாதிபதி தமக்கு குறைந்தது இரண்டு வாக்குகளாவது கூட்டணியிலிருந்து கிடைக்குமென்று வெளியே தெரிவித்து வந்தார்.

இதேவேளை இத் தீர்வுத் திட்ட விவகாரத்தில் கூட்டணி இன்னொரு விடயத்தையும் பிரதானமானதாகக் கருதியிருந்தது. அதாவது ஐ.தே.க.விலிருந்து பலர் அரசாங்கத்துக்குச் சார்பாக வாக்களிக்கப் போவதாக பலத்த வதந்தி நிலவியதுடன் அதற்கான பரபரப்பான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அவ்வாறு மாறி வாக்களித்து இத் தீர்வுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டால், கூட்டணி அதனை எதிர்க்கும் பட்சத்தில், அதில் கூட்டணிக்கு இடம்கிடைக்குமா என்ற கேள்வி தலைதூக்கியிருந்தது.

உருவாக்கப்படும் நிர்வாகங்களில் அது தனது பிடியை வைத்துக் கொள்ளாவிட்டால் அது செல்லாக் காசாகிவிடும் ஆபத்தை உணர்ந்திருந்தது. அதனால்தான் புலிகள் எதிர்த்த போதிலும் யாழ் உள்ளூராட்சி சபைகளில் பிடிவாதமாகப் போட்டியிட்டது. (அதனால் தமது இரு மேயர்களைப் பலிகொடுத்ததுடன் உருப்படியாக எதையும் அங்கு செய்ய முடியவில்லை என்பது வேறு விடயம்.)

இவ்வாறே உத்தேச இடைக்கால நிர்வாக சபையிலும்அது பங்குபற்றாது விட்டுவிட்டால், அதனைத் தேடுவார் இல்லாது போய்விடும் என்ற அச்சம் அதற்கு இருந்தது. ஆனால் இப்போதிருக்கும் நிலையில் இடைக்கால நிர்வாக சபைக்கு ஒத்துக்கொண்டாலும் அதற்கு ஆபத்து. ஏனெனில் பாராளுமன்றப் பெரும்பான்மையின்படி அச் சபையின் தலைமைப் பீடம் ஈ.பி.டி.பி.க்கே வாய்க்கும். ஈ.பி.டி.பி.யின் கீழ் இரண்டாம் கட்சியாக இருக்க கூட்டணிக்கு விருப்பமில்லை.

அதனாலேயே முன்னர் பலதடவை வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கான இடைக்கால நிர்வாக சபையை அமைப்பது குறித்து அரசாங்கத்திடம் ஈ.பி.டி.பி. கோரி வந்த போதெல்லாம் கூட்டணி பகிரங்கமாக எதுவும் காட்டிக் கொள்ளாமல் அரசாங்க மட்டத்தில் தன் பலத்த எதிர்ப்பை தெரிவித்து அம் முயற்சியை தடுத்து வந்தது.

எனவே இடைக்கால நிர்வாக சபைக்கு நாசுக்காக கயிறு கொடுத்துக் கொண்டு வந்த கூட்டணி இப் புதிய தீர்வுத் திட்டத்தில் இடைக்கால நிர்வாகசபை ஏற்பாட்டைக் கண்டதும் உஷாரடைந்தது. முட்டாள்தனமாக இத் தீர்வுத் திட்டத்தை ஒட்டுமொத்தமாக எதிர்த்தால் பின்னர் தமது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்குத் தடுமாற வேண்டியிருக்கும் என அதற்குப் புரிந்திருந்தது.

ஆனால் அதன் வெளிப்படையான அரசியலுக்கு, 'எதிர்ப்புக் காட்டும்' நிலைப்பாட்டை மேற்கொள்வது தவிர்க்க முடியாததாக இருந்தது. ஏனெனில் கூட்டணிக்குள் பலம்வாய்ந்த பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கும் மட்டக்களப்பு மாவட்டப் பிரதிநிதிகள் அங்கு புலிகளை மீறிச் செயற்பட முடியாதவர்களாக இருந்ததுடன் எதிர்வரும் தேர்தலில் ஈடுபடுவதற்கும் கூட்டணி புலிகளின் அனுமதியை எதிர்நோக்கியிருந்தது.

எனவே எதிர்ப்புக் காட்டும்போது அரசாங்கத்தைப் பகைக்காத ஏற்பாடொன்றுடன் எதிர்ப்புக் காட்டுவதே உசிதமான தந்திரமாக கூட்டணிக்குப் பட்டது. அதனால் அதற்கு ஐ.தே.க.விலிருந்து அரசாங்கத்துக்கு மாறி வாக்களிக்கப்போகிற பாராளுமன்ற உறுப்பினர்கள் எத்தனைபேர் என்ற கணிப்பும் தேவையாக இருந்தது.

ஏனெனில் அப்படி மாறி வாக்களிப்பவர்கள் தொகை அரசியல் யாப்பை நிறைவேற்றுவதற்குப் பாராளுமன்றத்தில் தேவைப்படும் 150 வாக்குகளுக்கு மட்டுமட்டாகத்தான் இருந்தால், கூட்டணியின் ஒன்றிரண்டு வாக்குகளால் தான் இது தோல்வியடைந்தது என்ற பழியை அரசாங்கத்திடம் அது பெற நேரிடும். அதனால் அவ்வாறான நிலைமையை உத்தேசித்து மட்டுப்படுத்திய அளவில் ஓரிரு வாக்குகளால் ஆதரவு வழங்க அது தயாராக இருந்தது. அதற்கு வசதியாக கட்சியின் நிலைப்பாடு என்ன என்பதை இறுதித் தருணம்வரை கூட்டணி வெளியிடவில்லை.

ஆகஸ்ட் 08ம் திகதி செவ்வாய்க்கிழமை இத் தீர்வுத் திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்படவிருந்தது. ஆனால் திங்கட்கிழமை இரவே ஐ.தே.க.வினர் இவ்வாறு ஊசலாடக்கூடிய தமது பாராளுமன்ற உறுப்பினர்களை குண்டுக்கட்டாகக் கட்டி வெளிநாடுகளுக்கு அனுப்பி விட்டார்கள். அனுப்பிய கையோடு விமான நிலையத்திலிருந்தே பட்சிகள் யாவும் பறந்து விட்டன என்ற செய்தியை தடுமாறிக் கொண்டிருந்த கூட்டணிக்குத் தெரிவித்தும் விட்டனர். அதனால் இனி இந்த விடயம் தோல்வியில் தான் முடியப் போகிறது என்பதை அனுமானித்துக் கொண்ட கூட்டணி இரவிரவாக நடத்திய கட்சித் தலைமைப்பீட[…]த்தில தமது கட்சி இத் தீர்வுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிக்கும் என்று அறிவித்தது.

ஆனால்இத் திட்டத்தை வாக்கெடுப்புக்கு விட்டால் நிறைவேறப் போவதில்லை என்ற நிலைமையைப் புரிந்துகொண்ட அரசாங்கம் அவ் வாக்கெடுப்பை ஒத்திவைத்தது. அவ்வாறு ஒத்தி வைத்ததும் கூட்டணிக்கு வேறுவிதத்தில் அனுகூலமாக இருந்தது. ஏனெனில் கூட்டணி கட்சி ரீதியாக இதை எதிர்ப்பதாக முடிவெடுத்தாலும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தனிப்பட்ட ரீதியில் ஆதரவளிக்க முடிவுசெய்திருந்ததாக அரசாங்கத்துக்குப் பூச்சுத்தக் கூடியதாக இருந்தது. கூட்டணிச் செயலாளர் சம்பந்தர் சிலரிடம் அபிப்பிராயம் கூறுகையில் கட்சி இப்படி முடிவெடுத்திருந்தாலும் நான் வாக்களிப்பில் எனது சொந்தக் கருத்தை வெளிப்படுத்தவே இருந்தேன் எனக் கூறியிருந்தார். ஆனால் அந்தச் சொந்தக் கருத்து எதுவென்று கூறவில்லை. எனினும் கேட்டவர்களுக்கு அது புரியாதிருக்க நியாயமில்லை. இத்தகைய இரட்டைத் தன்மை கூட்டணிக்கு ஆரம்ப காலத்திலிருந்தே பழகி வந்த அரசியல் கலையாகும். அதன் பேச்சிலும் செயலிலும் இந்த இரட்டைத் தன்மை எப்போதும் இருந்துகொண்டே இருந்தது.

மறுபுறம் இத் தீர்வுத் திட்டத்துக்கான பேரெதிர்ப்பு சிங்கள இனவாதிகளிடமிருந்து கிளம்பியது. வழமையாக ஒவ்வொரு தடவையும் தமிழ் பேசும் மக்களுக்கு ஏதாவது ஒரு தீர்வை வழங்க முற்படும்போதெல்லாம் கிளர்ந்தெழுந்து எதிர்த்து முறியடிக்கும் புத்த பிக்குகள் இம்முறையும் அதே காரியத்தில் இறங்கினர். இத் தீர்வு நிறைவேறினால் வடக்கு-கிழக்கிற்கு அதிகாரம் கிடைத்து சிங்கள மக்களுக்கும் பௌத்த மதத்துக்கும் அழிவுகாலம் ஏற்பட்டுவிடுமென அவர்கள் மக்களைப் பயமுறுத்த விளைந்தனர். பௌத்த மதமானது உலகில் இனபேதமற்ற சர்வப் பொதுவான மதமாக இருக்க, ஏன் இந்தியாவில் தமிழர்கள்கூட பௌத்த பிக்குகளாக இருந்திருக்க இவர்கள் இங்கே பௌத்த மதத்தை சிங்களவர்களின் நலனை மட்டும் சிந்திக்கும் குறுகிய நோக்கம் கொண்டதாக மாற்றியமைத்துக் கொண்டதோடல்லாமல் சிங்கள இனவாதத்துக்கான தலைவாசலாகவும் ஆக்கிக் கொண்டார்கள்.

இந்தத் தீர்வுத்திட்டத்தின் உள்ளடக்கம் தமிழ்பேசும் மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்கப் போதுமானதா என்ற சர்ச்சை ஒருபுறமிருக்க, இவர்கள் இதைக்கூட வழங்க விடாது தடுக்கக் கங்கணம் கட்டிக் கொண்டு வீதியில் இறங்கிவிட்டார்கள். வேடிக்கை என்னவென்றால் பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலியெடுத்தபடி இந்த நாட்டைச் சுடுகாடாக்கி வரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரக் கூடிய ஓர் அரசியல் தீர்வைக் காணுவதற்கான மனப் பக்குவத்தை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு வாய்ந்த மதத் தலைவர்களே அதற்கு மறுதலையாக தீர்வுக்குக் குறுக்கே படுத்து சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பது தான். அதாவது பலர் சாவதற்கு வழிவேண்டிச் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கும் சாதுக்கள் இவர்கள்.

இத்தகைய இனவாதம் மீண்டும் தலை தூக்கிய நிலையில் புரட்சிகர முகமூடிகளைப் போட்டுக்கொண்ட ஜே.வி.பி.யினர்கூட தம் சமத்துவப் போலி வேடத்தை உதறியெறிந்து விட்டுப் பச்சை இனவாதத்தைப் பகிரங்கமாகக் காட்டிக்கொண்டார்கள். எதிர்க்கட்சியின் சந்தர்ப்பவாதம் எப்போதும்போல் இம்முறையும் விளையாடி இந்தத் தீர்வையும் குலைத்துவிட்ட நிலையில் அவர்களின் தேசப் பொறுப்பின்மையை நிரூபித்து விட்டுள்ளது. இனப்பிரச்சனையின் தீவிரத்தில் இந்நாடே சிதறுண்டு போகும் நிலையிலும் அவர்கள் தமது கட்சி அரசியலுக்காக இனப்பிரச்சனையைப் பயன்படுத்தவே தலைப்படுகிறார்கள்.

அவர்களைப் பொறுத்தவரையில் இதில் இரண்டு விடயங்கள்தான் அக்கறைக்குரியவை. ஒன்று தேர்தல் வெற்றி. அந்த வெற்றிக்கு இவ்வினப்பிரச்சனை இப்போது தீர்வது பாதகம் என்று கருதுகிறார்கள். ஏனெனில் அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இணங்கியே ஒரு தீர்வை வழங்க முன்வந்தாலும் இப்பிரச்சனைக்குத் தீர்வு கண்டதற்கான பெயர் அரசாங்கத்தையே சேர்ந்துவிடும். அதே வேளை அப்படியான ஒரு தீர்வை தமது சம்மதத்துடன் அரசாங்கம் வழங்கும்போது அரசாங்கத்தைத் தேர்தல் நோக்கில் குறை கூறிப் பிரசாரம் செய்வதற்கான நியாயப் பாட்டை எதிர்க்கட்சி இழந்துவிடும் என்ற அச்சமும் அவர்களுக்கு உண்டு. ஆக மொத்தத்தில் இப் பிரச்சனை தீர வேண்டுமாயின் அதை ஏன் மாற்று அரசாங்கத்தின் காலத்தில் தீர நாம் உதவ வேண்டும், எமது அரசாங்கத்தை அமைத்து எமது ஆட்சியில் தீர்த்தால் அதற்கான பெயரை நாமே ஈட்டிக்கொள்ளலாமே என்ற எண்ணம் தான் அவர்களிடம் உள்ளது. ஆனால் உண்மையில் தமது 17 வருட ஆட்சிக் காலத்தில் தீர்க்கக்கூடிய மிகப் பெரும்பான்மையான பலத்தைக் கொண்டிருந்த சந்தர்ப்பத்திலும் தாமாக இதற்குத் தீர்வுகாண முனையாதவர்கள். மாறாக இப் பிரச்சனையை மோசமான அளவுக்கு வளர்த்துவிட்டவர்கள். மீண்டும் ஒரு ஆட்சி அமைத்துத் தீர்ப்பார்கள் என்று எண்ணுவது பகற்கனவாகும். அப்படித் தீர்க்கக்கூடிய குணாம்சங்கள் ஏதும் இவர்களிடம் தென்படுகிறதாவென்றால் துண்டாக இல்லை. இத் தீர்வுத் திட்டத்தை சிதைப்பதில் காட்டிய ஆர்வமும் செலுத்திய குறுக்கு முனையும் பின்னர் எப்படி இவர்கள் இதைக் கையாளுவார்கள் என்பதற்கான கண்கண்ட சாட்சியங்களாக விளங்குகின்றன. அத்தோடு இந்தத் தீர்வுத் திட்டத்தில் இவர்கள் நடத்திய பேச்சுவார்த்தைகளெல்லாம் இதில் இருந்த தீர்வு ஆலோசனைகளையும், தமிழ்க் கட்சிகளோடு அரசாங்கம் உடன்பட்ட விடயங்களையும் மேலும் குறைப்பதற்கே விளைந்தனவேயன்றி எதையுமே கூட்டித்தர முனையவில்லை. இப்படியிருக்க, இப் பேச்சு வார்த்தைகளை முறித்துக்கொண்ட பின் இதற்கு பௌத்த பீடங்களின் அங்கீகாரம் வேண்டுமென்று கூறுவது எதையுமே வழங்காதிருக்கச் செய்வதற்கான கபடத்தனமாக உள்ளது.

இத்தகைய நிலையில், தமிழ்பேசும் மக்களை இத்தீர்வு எவ்வளவு திருப்திப் படுத்தக் கூடியதாக இருக்கும் என்ற கேள்வி ஒருபுறமிருக்க, அதை நடைமுறையில் பரிசீலிக்க வாய்ப்பின்றியே அத் தீர்வு இப்போது முடக்கப்பட்டுவிட்டது. கலையவிருக்கும் இந்த அரசாங்க ஆட்சிக்காலத்துக்குள் அதை நிறைவேற்றுவதென்பது அசாத்தியமானதாகவே ஆகிவிட்டது.

எனவே என்ன தீர்வாக இருந்தாலும் அது அடுத்த அரசாங்கத்திலேயே களத்துக்கு வரக்கூடியதாக இருக்கும். இந்த இடைக்காலத்தில் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான பலப்போட்டிகளிலேயே அதிக கவனம் செல்லும்.

அதனால் அடுத்த அரசாங்கத்தை கைப்பற்றப் போவதுயார் என்பது இனப்பிரச்சனையைப் பொறுத்தவரையில் முக்கியத்துவம் வாயந்த ஒரு விடயமாக அமையும். எதிர்க்கட்சியான ஐ.தே.க. ஆட்சியைக் கைப்பற்றும் நிலை தோன்றினால் பாரியதொரு அரசியல் சட்ட நெருக்கடி அரசியல் நெருக்கடியாக முன்னெழும். அதாவது ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்துக்குமான முரண்பாடு ஒரு பாரிய சிக்கலை விளைவிக்கும். அந்தச் சிக்கலின் மத்தியில் அரசியல் தீர்வு நினைத்துப் பார்க்க முடியாத ஒரு விடயமாக மாறிவிடும். அதேவேளை புதிய பாராளுமன்றத்தில் பங்குபற்றப் போகும் தமிழ்க் கட்சிகளின் தன்மையும் பலமும் எவ்வளவுதூரம் இவ்வினப்பிரச்சனைக்கான தீர்வுக்கு வழிகோலக் கூடியதாக இருக்குமென்பது கேள்வி.

தற்போதைய தீர்வுத் திட்டத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாது போய்விட்ட நிலையில் ஜனாதிபதி சந்திரிகா தான் பாராளுமன்றத்தை அரசியல்சட்ட நிர்ணய சபையாக மாற்றி இத் தீர்வை நிறைவேற்றப்போவதாக சூளுரைத்துள்ளார். அவ்வாறானால் அடுத்த தேர்தலில் அவர் இதற்கான மக்களாணையைத் தெளிவாகக் கோரவேண்டும். இவ்வளவு சிரமப்பட்டு முயன்ற தீர்வு முயற்சியையே பக்குவமான முறையில் அவரால் நிறைவேற்ற முடியவில்லை. இறுதியில் தேர்தல் அமளிக்கு மத்தியில் அவசரமாக நிறைவேற்ற முனைந்து சாதுரியமற்ற முறையில் தோல்வியைத் தழுவிக் கொண்டார். இருந்தும் இத் தீர்வுத் திட்டத்தில் இவரால் முஸ்லிம் காங்கிரஸைத் தவிர எந்தத் தமிழ்த் தரப்பையும் மனம்விரும்பி ஏற்கச் செய்ய முடியவில்லை. இப்படியிருக்க அடுத்த முறை முயலும் தீர்வுமுயற்சியிலாவது அரசியல் பலஹீனங்களுக்கேற்ப தீர்வினைப் பேரம் பேசாது தமிழ்த் தரப்பின் அபிலாஷைகளை இதயசுத்தியுடன் பூர்த்திசெய்ய அவர் முனைய வேண்டும். இந்த இடைப்பட்ட காலத்தில் தமிழ்க் கட்சிகளும் இத் தீர்வுத் திட்டத்தை வலுவான அடிப்படையாக்க முழுமுயற்சி எடுப்பார்களா அல்லது தேர்தல் களோபரத்தில் தலைமுழுகி விடுவார்களா என்பதைப் பொறுத்தும் அத் தீர்வின் எதிர்காலம் தங்கியுள்ளது.

## செய்திச் சிதறல்

✪ திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்க ஆகஸ்ட் 16ம் திகதியன்று தனது பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்தார். உலகிலேயே முதற் பெண் பிரதமராகவும் மூன்று தடவைகள் பிரதமர் பதவியை வகித்தவராகவும் கணிக்கப்பட்ட அவருக்கு 87 வயதாகிறது. அவருடைய இராஜினாமாச் செய்தி அறிவிக்கப்பட்ட அதே வேளையில், புதிய பிரதமராக இரத்தினசிறி விக்கிரமநாயக்க பதவியேற்றார். இவ்விரு திடீர் அறிவித்தல்களும் சற்றும் எதிர்பாராத வேளையில் அறிவிக்கப்பட்டமையினால் பொது மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

✪ இந்த நாட்டின் அடுத்த பிரதமர் பதவிக்கு பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை அவர்கள் தான் நியமிக்கப்படுவார் என்று பரவலாக நம்பப்பட்டது. தனக்குப் பின் இந்த நாட்டின் பிரதமராக தனது மகன் அநுராபண்டாரநாயக்க அவர்களே வரவேண்டும் என்று பதவி விலகிய திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்க பெரிதும் விரும்பியதாகவும், சில காலத்துக்கு முன்னர் வதந்திகள் பரவலாக அடிபட்டன. இருப்பினும் இரத்தினசிறி விக்கிரமநாயக்கவின் நியமனம் பரபரப்பூட்டும் செய்தியாகவே கருதப்படுகிறது.

✪ திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கவின் திடீர் பதவி விலகல் அவருடைய மனப் பூர்வமான முடிவானதல்ல என்று அவருடைய மகனான அநுரா பண்டாரநாயக்க கருதுவதாகத் தெரிகிறது. ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களின் தூண்டுதல் காரணமாகவே தனது தாயார் எந்த விதமான முன்னறிவிப்பும் இல்லாமல் திடீர் பதவி விலகல் அறிவித்தலை வெளியிட்டுள்ளார் என்று அநுரா தெரிவித்திருப்பதாக ஒரு செய்தி அடிபடுகிறது.

✪ அம்பாறை மாவட்டத்தில் கல்முனை கரையோரப் பகுதிகளில் தனி நிர்வாக மாவட்டத்தை உருவாக்குவதற்கு ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தனது சம்மதத்தைத் தெரிவித்துள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார். அண்மையில் ஜனாதிபதியை சந்தித்துப் பேசிய முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீடப் பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி இதற்கான சம்மதத்தை அளித்திருப்பதாகக் காங்கிரசின் துணைத் தலைவரான மருதூர் கனி தெரிவித்தார்.

✪ வவுனியா பிரதேசத்தில் அகதிகள் பல முகாம்களில் ஆயிரக் கணக்கில் வந்து குடியேறியுள்ளமையினால் அவர்களுடைய நலன்களைக் கவனிப்பதற்காக அரசாங்க அதிகாரிகள் பல சிக்கல்களை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் கடந்த சில மாதங்களாக வவுனியா கச்சேரி அலுவலக நேரம் முடிவடைந்த பின்னரும், கதவுகள் மூடப்படாமல் தொடர்ந்து இயங்கி வருகின்றன. ஊழியர்களும் வார விடுமுறைகளுக்கோ ஏனைய விடுமுறைகளுக்கோ வேலைகளிலிருந்து ஓய்வு பெறாமல் உழைத்து வருகின்றனர். இருப்பினும் அகதி மக்கள் சில சந்தர்ப்பங்களில் பொறுமையிழந்து அரச அதிகாரிகளுடன் மோதி வருவது ஒரு துர்ப்பாக்கியமான நிலையே. அண்மையில் வவுனியா பூந்தோட்ட முகாமுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளை வழங்குவதற்காகச் சென்ற மாவட்ட புனர் வாழ்வுத் திட்டப் பணிப்பாளர் திருமதி.விஜயலக்ஸ்மி கேதீஸ்வரன் முகாமில் உள்ள அகதி மக்களால் சூழப்பட்டு, பல மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டார். பின்னர் பொலிஸாரின் துணையுடன் அவர் மீட்கப்பட்டார்.

✪ மட்டக்களப்பு-சித்தாண்டியில் வீதிப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது புலிகள் துப்பாக்கிச் சூடு நடத்திய பொழுது இராணுவ வீரர்கள் இருவர் காயமடைந்தனர். இச்சம்பவத்தில் மேற்கொள்ளப்பட்ட பதிலடி நடவடிக்கையில் அவ்வூரைச் சேர்ந்த பொதுமக்கள் இருவர் சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்டுள்ளார்கள். அ.சந்திரகுமார் (21) என்பவர் தலை துண்டிக்கப்பட்ட நிலையிலும், தி.வின்சன்ற் (28) என்பவர் துப்பாக்கிச் சூட்டினாலும் கொல்லப்பட்டார்கள். மேற்படி இருவரது மரணங்களும் 'கொலை' எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மரண விசாரணை மேற்கொண்ட மாவட்ட பதில் நீதவான் டி.சி.சின்னையா, சம்பவத்தில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களைக் கைது செய்து நீதி மன்றத்தில் தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

# அண்டை மண்டலத்தில்....

## கிரிக்கெட் ஊழல் கதை தொடர்கிறது

கோடிக்கணக்கில் சொத்துக்கள், விலை உயர்ந்த கார்கள் விதவிதமான ஆடைகளும், காலணிகளும், கைக்கடிகாரங்களும், பிரமிப்பூட்டும் இந்தப் பட்டியல் ஜெயலலிதா, சசிகலா சம்பந்தப்பட்டதல்ல. முன்னாள் இந்திய கிரிக்கெட் கப்டன்கள் கபில்தேவ், அசாருதீன் ஆகியோரே இப்படி வாங்கிக் குவித்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

புக்கிகள் எனப்படும் சூதாட்டக்காரர்களிடம் பணம் வாங்கிக் கொண்டு, வேண்டுமென்றே சரியாக விளையாடாமல் தாங்கள் தங்கள் குழு தோற்பதற்கு வழிவகுக்கும் கிரிக்கெட் வீரர்கள் பற்றி தொடர்ந்து பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது இந்தியாவில்.

இந்த விஷயமெல்லாம் வெளிவராதக் காரணமாகவிருந்த தென்னாபிரிக்க அணியின் முன்னாள் தலைவர் ஹான்சிக்ரோன்யே கூட புக்கிகளிடமிருந்து பல கட்டங்களில் தாம் பணம் வாங்கியதை ஒப்புக் கொண்டுவிட்டார். ஆனால் இந்தியாவில் எவரும் அப்படி ஒத்துக் கொள்ளத் தயாராகவில்லை.

மேலும் தென்னாபிரிக்காவில், இப்பிரச்சனைகுறித்து விசாரிக்க ஒரு தனிக் குழுவே நியமிக்கப்பட்டு, ஏறத்தாழ அது விசாரணையினை முடித்துக் கொண்டுவிட்டது. விரைவில் அதன் அறிக்கை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

இந்தியாவிலோ இன்னமும் கிரிக்கெட் வாரிய அதிகாரிகள் 'ஒன்றுமே நடக்கவில்லை' என்று தொடர்ந்து சாதிக்கிறார்கள்.

'ஊழல் புரிந்து விட்டேன்' என்று ஒப்புக்கொண்டு தானாகவே விலகிவிட்டார் க்ரோன்யே. மேலும் இருவர் தற்காலிகமாக விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள், இந்திய வாரியத் தலைவர் முத்தையாவோ, வெறும் 'சந்தேகத்தின் பேரில் எவரையும் விலக்கி வைக்க முடியுமா என்ன, அது நியாயமில்லையே' என்கிறார்.

இந்தச் சூழலில் வருமானவரித்துறை இந்தியாவெங்கும் அதிரடி சோதனைகள் நடத்தி, பல்வேறு விஷயங்களை வெளிக்கொணர்ந்திருக்கிறது. ஆரம்பக்கட்டத்தில் கபில்தேவ் வீட்டில் சோதனை, அசாருதின் வீட்டில் சோதனை, ஆவணங்கள் கன்டெடுக்கப்பட்டன, நகைகள் சிக்கின, கபில்தேவ் கணக்கில் பணம், ரியல் எஸ்டேட் குவிப்பு என்றெல்லாம் செய்திகள் வந்த வண்ணமிருந்தன. திடீரென்று அந்தச் செய்திகளுக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

என்ன ஆயிற்றென்றால் அஜய் ஜடேஜாவின் வீட்டில் துவங்கிய சோதனை அதிகாரிகளை ஜெயாஜேட்லி என்ற பிரபல பெண்மணி வீட்டிற்கு அழைத்துச் சென்றது. யார் இந்த ஜெயா? ஆளும் பாரதீய ஜனதா தலைமையிலான கூட்டணியின் ஓர் அங்கமான சமதா கட்சியின் முக்கியத்தலைவர்களில் ஒருவர். பாதுகாப்பு அமைச்சர் ஜார்ஜ் பெர்னான்டசிற்கு மிக நெருக்கமானவர். சரி, அவருக்கும் ஜடேஜாவிற்கும் என்ன தொடர்பு? ஜேட்லியின் மகளின் நெருங்கிய நண்பர் ஜடேஜா. திருமணம் செய்து கொள்ளக்கூடும் என்று கூட ஊகங்கள். அப்படிப் போகிறது கதை.

சோதனை நடந்த நேரம் ஜடேஜா லண்டனில் இருந்தார். இன்னும் சில ஆவணங்கள் வேறொரு வீட்டில் இருக்கலாம் என்று அதிகாரிகள் சென்றால், அது ஜேட்லியின் வீடு. அவர் தாண்டிக்குதித்து விட்டார். "என்ன தைரியம், என் வீட்டிற்கே வந்து விட்டீர்கள், நான் யார் தெரியுமா, உங்களை சும்மாவிடப் போவதில்லை. ஜடேஜா வீட்டில் கிடைத்த முகவரிகளுக்கெல்லாம் சென்று விடுவீர்களா? என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் நீங்கள்..." விளாசித் தள்ளிவிட்டார். கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளாத குறைதான். சில நொடிகளிலேயே அதிகாரிகளுக்கு மேலிடத்திலிருந்து உத்தரவுபறந்து வந்தது. "வந்த வழியே திரும்பிப்போங்கள்" என்று.



அத்தோடு நிற்கவில்லை ஜேட்லி, மறுநாள் செய்தியாளர்களை சந்தித்து, அதுவும் அப்போது ஊரில் இல்லாத பெர்னான்டஸ் வீட்டிலிருந்தே, வருமான வரித்துறையினரையும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களையும் காய்ச்சியெடுத்துவிட்டார். நமது நாட்டின் ஹீரோக்கள், புகழ் சேர்த்தவர்கள், இன்னும் பல காலம் விளையாடவேண்டியவர்கள், அப்படிப்பட்டவர்களைப் பற்றி அவதூறாக வதந்திகளைக் கிளப்பிவிடுவதா, இந்த ரீதியில் குமுறினார் ஜேட்லி. விளைவென்ன, இனிமேல் எந்த சோதனைகள் பற்றியும் எந்தத் தகவலும் எந்த அதிகாரியும் வெளியிடக்கூடாதென உத்தரவே போடப்பட்டது.

சீப்பை ஒளித்து வைத்தால் திருமணம் நின்றுவிடாது என்பார்கள். அதுபோல அப்படி உத்தரவு போடப்பட்டதால் செய்திகள் வராமல் நின்றுவிடவில்லை. பத்திரிகையாளர்களும் எப்படி செய்திகளை கறப்பது என்றவித்தை அறிந்தவர்கள்தானே, சூடான செய்திகள் வந்த வண்ணம்தான் இருக்கின்றன. ஆனால் அவற்றை அதிகாரபூர்வமாக எவரும் உறுதிப்படுத்துவதில்லை. மறுப்பதும் இல்லை. ஒரு இணையதளச் செய்தியின்படி அசார் மற்றும் அவரது மனைவி சங்கீதா பிஜ்லானியின் மொத்த சொத்து மதிப்பு 170 கோடி ரூபாய்க்கும் மேல், பல கோடி ரூபாய் மதிப்புள்ள அவர்களது பம்பாய் ஃப்ளாட்டை வாங்கிக் கொடுத்ததே முகேஷ் குப்தா என்கிற டெல்லி புக்கிதான். இந்த முகேஷை தனக்கு அறிமுகப்படுத்தியதே அசார்தான் என்று க்ரோன்யே ஏற்கனவே கூறியிருக்கிறார் என்பதை இங்கே நினைவில் கொள்ள வேண்டும்.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போன்று, இந்த சூதாட்டத்தில் பாகிஸ்தானின் மிகமுக்கிய புள்ளியான முன்னாள் கப்டன் சலீம் மாலிக்கிற்கும் அசாருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்றும், இருவருக்குமிடையே ஏறத்தாழ 35 கோடி ரூபாய் கொடுக்கல் வாங்கல் இருந்திருப்பதாகவும் வருமான வரி அதிகாரிகள் கண்டறிந்திருப்பதாகவும் அந்த இணையதளம் கூறுகிறது.

விஷயம் இத்துடன் நிற்கவில்லை. அசாருக்கும் துபாயில் தற்போது வசிக்கும் பிரபல பம்பாய் தாதா, அகில உலக கிரிமினல் பேர்வழி, தாவூத் இப்ராஹிமிற்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாகவும் கூறப்படுகிறது. யாரும் விசாரணையில் குறுக்கிடாவிட்டால் அசார் சிறைக்குச் செல்வது நிச்சயம் என்கிறது அந்தத்தளம்.

கபில்தேவும் பல கோடி ரூபாய் அளவு சொத்து சேர்த்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அவர் இதுவரை கணக்கில் காட்டாத பல்வகை வருமானங்கள், குறிப்பாக நிலக்கரி இறக்குமதியில் இறங்கியிருக்கும் மற்ற நிறுவனங்கள் நஷ்டத்தில் தள்ளாடிக் கொண்டிருக்கும்போது, கபில்தேவ் சம்பந்தப்பட்ட நிறுவனம் மட்டும் மிக அதிக இலாபம் ஈட்டுவதாக காண்பிக்கப்பட்டிருப்பது பலரின் புருவங்களை உயர்த்தியிருக்கிறது. பச்சையாகச் சொன்னால் கறுப்பை வெள்ளையாக்குகிறார் கபில். வேறு வழிகளில் வந்திருக்கும் வருவாயை, நிலக்கரி இறக்குமதி மூலம் வந்ததாக கணக்கு காண்பித்து தப்பிக்க முயல்கிறார் என்கிறார்கள் வருமான வரித்துறையினர்.

'உங்கள் வருவாயைச் சொல்லுங்கள், வரியைக்கட்டுங்கள், வந்தவழியைச் சொல்ல வேண்டாம்' என்று அரசு அறிவித்த ஒரு சலுகையைப் பயன்படுத்திக் கொண்டு, கபிலும் அவர் சிஷ்யர் ஜடேஜாவும் தலா 14 இலட்சம் ரூபா அந்நேரம் வரை கணக்குக் காட்டப்படாத தனிவருமானம் என்று கூறி அதற்கான வரியை கட்டியிருக்கிறார்கள். எங்கிருந்து வந்தது அந்தத் தொகை? வருமானவரித்துறை அப்போது கேட்கவில்லை, இப்பொழுது மத்திய புலனாய்வுத் துறை கேட்கிறது. விழிக்கிறார்கள்.

இந்த மூவர்தான் எக்குதப்பாக மாட்டிக் கொண்டிருப்பது போலத் தோன்றுகிறது. மற்ற கிரிக்கெட் வீரர்களுக்கு எதிராக அவ்வளவுவலுவாக சாட்சியமிருப்பதாகத் தெரியவில்லை. எப்படியெல்லாம் நாடகமாடினார்கள் இவர்கள்? தான் முஸ்லீம் என்பதால் தன்னைப் பழிவாங்குகின்றனர் என்றார் அசார். நான் எவ்வளவு உழைத்திருக்கிறேன், எவ்வளவு வெற்றிகளைக் குவித்திருக்கிறேன். என்னை இப்படியெல்லாம் பழி சொல்லலாமா என்று பி.பி.சி. பேட்டியில் அழுதே விட்டார் கபில்தேவ். தனக்கு ஒன்றுமே தெரியாது என்று சாதித்தவர் ஜடேஜா.

வருமானவரித்துறையினரின் அதிரடி சோதனைகளுக்குப் பிறகு இவர்களில் ஒருவராவது வாயைத் திறக்க வேண்டுமே. ஊஹூம், மூச்சு விடக்கூட மறுக்கிறார்கள். செய்தியாளர்களைக் கண்டால் அலறி அடித்துக் கொண்டு ஓடுகிறார்கள்.



தங்கள் மீது முதன் முதலில் புகார் சொன்ன மற்றொரு ஆட்டக்காரர் மனோஜ் பிரபாகர் மீது வழக்குத் தொடுக்கப்போவதாக எச்சரித்த அசாரும், கபிலும் இப்போ அவர்களைப் பற்றிய இன்னும் மோசமான செய்திகளை வெளியிடுவோர் மீது வழக்குப் போடுவதாகச் சொல்லவில்லை. ஆவணங்களை எரிப்பதில் அவர்கள் தீவிரமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதிலே கொடுமை என்னவென்றால், இந்திய கிரிக்கெட் நிர்வாகிகளில் ஜாம்பவான், அகில உலக அமைப்பின் தலைவராக இருந்து இப்போதுதான் ஓய்வுபெற்ற ஜக்மோகன் டால்மியா இந்த அதிரடி ரெய்டுகளில் மாட்டியிருப்பதுதான். அவர் ஏற்கெனவே உலகக் கோப்பை சம்பந்தப்பட்ட பந்தயங்களை டெலிவிஷனில் காண்பிப்பது தொடர்பான ஒப்பந்தங்களில் பல கோடி ரூபாய் ஏப்பம் விட்டு விட்டதாக ஒரு குற்றச்சாட்டும் இருக்கிறது.

தற்போது இந்திய வாரியத்தின் தலைவராயிருக்கும் முத்தையா, டால்மியாவின் நெருங்கிய சகா. எனவேதான் அவர் என்ன பிரச்சனை, எங்கே பிரச்சனை என்று ஒன்றுமே நடவாதது போல் பாவனை செய்கிறார்.

அதிகாரிகள், நிர்வாகிகள் முன்னால் இருக்க பெரும் பிரச்சனையே.

குற்றச்சாட்டுகளுக்குள்ளான வீரர்கள் என்ன செய்வது என்பதுதான். அடுத்த மாதம் கனடா நாட்டில் உள்ள டொராண்டோ நகரில் நடக்க விருந்த சஹாரா கோப்பைப் பந்தயத்திற்கான குழுவில் அசார் போன்றோரை சேர்ப்பதா இல்லையா, கபில்தேவை பயிற்றுநராக வைத்துக் கொள்வதா இல்லையா, அப்படி அவர்களை விட்டுவிட்டால் சந்தேகத்திற்குள்ளாகியிருக்கும் நிர்வாகிகளும் வெளியேற வேண்டுமா என்பன போன்ற கேள்விகள் வாரியத்தின் முன்.

காஷ்மீர் போராளிக்குழுவினர் பல்வேறு பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டு, நூற்றுக்கணக்கானோரைக் கொன்று குவித்து, வாரியத்தின் சிக்கலைத் தீர்த்து விட்டார்கள். இப்படிப்பட்ட பயங்கரவாதச் செயல்களை ஊக்குவிக்கும் பாகிஸ்தானுடன் விளையாடுவதா? முடியாது என்று மத்திய அரசு அறிவித்துவிட்டது. இன்னும் இரண்டு மாதங்களாவது ஆகும் அதற்கும் அடுத்த பந்தயங்களுக்கு, அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்று பெருமூச்சு விடுகிறார்கள் வாரியத்தலைவர்கள்.

ஆனால் வேறொன்றையும் மனதில் கொள்ள வேண்டும். வருமானவரித் துறையினர் என்னதான் அசகாய சூரர்களாயிருந்தாலும் அவ்வளவு எளிதில் இந்த வீரர்களெல்லாம் சிக்கிக் கொள்ளப்போவதில்லை, காரணம் உண்மையிலேயே இவர்கள் எந்த ஒரு பந்தயத்தின் முடிவினையும் மாற்றுவதற்கு உறுதுணையாயிருந்திருக்கிறார்கள், அல்லது முயற்சியாவது செய்திருக்கிறார்கள் என்பதற்கான சாட்சியம் எதுவும் இல்லை.

**காணகன்**

பல வழிகளில் அவர்களுக்கு பொருள் குவிந்திருக்கலாம். அவற்றை கணக்கில் கட்டாமல் அவர்கள் மறைத்திருக்கலாம். ஆனால் ஆட்ட முடிவினை மாற்றி, ரசிகர்களை ஏமாற்றி, அந்த வழியில் பொருளீட்டியிருக்கிறார்கள் என்பதற்கான ஆதாரமேயில்லை.

கிரிக்கெட் போன்ற ஒரு ஆட்டத்தில் வேண்டுமென்றே ஒருவர் சரியாக ஆடாமல் விட்டார், அவுட் ஆனார், காட்சை பிடிக்காமல் கோட்டை விட்டார், அல்லது எதிரணியினர் ரன்கள் எடுப்பதற்கு வசதியாக மோசமான பௌலிங் செய்தார், என்றெல்லாம் நிரூபிப்பது இயலாதகாரியம். அதுவே கபிலுக்கும்அசாருக்கும் சாதகமான அம்சம்.

ஆனால் அவர்கள் மக்கள் மத்தியில் ஒட்டுமொத்தமாக கௌரவத்தை, மரியாதையை, நல்ல பெயரை, அந்தஸ்தை இழந்து விட்டார்கள். விளம்பர நிறுவனங்கள் கிரிக்கெட் வீரர்களை முன்னிறுத்தி விளம்பரம் செய்யவே தயங்குகின்றன. அது ஒன்றுதான் இத்தகைய நபர்களுக்கு கிடைத்துள்ள தண்டனையாகும். அது சிறைத்தண்டனையினைவிட கொடுமையான தண்டனைதான் என்பதில் ஐயமில்லை.

---

**வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள், அங்கு அவர்களுடைய தஞ்சம் கோரும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதும் அவர்கள் இலங்கைக்கு திருப்பியனுப்பப்படுகின்றனர். அவ்வாறு இங்கு வருபவர்கள் படும் துயரம் தொடர்பாக மனித கௌரவத்துக்கான அமைப்பு விடுத்துள்ள அறிக்கையின் முதல் ஒன்பது பகுதிகளையும் கடந்த வாரங்களில் இங்கு தந்திருந்தோம். அதன் தொடர்ச்சி இங்கு தரப்படுகிறது.**

### மேற்கு நாடுகளில் தஞ்சம் மறுக்கப்பட்டு

## திருப்பி அனுப்பப்படுவோர் இங்குபடும் துயரங்கள் 10

**திருப்பி அனுப்பப்படும் தஞ்சம் கோருவோர் தொடர்பாக மேலும் சில முக்கியமான அம்சங்கள்.**

**கொழும்பு ஓர் இடைத்தங்கல் முகாம்**

வெளிநாடுகளில் தஞ்சம் மறுக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்படுவோருக்கு பொதுவாக கொழும்பு நகர் அவர்களின் இடைத்தங்கல் நிலையமாகவே இருந்து வருகிறது. கொழும்பிலிருந்து இவர்கள், யுத்தத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வடகிழக்குக்கு திரும்புவார்கள்; பண வசதி படைத்தவர்கள் மீண்டும் வெளிநாடு செல்ல முயற்சிப்பார்கள். பெரும்பாலானோருக்கு கொழும்பில் நீண்டகாலம் தங்கியிருப்பது சாத்தியமில்லை.

திருப்பி அனுப்பப்படுவோர் பலருக்கு ஏற்பட்டுள்ள அனுபவங்களைக் கருத்திலெடுத்துக் கொண்டால், இலங்கைத் தமிழர்களுக்கு கொழும்பு ஒரு பாதுகாப்பான இடம் என்ற எண்ணம் பயங்கரமான பிரமையே. திருப்பி அனுப்பப்படும் ஒருவர் ஆணாக இருந்தாலும் ஒரு பெண்ணாக இருந்தாலும் அவர் உடனடியாகக் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படும் நெருக்கடியான நிலைக்கு ஆளாவார். பின்னர் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படுவார்.

இதற்கு எடுத்துக்காட்டாக ஜேர்மன் நாட்டிலிருந்து 22.08.98ல் திருப்பி அனுப்பப்பட்ட கொன்சலஸ் ஜோசப் என்பவரின் கதையைக் கூறலாம் இராஜகிரியாவில் விடுதலைப் புலிகளால் நடத்தப் பட்ட குண்டு வெடிப்பைத் தொடர்ந்து இவர் மீண்டும் கைது செய்யப்பட்டார். அப்போது இவர் ஊறுகொடவத்தை, அவிஸாவளை வீதி 55/26ம் இலக்க இல்லத்தில் வசித்து வந்தார். இப்பொழுது அவர் வெலிக்கடைச் சிறையில் விசாரணைக் கைதியாக வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக 1998 செப்டம்பர் 17ம் திகதியும் 2000 மார்ச் 13ம் திகதியும் அனுப்பப்பட்ட கடிதத்தையும் தொலைநகலையும் இங்கு குறிப்பிடுகிறேன்.

*(அ) 17 செப்டம்பர், 1998*

*எமது இல: FD/GR/98/61*

*யாழ்ப்பாணம் ராஜசிங்கம் வீதி, 72/32ம் இலக்கத்தைச் சேர்ந்த எனது கட்சிக்காரரான திரு.கொன்சலஸ் ஜோசப் பற்றி இதனை எழுதுகிறேன்.*

*1996ம் ஆண்டு இவர் ஜேர்மனிக்கு அகதியாகச் சென்றார். தஞ்சம் கோரி இவர் விடுத்த விண்ணப்பம் 1998.6.20ம் திகதி நிராகரிக்கப்பட்டது. இவருடைய விண்ணப்பத்தை மீளாய்வு செய்யும்படி இவர் விண்ணப்பித்திருந்த போதிலும் 22.08.98ல் இவர் இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட்டார்.*

*கொழும்பு விமானநிலையத்தில் இவர் வந்து இறங்கியதும் இவர் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டார்.*

*அன்று மாலையில் நீர்கொழும்பு நீதவான் முன் இவர் கொண்டு செல்லப்பட்டார். நீதவான் இவரை பிணையில் செல்லும்படி அனுமதித்தார். அவருடைய வழக்கு இன்னும் தொடர்கிறது.*

*அவருடைய வழக்குக்கான அழைப்புத் திகதி 30.10.98 ஆகும்.*

*அவருடைய குடும்பம், உறவினர்கள் அனைவரும் பிறநாடுகளில் வாழ்கின்றனர். இவருக்கு கொழும்பில் உறவினர்கள் எவரும் கிடையாது.*

*இவரிடம் தேசிய அடையாள அட்டையோ கடவுச் சீட்டோ தன்னுடைய அடையாளத்தை நிரூபிப்பதற்கு சான்றுகள் எதுவுமில்லையென்பதை மேலும் தெரிவிக்க விரும்புகிறேன்.*

*மகேஸ்வரி வேலாயுதம்*
*ஒப்பம்.*

*(ஆ) மகேஸ்வரி அவர்களுக்கு,*

*ஒரு தமிழ் இளைஞரைப் பற்றி ஆதாரங்களைப் பெறுவதற்கு இன்று இக்கடிதத்தினை எழுதுகிறேன். திரு. ஜோசப் வெலரி என்பவர் இன்று எங்கள் அலுவலகத்துக்கு வந்திருந்தார். கடந்த 7 வருடங்களுக்கும் மேலாக அவர் ஜேர்மனியில் தங்கியிருக்கிறார்.*

*அவருடைய மகன் திரு.ஜோசப் கொன்ஸலஸ். அவரும் பல வருடங்களாக ஜேர்மனியில் தங்கியிருந்தார். 1998 ஆகஸ்ட் 21ம் திகதி அவ்விளைஞர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார்.*

*கொழும்பு-14. ஊறுகொடவத்தை, அவிஸாவளை வீதி, 55/26ம் இலக்கத்தில் அவர் தங்கியிருந்தார். அவர் 10.03.2000 திகதியன்று வெள்ளிக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்பைத் தொடர்ந்து தனது மகன் கைது செய்யப்பட்டதாக அவருடைய தந்தையார் எமக்குத் தெரிவித்திருக்கிறார். பின்வரும் முகவரியிலிருந்து அவரை மருதானை பொலிஸார் கைது செய்ததாகத் தெரிகிறது.*

*வி.செபஸ்தின், 75/20, எம்.எம்.வீதி,*
*மருதானை, கொழும்பு-10.*

*எங்களுக்குத் தெரிந்தவரையில் ஓரிரவு இவர் பொலிஸ்நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தார். பின்னர் இவர் கொழும்பி லுள்ள வெலிக்கடை சிறைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். திரு.கொன்சலஸ் அவர்கள் எவ்வாறு உள்ளார், இன்னும் எவ்வளவு காலம் இவர் சிறையில் வைக்கப்பட்டிருப்பார் என்பன போன்ற விசயங் களை அறிந்து தெரிவிக்க முடியுமா?*

*இவ்வுதவியைச் செய்தால் நாம் மகிழ்ச்சியடைவோம். இதற்கான பணச் செலவுகள் ஏற்படுமாயின் அவற்றைத் தருவதற்கும் ஆயத்தமாக இருக்கிறோம். தங்கள் உதவிக்கா நன்றி.*

**வேர்னர் மோர்ஸ், மற்றும்**
**ஜோசப்வெலரி.**

*(இன்னும் வரும்)*

அலசுவது - இராஜதந்திரி

# அரசோச்சும் பேரினவாதம்

உலகின் முதலாவது பெண் பிரதமமந்திரி என்ற பெருமையைக் கொண்டிருந்த திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்க அரசியலில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

பிரதமராகப் பதவிவகித்த நிலையிலேயே சிறிமாவோ பண்டாரநாயக்க தமது 84வது வயதில் 40 வருட அரசியல் வாழ்க்கையின் பின்னர் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்க, அவரது கணவர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க 1958ம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்தே ஓர் இளம் விதவையாக அரசியலினுள் நுழைந்தார்.

[illegible] பண்டாரநாயக்க உயிர்வாழ்ந்த [illegible]லத்தில் சிறிமாவோ பெரிதும் ஒரு குடும்பப் பெண்ணாகவே இருந்தார். ஆயினும் காலஞ்சென்ற பண்டாரநாயக்காவினால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அங்கத்தவர்கள் பண்டாரநாயக்க குடும்பத்தைச்சேர்ந்த ஒரு தலைமையையே விரும்பியதால் சிறிமாவோ அரசியலுக்குள் காலடி எடுத்து வைத்தார்.

உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமையை சிறிமாவோ பண்டாரநாயக்க கொண்டிருந்தபோதிலும் 1978ம் ஆண்டிலிருந்து ஒரு தசாப்தகாலத்துக்கும் மேலாக அரசியலில் ஈடுபடமுடியாதவாறு குடியியல் உரிமைகளை சிறிமாவோ இழந்திருந்தார்.

காலஞ்சென்ற ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன மேற்கொண்டிருந்த அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை காரணமாகவே சிறிமாவோ பண்டாரநாயக்கா கடந்த ஐ.தே.க ஆட்சிக்காலத்தில் மிகவும் நெருக்கடியான நிலையை எதிர்நோக்கவேண்டியிருந்தது.

இருந்தபோதிலும் 1994ம் ஆண்டு பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு ஆட்சியைக் கைப்பற்றியதும், தமது புதல்வி சந்திரிகாவை ஜனாதிபதியாகக் கொண்ட அரசாங்கத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமரானார்.

இது கூட ஓர் அபூர்வமான அரசியல் நிகழ்வாகவே இருந்தது. ஒரே தருணத்தில் மகள் ஜனாதிபதியாகவும், தாய் பிரதமராகவும் பதவி வகித்தமை இலங்கையிலேயே முதல்தடவையாகும் எனவும் குறிப்பிடலாம்.

இருந்தபோதிலும் பெயரளவில் மட்டுமே திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்க கடந்த ஆறுவருடகாலமாகப் பிரதமமந்திரியாக இருந்தாரே தவிர சுயமாகத் தமது அலுவல்களைக் கவனித்து அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள அவருக்கு வயோதிபமும், உடல்நலக்குறைவும் இடந்தரவில்லை.

எனவே கடந்த சில வருடங்களாக சக்கரநாற்காலியில் இருந்தவாறே பிரதமர் சிறிமாவோ நடமாடிவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

உயிர்வாழும் இறுதி நாள்வரை பிரதமர் பதவியில் சிறிமாவோ பண்டாரநாயக்க இருப்பார் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஆயினும் இலங்கை அரசியலில் கடந்த சில வாரங்களாக இடம்பெற்று வருகின்ற நடவடிக்கைகள் பொது ஜன ஐக்கிய முன்னணியை விழிப்படைய வைத்ததாகவே இருக்கின்றது.

தள்ளாத வயோதிபத்தில் இருக்கின்ற ஒரு பிரதமரை வைத்துக்கொண்டு பாராளுமன்ற விவாதங்களை நடத்த மட்டுமல்ல, எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்குக் கூட முழுமூச்சோடு தயாராகமுடியாத நிலையையே சந்திரிகா அரசு எதிர்நோக்கியிருந்தது.

அண்மைக் காலங்களில் பொது ஜன ஐக்கிய முன்னணியின் முக்கிய அமைச்சர்களாக இருந்த தர்மசிறிசேனநாயக்க, சி.வி.குணரட்ண ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

தர்மசிறி சேனநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளராக இருந்தவர். சி.வி.குணரட்ண அக்கட்சியின் ஒரு பிரசாரப் பீரங்கியாகவும் இருந்தவர்.

எனவே கட்சியைப் பலப்படுத்தி தற்போது தமக்கெதிராக எழுந்துள்ள அரசியல் சூழ்நிலைகளைக் கையாளவேண்டிய நிர்ப்பந்தம் ஆளுங்கட்சியான பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாகவே சந்திரிகா அரசின் மூத்த அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.



திரு.ரட்ணசிறி விக்கிரமநாயக்க பிரதமராக நியமிக்கப்பட்ட மறுகணம் கண்டி நகருக்குச் சென்று அதிஉயர் பௌத்த பீடங்களான மல்வத்த, அஸ்கிரிய ஆகியவற்றின் பீடாதிபதிகளைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றிருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்த மசோதாவை முழுமையாக நிராகரித்தவர்களே கண்டியின் அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ஜனாதிபதி சந்திரிகா பாராளுமன்றில் உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்த மசோதாவை சமர்ப்பித்த பின்னர் இந்த இரு பீடாதிபதிகளையும் நேரில் சென்று சந்திக்க முயன்றார். ஆனால் அச்சந்திப்புக்கு இப்பீடாதிபதிகள் இருவரும் இடந்தந்திருக்கவில்லை.

ஆயினும் புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ள ரட்ணசிறிவிக்கிரமநாயக்க கண்டி சென்றிருந்த போது அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகள் அவருக்கு உற்சாகமாக வரவேற்பளித்திருந்தனர்.

இதனையடுத்து அப்பீடாதிபதிகளுடன் பேசிய புதிய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, எந்தவொரு புதிய அரசியலமைப்பின் விடயங்களும் பௌத்த பீடாதிபதிகளின் அனுமதியைப் பெற்ற பின்னரே பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்படும் என்று தெரிவித்திருந்தார்.

புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ள ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் இந்த முதலாவது கருத்துக்கண்ணோட்டம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சியைவிடப் பலம் மிக்கதாகவே பௌத்த பீடாதிபதிகளின் செல்வாக்கு விளங்குவதை எடுத்துக் காட்டுவதாக இருக்கின்றது.

அத்துடன் புதிய பிரதமரிடத்திலும் பேரினவாதத்தின் சாயல் பிரதிபலிப்பதையுமே அவதானிக்கக் கூடியதாகவிருக்கின்றது.

கடந்த காலங்களில் பதவியிலிருந்த இலங்கையின் பிரதமர்கள், ஜனாதிபதிகள் ஆகியோர் சிங்கள-பௌத்த பேரினவாதிகளின் மிரட்டல்களுக்கு அடிபணிய வேண்டியிருந்ததைப் போலவே திரு.ரட்ணசிறி விக்கிரமநாயக்கவும் பேரினவாதத்தின் ஆளுமைக்குக் கட்டுண்டிருப்பதைக் காண முடிகின்றது.

இந்நிலையில் ஆளுங்கட்சித்தரப்பில் ஜனாதிபதி சந்திரிகா தமது உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை அமுலாக்கப்போவதாக சூளுரைத்துள்ள அதேசமயம், பிரதமராகப் பதவியேற்றுள்ள ரட்ணசிறி விக்கிரமநாயக்க எந்தவொரு அரசியலமைப்புச் சட்டமும் நிறைவேற பௌத்த பீடாதிபதிகளின் சம்மதம் தேவை என்று கூறியுள்ளார்.

எனவே ஜனாதிபதி சந்திரிகாவும், பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவும் தத்தமது அணுகுமுறைகள் தொடர்பாக இருவேறு நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளதையே அவர்களது கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன.

பௌத்த-சிங்களக் கடும்போக்கென்பது பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெற்ற நாள் முதற்கொண்டு இலங்கை அரசியலில் புரையோடிப் போயிருக்கின்றது.

இக்கடும்போக்கே இலங்கையில் இன மத சௌஜன்யத்துக்கு வேட்டுவைப்பதாகவும் இருக்கின்றது.

இத்தடவை ஜனாதிபதி சந்திரிக்கா கொண்டுவர எத்தனித்த உத்தேச அரசியலமைப்பு மசோதாவைக் குழப்புவதில் கூட பௌத்த-சிங்களப்பேரினவாதத்தின் கரங்கள் ஓங்கியிருந்தன.

இப்பேரினவாதத்துக்கு மேலும் எண்ணெய் வார்த்து விடுவதாகவே புதிய பிரதமர் கூறியுள்ளவையும் விளங்குகின்றன.

இலங்கைப் பிரஜைகளாக சிங்கள, பௌத்தர்கள் மட்டும் இருக்கவில்லை. ஏனைய இனங்கள், மதங்களைச் சேர்ந்தோரும் இலங்கைப் பிரஜாவுரிமை பெற்றோராக இருக்கின்றனர்.

பௌத்தமதமென்பது மானிடதர்மத்தையே போதிக்கின்றதே தவிர தனி ஒரு இனத்தையோ அல்லது மதத்தையோ அனுசரிப்பதாக இருக்கவில்லை.

இந்நிலையில் தம்மைப் பௌத்த பீடாதிபதிகள் எனப் பிரகடனப் படுத்தியுள்ளோர், இன, மத வேறுபாடுகளுக்கப்பாற்பட்ட விதத்தில் மானிட மேம்பாட்டுக்காகக் குரல் கொடுக்க வேண்டியவர்களாகின்றனர்.

ஆனால் அவர்கள் அவ்வாறு செய்வதைத் தவிர்த்து எதிர்காலச்சந்ததியினர் மத்தியில் கூட இன, மத வாதங்களைப் பரவச் செய்வோராகவே இருக்கின்றனர்.

உத்தேச அரசியலமைப்பு மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுமே பௌத்தபிக்கு ஒருவர் கொழும்பு புறக்கோட்டையில் சாகும் வரை உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்தார்.

பின்னர் அம்மசோதாவைச் சட்டமாக்கும் முயற்சி கைவிடப்பட்டதும் அப் பௌத்த பிக்கு தமது உண்ணாவிரதப் போராட்டத்தை நிறுத்திக் கொண்டார்.

எனவே அப்பௌத்த பிக்குவின் உண்ணாவிரதப் போராட்டமென்பது பௌத்த மதத்துக்கே களங்கம் கற்பிப்பதாக இருக்கின்றது.

உத்தேச அரசியலமைப்பு மசோதா ஒன்றை எதிர்த்து சாகும் வரை உண்ணாவிரதமிருக்க முயன்ற பௌத்த பிக்கு, இலங்கையில் தினமும் பலர் இறந்து கொண்டிருக்கும் யுத்தம் குறித்து எத்தகைய கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளார் என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

கலிங்கப்போரில் வெறியாட்டம் நடத்தி பல உயிர்களைக் கொன்று குவித்த அசோகச்சக்கரவர்த்தியின் மனமாற்றத்துக்குக் காரணமாக இருந்தவர் ஒரு பௌத்த குருவே என்பது குறிப்பிடத்தக்கது. கலிங்கத்துப் போரின் முன்னர் சாம்ராட் அசோகன் ஒரு பௌத்தனாக இருக்கவில்லை. ஆனால் போர்க்களத்தில் அவனை ஒரு பௌத்தனாக மாற்றமடையச்செய்து, அவனைப் பௌத்த தர்மத்தையும் உலகில் பரப்புமளவுக்கு பௌத்த சந்நியாசி ஒருவரது போதனையே முக்கிய காரணமாக அமைந்திருந்தது.

இந்நிலையில் கடந்த சுமார் இருதசாப்த காலமாக இலங்கையில் தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தத்தையோ அல்லது அதனால் விரயமாகும் உயிரிழப்புக்களையோ தடுக்க முன்வராத பௌத்த சந்நியாசிகள், ஓர் அரசியலமைப்பு மசோதாவுக்காக சாகும் வரை உண்ணாவிரதமிருக்க முயன்றமை வேடிக்கையானதாகவே இருக்கின்றது.

சாகும் வரை உண்ணாவிரதமிருந்து இடை நடுவில் அதனைக் கைவிட்ட பௌத்தபிக்கு, யுத்தத்தை நிறுத்துமாறு கோரியும், சமாதானத்தை நிலை நிறுத்தக் கோரியும் சாகும் வரை உண்ணாவிரதமிருந்திருப் பாரேயானால்உலகமே வியக்கும் ஓர் அஹிம்சைவாதியாக அப்பிக்கு புகழீட்டியிருப்பார்.

ஆனால் அவர் அத்தகைய ஒரு 'மகாத்மா' என்ற நிலையை எட்ட விரும்பாது, குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவே சாகும் வரை உண்ணாவிரதமிருக்க முயன்றதை அறியமுடிந்தது.

அதேவேளை சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் தமிழ் அரசியல் தலைவர்கள் கூட தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்காக கொழும்பு காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் இருந்தனர்.

அஹிம்சை வழியில் நீதி, நியாயங்களை முன்வைத்து உரிமைகளைப் பெறவேண்டுமென்பதில் அவர்கள் குறியாக இருந்தனர்.

ஆனால் அவர்களது அப்புனிதமான போராட்டத்துக்கு அடியும், உதையுமே கிடைத்தனவே தவிர, அன்றைய ஆட்சியாளர்கள் தமிழ்த்தலைவர்கள் மேற்கொண்ட சத்தியாக்கிரகத்தை எவ்விதத்திலும் ஏற்கவில்லை.

காலிமுகத்திடலில் தமிழ்த்தலைவர்கள் நடத்திய சத்தியாக்கிரகம் பலாத்காரமாகக் கலைக்கப்பட்டு 40 ஆண்டுகளின் பின்னர் பௌத்தபிக்கு ஒருவர் கொழும்பில் நடத்திய சத்தியாக்கிரகத்துக்கு ஆட்சியாளர்கள் பணிந்து போயுள்ளதையே அவதானிக்க முடியகின்றது.

இதன் மூலம் நியாயமான உரிமைகளுக்காகக்குரல் கொடுக்கும் தமிழ்மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதை விட, பேரினவாதிகளின் அச்சுறுத்தல்களுக்கும், விருப்பு வெறுப்புகளுக்குமே ஆட்சியதிகாரங்களில் இருப்போர் செவிசாய்ப்பதைக் காண முடிகின்றது.

எது எப்படியிருந்த போதிலும் தற்போது நாட்டில் பாராளுமன்றம் கலைக்கப்படுவது பற்றியும் அடுத்த பொதுத்தேர்தல் நடத்தப்படுவது பற்றியுமே பேச்சுக்கள் பலமடைந்து வருகின்றன.

தற்போதைய பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னர் அரசியலமைப்புச் சீர்திருத்தம், இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சி எனப்பேசப்பட்ட விடயங்கள் யாவும் இருந்த இடம் தெரியாது போயுள்ளன.

இன்னும் சில மாதங்களில் புதிதாகப் பாராளுமன்றம் கூட்டப்படலாம். புதிய அரசியலமைப்புக்களும், புதிய ஆட்சியாளர்களும் கூட நாட்டில் தோன்றலாம்.

ஆனால் இந்த நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களல்ல. பேரினவாதத்தை ஆயுதமாகக் கொண்டவர்களே ஆட்சியதிகாரங்களைக் கொண்டிருப்பார்கள் என்பதையே கடந்த வாரச்சம்பவங்கள் எடுத்தியம்பியிருந்தன.

## அதிரடி அய்யாத்துரை



**இந்தியா தொட்டிலையும்** ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளிவிடுவது போல நடக்கப்பார்க்கிறது. இலங்கைக்கு இராணுவத் தளபாடங்களை விற்பனை செய்ய இந்தியா முன்வந்துள்ளது. இதனால் சமாதான விரும்பிகளுக்கு போர் நீண்டு செல்லுமோ என்ற அச்சம் எழுகின்றது. ஒரு நல்ல தீர்வுக்கு உதவத்தான் முடியாவிட்டாலும் உபத்திரவமாவது செய்யாதிருக்க வேண்டும். அயலில் ஒரு நல்ல நண்பனாக இருக்கவேண்டுமே தவிர, எரிகிற வீட்டில் பிடுங்குவது லாபம் என்றிருந்தால் அமைதி என்பது எப்போதுமே கைநழுவிச் சென்றவாறே இருக்கும்.

**இலக்கியவாதிகள், மூதறிஞர்களின்** விருப்புக்குரிய தொன்றாகவே இராமாயணம் இருக்கின்றது. கம்பர் இராமாயணத்தை தமிழில் தந்தது முதற் கொண்டு தமிழறிஞர்கள் பலரும் இராமாயணத்தை அழகுதமிழில் காலத்துக்கு காலம் எழுதிய வண்ணமே இருக்கின்றார்கள். எமது நாட்டிலும் கலாபூஷணம் இரா.பத்மநாதன் அவர்களின் கைவண்ணத்தில் 'கோதண்டம் ஏந்திய கோமகன்' என்ற இராமாயண நூல் வெளிவந்துள்ளது. எமது பத்திரிகை கலாபூஷணம் இரா.பத்மநாதன் அவர்களின் அந்த நூல் உருப்பெற களம் அமைத்திருந்தது. மேலும் அநேக படைப்புக்கள் கோதண்டம் ஏந்திய கோமகன் வரிசையில் பத்மநாதன் ஐயாவினால் வெளிக்கொணரப் படவேண்டும்.

**பிபிஸி தமிழோசை அறிவிப்பாளர்** மணிவண்ணன் கொழும்பு வந்திருந்தார். அண்மைக்காலத் தணிக்கை இலங்கையில் தமிழோசையை அடக்கி வாசிக்க வைத்துவிட்ட மன ஆதங்கம் மணிவண்ணன் மனதில் பிரதிபலித்ததை காணமுடிந்தது. பிபிஸி தமிழோசை ஒரு நாட்டின் தேசிய வானொலியூடாக இலங்கையிலேயே முதன் முதலில் வெளிவந்தது. ஆனால் அந்த ஒலி அலை உறவு நீடித்து நிலைக்காதது தான் கவலை.

**மலையகத்தில் வானில் மிதந்து செல்லும்** கேபிள்கார்களை அறிமுகஞ் செய்வதில் பல நிறுவனங்கள் ஆர்வங்காட்டுகின்றன. தரையில் ஓடும் ரயில்சேவை, பஸ்சேவை என்பவை தடம்புரண்டு ஒழுங்கின்றி இருக்குது. இந்நிலையில் முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவது போல கேபிள்கார்கள் எமக்குத் தேவைதானா? என்று கேட்கத்தோன்றுது! விரலுக்குகேற்ற வீக்கம் வேண்டும்.

**நான்கு வருடங்களுக்கு முன்னர்** யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசாமி யாழ்ப்பாணத்தில் கொலை செய்யப்பட்ட விவகாரம் ஒரு கொந்தளிப்பை ஏற்படுத்தி விட்டிருந்தது. கொலையுண்ட கிருஷாந்தியின் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி பழையமாணவியான மேபிள் குணரட்னம் என்ற கொழும்பு பல்கலைக்கழக மாணவி கடந்த வாரம் வீதி விபத்தில் கொல்லப்பட்டிருந்தார். அதன் காரணமாக இன, மத வேறுபாடுகளை மறந்து கொழும்பு பல்கலைக்கழகத்தின் சகல மாணவர்களும் வீதியில் இறங்கி அவ்விபத்தைக் கண்டித்தனர். தனியொரு தமிழ் மாணவிக்காக நடக்கப்பட்ட அம்மாணவர் ஆர்ப்பாட்டம் இளம் புத்தி ஜீவிகள் மட்டத்தில் நிலவும் இன ஐக்கியத்தையே காண்பித் திருந்தது.

# அவள்தான் ஆனந்தி!

மந்திரத்தால் மனுசனையும் கொல்லலாம்.
மங்கையரின் வனப்பையும் வெல்லலாம்.
வசதி படைத்த மந்திரவாதி நம்பூதிரியின் ஆசைகளுக்கு ஆப்பு வைக்க, ஆயத்தமானாள் அழகிய இளம் பெண்ணொருத்தி.
அவள்தான் ஆனந்தி.

## கடந்த வாரம்

ஆனந்தி வாழ்ந்த கிராமம் வறுமையோடு போராடியதால், அங்கிருந்து தன் கணவனுடன் பிழைப்பு தேடி கேசவ பூமிக்கு வந்தாள்.

நாற்பது வருடங்களுக்கு முன்னர், ஆனந்தி பேரழகுடன் இளமையும் பொழிய வந்தவளுக்கு, ஒரு நம்பூதிரியின் வயற் காட்டில் சிறு வேலை கிடைத்தது. அவளுடைய கணவன் பல்வேறு இடங்களில் வேலை தேடியும் நல்ல வேலை கிடைக்காததினால் அவனும் வாட்டமுற்றான்.

ஆனந்தி வேலை செய்த வயற்காட்டில் பெரும்பாலும் இளம் பெண்கள் தான் கூலியாட்களாக பணிபுரிந்தனர். அன்றாட வேலைக்குக் கிடைக்கும் கூலியைப் பெறுவதற்காக அப்பெண்கள் தங்கள் மானத்தை மறந்து முந்தானைச் சேலையை அவிழ்த்து அதில்தான் அன்றைய படிக்குரிய நெல்லைப் பெற்றுவந்தார்கள்.

மானமுள்ளவளான ஆனந்தியால் இந்த இழி செயலுக்கு இடம் தர முடியவில்லை. நம்பூதிரியின் விருப்பத்துக்கு மாறாக அவள் நடந்து கொண்டமையினால் அவளுடைய கணவன் அரவம் தீண்டி இறந்து போகிறான்.

அவனை அரவம் தீண்டியதற்கான காரணம் நம்பூதிரியின் மந்திர வலிமையே என்று ஊரவர்கள் கூறுகிறார்கள்.

ஆனந்தியின் கணவன் சந்திரனுடைய சடலத்தைச் சுமந்து கொண்டு அயலிலுள்ளவர்கள் நம்பூதிரியின் இல்லத்தின் முன்புறமாகக் கொண்டு வந்து கிடத்தினார்கள்.

கேசவன் நம்பூதிரி அப்போது தான் தூக்கத்தைத் தழுவ முற்பட்டிருந்தார். இதற்குள் மறுபடியும் ஒரு இடையூறா?

"யாருடா வாசல்லே?"

"நாங்க தான் திருமேனி!"

கதவைத் திறந்து கொண்டு வந்தவர் திடுக்கிட்டுப் போனார். ஊர் மக்கள் மொத்தப் பேரும் இல்லத்தின் முற்றத்தில்.

"என்னடா இந்த நேரத்திலே?"

ஒன்றுமே தெரியாத பாவனையில் உடலை வளைத்துக் கொண்டார் திருமேனி.

"உங்க மாந்த்ரீகத் திறமையைக் காட்டறதுக்கு வெகு நாளைக்கு அப்புறம் ஒரு சந்தர்ப்பம் திருமேனி..."

பூரித்துப் போனார் கேசவன் நம்பூதிரி.

"விஷயத்தைச் சொல்லுங்கடா...."

"ஒரு விஷக்கடி..."

"என்ன பாம்பு? பார்த்தது யாரு? அது போன திசை எது? எல்லாத்தையும் சரியாச் சொன்னாத்தாண்டா நான் உருச்செபிச்சு அந்தப் பாம்பையே வருவிக்க முடியும்...."

"ஒருத்தருமே பார்க்கலே திருமேனி!"

"அப்படியானா கொண்டு போய் ஒரு குழியை வெட்டிப் புதையுங்கடா பொணத்தை; என் தூக்கத்தை ஏன் கெடுக்கறீங்க?" வெருட்டென்று சொல்லி விட்டு உள்ளே போனார் திருமேனி. அவர் போன திசையில் குறுக்கே விழுந்தாள் ஆனந்தி.

"என்னை மன்னிச்சுடுங்க திருமேனி! ஊர் வழக்கம் தெரியாம நான் உடம்பிலே துணி போட்டது தப்புத்தான். பாருங்க இப்போ.... அவிழ்த்தெறிஞ்சுட்டு வந்திருக்கேன். என் புருஷனைக் காப்பாத்துங்க! என்னைக் காறிக் காறித் துப்புங்க! உங்க எச்சில் என்மேல படணும் அது தான் என் அதிஷ்டம்!" ஆனந்தியின் குரலில் ஒரு பரிதாபத்தின் ஒலம் தெரிந்ததோ.... தெரியவில்லையோ.... நம்பூதிரியின் கண்களுக்கு அவளது செழுமை அவ்வளவும் தெரிந்தது. கண்களின் கள்ளத்தனம், உதடுகளில் பரிவுணர்ச்சி.

"எழுந்திருடி.... எழுந்திரு...!"

"எனக்கு என் புருசன் வேணும்! அதுவரை உங்க காலடியில தான் விழுந்து கெடப்பேன்...! கடிச்ச பாம்பை வருவிக்கறதிலே உங்களை வெல்ல யாருமே இல்லேன்னு ஊரெல்லாம் சொல்லுது!" கைகளைப் பரப்பியபடி கெஞ்சினாள் ஆனந்தி.

"அதை நேருக்கு நேர் பார்த்தப்புறமாவது நீ என்கிட்டே தோற்றுப் போவாயா இல்லியா சொல்லடி!" கேட்டார் நம்பூதிரி.

"இப்பவே தோத்துட்டேன் திருமேனி.,"

அவள் சட்டென்று நம்பூதிரியின் பாதங்களைப் பற்றிக் கொண்டாள்.

அந்த ஸ்பரிசம்., நம்பூதிரியின் கவனம் முழுவதையும் திசை திருப்பி விட்டது. அவ்வளவுதான்! பெருமிதத்தோடு அங்கேயே பத்மாசனம் போட்டு அமர்ந்தார். ஒரு மானிட அழகின் மீது ஏற்பட்ட வசியம், தனது மந்திர மூர்த்தியை ஊர் முன்னால் மறுபடியும் அழைக்கிற உணர்வுக்குள் உந்தித் தள்ளியது நம்பூதிரியை.

எந்த வல்லவனையும் சறுக்கித் தள்ளுகிற வழுக்குப்பாறை தான் காமக்கிளர்ச்சியோ!

கேசவன் நம்பூதிரி உள்ளத்துக்குள் பாதி இந்த உணர்வால் மறைந்து போக... மீதில் மந்திர முழக்கங்கள் துள்ளத் தொடங்கின.

கடித்த பாம்பே வந்து கடி வாயிலிருந்து விஷத்தை உறிஞ்சி எடுக்கப் போகிற அதிசயத்தைக் காண, ஊரே கூடி நின்றது நம்பூதிரியின் இல்ல முற்றத்தில். அவருக்கோ ஊர்மக்களை அப்போது கண்ணுக்கே தெரியவில்லை. விஷம் ஏறிய கணவரின் அருகே வேதனை சுமந்து கொண்டு வெற்றுடம்போடு ஊர் வழக்கப்படி உட்கார்ந்திருந்தவள் மட்டுமே தெரிந்தாள்.

துரித கதியில் மந்திர உச்சாடனம் நடந்தது!

எல்லாரும் எந்த வழியாகப் பாம்பு வருகிறதென்றே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் பாம்பு...

நம்பூதிரியின் வீட்டுக்குள்ளிருந்து வந்தது! நம்பூதிரி வளர்க்கிற ஒரு பிராணி கூப்பிட்டதுமே வந்து நிற்கிற மாதிரி... அது வந்தது. சந்திரனின் அருகே போயிற்று. கடிவாயில் தன் முகம் பதித்தது!

எல்லாரும் இந்தக் காட்சியையே மூச்சற்றுப் பார்த்தபடி நின்றிருந்தனர். சற்று நேரத்தில் சந்திரனின் கண்கள் அசைந்தன. பாம்பு சட்டென்று திரும்பியது.

சீறிக் கொண்டு போயிற்று. வீட்டுக்குள் அல்ல! அங்கே வீற்றிருந்த நம்பூதிரியின் அருகே! அடுத்த கணமே யாரும் எதிர்பாராத ஆச்சரியம்... அதிர்ச்சி!

நம்பூதிரி கேசவன் மல்லாந்து வீழ்ந்தான்.

அவரைச் சுற்றிக் கொண்டு இறுக்க ஆரம்பித்தது பாம்பு. நம்பூதிரியின் எலும்புகள் அப்படியே நொறுங்கிப் போகிற சத்தம்!

ஆனந்தி எழுந்து நின்று சிரித்தாள்!

இடுப்பு வரை கட்டியிருந்த முண்டை உயர்த்தி மார்புகளை மறைத்துக் கொண்டாள். நம்பூதிரியின் மூளையை ஒரு கணத்தில் மழுங்க அடித்துப் பழிதீர்த்த திருப்தி அவள் முகமெல்லாம் நிறைந்திருந்தது. ஓடி வந்து கணவனைத் தழுவிக் கொண்டாள்.



"எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நம்பூதிரி ஏமாந்துட்டான்! என் உடம்பைப் பார்க்கிற உற்சாகத்திலே எல்லாமே மறந்து போச்சு! மந்திர மூர்த்திகள்.. உபாசகன் சொல்ற எந்த ஏவலையும் சொன்னா சொன்னபடி நிறைவேத்திக் குடுக்கும். ஆனா செஞ்ச காரியத்தையே மறுபடியும் மாற்றிச் செய்யச் சொன்னா அதுகளுக்குக் கோபம் வரும். சாதாரணக் கோபமில்லே.. அடக்க முடியாத கோபம். அவன் எவ்வளவு பெரிய மாந்திரீகனா இருந்தாலும் அவனை மோதி உயிர் குடிக்கற கோபம். எதிரடிகளுக்கு எப்பவுமே சக்தி அதிகம்...!" சொல்லிக் கொண்டே நடந்தாள் ஆனந்தி.

மக்கள் அத்தனைபேரும் முதலில் அவள் சொன்னது எதையும் விளங்கிக் கொள்ளாமல், துடித்துக் கொண்டிருந்த நம்பூதிரியையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

சிறிது நேரத்தில்......

நம்பூதிரியை வளைத்திருந்த பாம்பு மாயமாகிப் போயிற்று! அப்புறம் அந்த வீட்டிலிருந்து எது எதுவோ மேலே சிதறி மாயமான காட்சியையும் மக்கள் பார்த்தார்கள்!

அப்புறம்தான் கேசவபூமியாக இருந்த அந்த ஊரே ஆனந்தபுரியாயிற்று! புதுசு புதுசாய்த் தலை தூக்கிய தலைமுறை மொத்தமும், தன்மான உணர்வோடு வளர்ந்ததே அப்புறம்தான்!

■■

## ஒப்பரேஷன் ஜென்டில்மென்



கிரிக்கெட் ஊழலில் சம்பந்தப்பட்ட கிரிக்கெட் வீரர்கள் மற்றும் ஊழல்களில் சம்பந்தப்பட்ட ஏனையோரது வீடுகள் மற்றும் நிறுவனங்கள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இந்த ஊழல்களில் சம்பந்தப்பட்டவர்களைப் பிடிப்பதற்காக நடத்தப்பட்ட நடவடிக்கைக்கு இடப்பட்ட கௌரவமான பெயர்தான் 'ஒப்பரேஷன் ஜென்டில்மென்'.

கடந்த ஜூலை மாதம் 20ம் திகதி இந்தியாவின் மும்பை, கல்கத்தா, புதுடில்லி, ஹைதராபாத், அஹமதாபாத், பாட்டியலா, பெங்களூர் ஆகிய நகரங்களில் 93 வீடுகள் மற்றும் நிறுவனங்கள் 750 வருமானவரிப் புலனாய்வுத் துறை அதிகாரிகளால் சோதனையிடப்பட்டன.

கிரிக்கெட் ஊழலில் சம்பந்தப்பட்ட இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளார் கபில்தேவ், ஜடேஜா, அஸாருதீன், சித்து, மனோஜ் பிரபாகர் தொடங்கி பலரது வீடுகள், பண்ணை வீடுகள், நிறுவனங்கள் யாவும் முற்றுகையிடப்பட்டு சோதனையிடப்பட்டன.

## உயிர் தப்பிய பெண்மணி

'பாம்பு கடித்து உயிரோடு இருப்பவனும் இருக்கிறான், செருப்புக்கடித்துச் செத்தவனும் இருக்கிறான்' என்று சொல்வார்கள்.


பெல்ஜியத்தைச் சேர்ந்த 37 வயதான ஒரு பெண் (பெயர் குறிப்பிடப் படவில்லை) இதில் முதல் வகையைச் சேர்ந் தவர்.

வாழ்க்கையில் இவருக்கு என்ன வெறுப்பு ஏற்பட்டதோ தெரியவில்லை. தற்கொலை செய்யத் தீர்மானித்தார்.

உடனே அடுக்குமாடிக் கட்டடமொன்றின் 27வது மாடியில் இருந்து குதித்தார். அவரது எண்ணம் நிறைவேறவில்லை.

ஆம், 87 மீட்டர் உயரத்தில் இருந்து கீழே விழுந்தும் அந்தப் பெண் அதிசயமாக உயிர்தப்பினார்.

## பணத்திற்காக நடத்தப்பட்ட நாடகம்



பணமா? பாசமா? என்றால் பணம் என்று சொல்கிறது இந்தச்சம்பவம்.

பினாங்பென்னைச் சேர்ந்த ஒருவர், தனது மகனைக் காணவில்லை என்றும், மகனை யாரோ கடத்திச் சென்று 10 ஆயிரம் டொலர் கொடுத்தால் விட்டு விடுவதாகவும் செய்தி வந்ததாக பொலிஸில் புகார் செய்தார்.

ஆனால் உண்மையில் நடந்தது என்ன தெரியுமா? அவரே தனது மகனை மறைத்து வைத்துவிட்டு. தனது பணக்கார மனைவியிடம் பணத்தைப் பெறுவதற்காக நாடகமாடியிருக்கிறார்.

இதைப் பொலிஸார் கண்டு பிடித்து விட்டனர். இப்போது சட்டத்தின்படி தண்டனையையும், மகனைத் தொந்தரவு செய்ததற்காகத் தண்டனையும் வழங்க வழக்குத் தொடர்ந்திருக்கிறார் இவரது பணக்கார மனைவி.

## 4 வயதிலேயே பாலியல் கல்வி

பாலியல் கல்வி அவசியமா, அவசியம் இல்லையா என்று விவாதம் செய்து கொண்டிருக்கும் இவ்வேளையில் தாய்லாந்து நாட்டில் பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவர்களுக்கு பாலியல் கல்வி கற்றுக் கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது.

அதுவும் 4 வயதில் இருந்தே பாலியல் பாடத்தை ஆரம்பிக்கவுள்ளது. அதனால் எய்ட்ஸ் நோய் பரவுவதைத் தடுக்கவும், பெண்கள் சிறுவயதிலேயே கர்ப்பமாவதைத் தடுக்கவும் முடியும் என்று அங்கு எதிர்பார்க்கப்படுகிறது.

மாணவ மாணவிகளுக்குச் சிறுவதில் இருந்தே பாலியல் பாடம் சொல்லிக் கொடுப்பது எளிது என்று தாய்லாந்து ஆசிரியர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தாய்லாந்து நாட்டில் சுமார் 10 இலட்சம் பேர் வரை எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

## இதுதாண்டா ஜனநாயகம்



இங்கிலாந்தில் ஜனநாயகம் எந்தளவுக்கு கடைப்பிடிக்கப்படுகிறது என்பதற்கு உதாரணமாக ஒரு மெய்சிலிர்க்க வைக்கும் சம்பவம் இது.

இங்கிலாந்து அமைச்சர் ஜக் ஸ்ட்ராவுக்கு, கட்சிக் கூட்டம் ஒன்றில் பிரதமர் டொனி பிளேயரைச் சந்தித்துப் பேச வேண்டிய ஒரு கட்டாயம். ஆனால் இவர் புறப்படத் தாமதமாகிவிட்டது.

இதனால் இவரது கார் மணித்தியாலத்தில் 103 மைல் வேகத்தில் பறந்தது. காரை ஓட்டியது அமைச்சரின் மெய்ப் பாதுகாவலர் ஒருவர்.

மணித்தியாலத்திற்கு 100 மைல் வேகத்திற்கு மேல் சென்றால் அந்தக் காரைப்பறிமுதல் செய்ய வேண்டும் என்பது இங்கிலாந்தில் பிறப்பிக்கப்பட்டிருக்கும் சட்டம். மூன்று மைல் வேகம் தானே அதிகம் என்று அலட்சியம் செய்யப்படவில்லை.

அமைச்சர் ஜக் ஸ்டரா காரைப் பொலிஸார் பறிமுதல் செய்துவிட்டனர். அமைச்சர் அபராதம் கட்டித்தான் அந்தக் காரை வெளியே எடுக்க வேண்டும்.

இதில் சுவாரசியம் கொஞ்சம் குறைந்திருந்தால் அடுத்த வரியைப் படியுங்கள்.

பொலிசாரால் தடுத்து நிறுத்தப்பட்டு பறிமுதல் செய்யப்பட்ட அந்தக் காருக்கு சொந்தக்காரர் ஜக் ஸ்ட்ரா என்ன அமைச்சர் தெரியுமா?


இங்கிலாந்தின் பாதுகாப்பு அமைச்சர். இதுதாண்டா ஜனநாயகம் என்று சொல்லத்தோன்றுகிறதல்லவா?

## சிறுமியின் சம்பாத்தியம்

↓ 'இரும்புத்திரை நாடு' என வர்ணிக்கப் பட்ட ரஷ்யாவில் கம்யூனிசம் கைவிட்டுப் போனதைத் தொடர்ந்து அங்கு வறுமை தாண்டவ மாடுகிறது.

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவின் முக்கிய வீதியொன்றில் வயலின் வாசித்துப் பணம் சம்பாதிக்கிறார் இந்த ஏழைச்சிறுமி. இப் போது வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் ரஷ்யாவுக்குச் செல்கிறார்கள்.

இந்தச் சிறுமி மிகப் பிரமாதமாக வயலின் வாசிப்பதால் சில்லறை கொஞ்சம் அதிகமாகவே சேர்கிறது.





## இடம்பெயரும் பறவைகள்

↑ மனிதர்கள் மட்டும் தான் பல்வேறு காரணங்களுக்காக நாடு விட்டு நாடு சென்று அடைக்கலமாவார்கள் என்றில்லை. சில வகைப் பறவைகளும் தான். பறவைகள் தமது நாடு விட்டு இன்னொரு நாட்டிற்குச் சென்று அடைக்கலமாவது காலநிலை மாற்றத்தினால்.

பல ஆயிரக்கணக்கான தொலைவுக்கப்பாலிருக்கும் சைபீரியா நாட்டைச் சேர்ந்த பறவைகள் தான் இவை. இந்தப் பறவைகள் இப்போது குடியேறியிருப்பது இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள பறவைகள் சரணாலயம் ஒன்றில்.

சைபீரியா நாட்டில் ஜூலை மாதத்தில் ஏற்படும் கடுங்குளிரைத் தாங்க முடியாமல் அங்கிருந்து தெற்காசிய நாடுகளுக்குப் பறவைகள் இடம் பெயர்வது வழமை.




## பெண்களுக்கு அனுமதிப்பத்திரம்

↑ ஆண்களுக்குத் தாம் ஒன்றும் சளைத்தவர்கள் அல்ல என்று நிரூபிக்கும் வகையில் பெண்கள் சகலதுறைகளிலும் சாதனை படைத்து வருகிறார்கள். பல நாடுகளில் பெண்களின் நிலை அவலமாகிவிடுகிறது என்பதையும் மறுக்க முடியாது.

பெண்கள் விண்வெளி ஓடத்தில் விண்வெளிக்குச் சென்று திரும்பும் இக்காலகட்டத்தில், துபாய் நாட்டில் இப்போது தான் பெண்கள் வாடகைக்கார்களை ஓட்ட அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

பல நிபந்தனைகளுடன் முதன்முதலாக இந்த அனுமதியை துபாய் போக்குவரத்துக் கூட்டுத்தாபனம் 7 அரபியப் பெண்களுக்கு வழங்கியுள்ளது. இந்த நடைமுறை சரிவரும் பட்சத்தில் தொடர்ந்து அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும்.

(பட உதவி : எம்.மன்சூர்-துபாய்)

தகவல் பெட்டி

## திருமண விபரீதம்

↓ மூட நம்பிக்கையின் உச்சக்கட்டமாக அண்மையில் ஒரு சம்பவம் இந்தியாவில் அரங்கேறியிருக்கிறது.

மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த பெற்றோர் தங்களது 4 வயது நிரம்பிய மகள் அஞ்சுவுக்கு ஒரு நாயைத் திருமணம் செய்து வைத்துள்ளனர். இதற்கு ஒப்புதல் அளிப்பது போல் இந்த விபரீதத் திருமண நிகழ்ச்சியைப் யாவரும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இந்தச் சிறுமிக்கு அடிக்கடி உடல்நலக் குறைவு ஏற்படுவதால் அதைத் தடுக்கவே இந்தத் திருமணம் என்று காரணம் கூறிய சிறுமியின் தந்தை இப்போது கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறார்.



## அசலும் நகலும்

↓ உலகப்புகழ்பெற்ற பொப்பிசைப் பாடகரான மைக்கல் ஜாக்ஸனின் இந்த இரு உருவங்களில் அசல் யார் என்று கண்டு பிடிக்க முடிகிறதா? வலது புறம் இருப்பவர் தான் அசல் ஜாக்ஸன். மற்றது ஜாக்ஸனின் நகல்.

இங்கிலாந்தில் உள்ள மெழுகு பொம்மைக் காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஜாக்ஸனின் பொம்மை தான் மற்றது. இந்த பொம்மையை உருவாக்க மைக்கல் ஜாக்ஸன் மூன்று தடவைகள் அங்கு சென்று உதவினார்.





## ஆற்றில் எண்ணெய்ப்படலம்

↑ தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுகளில் ஒன்றான புகை எப்படி காற்றை அசுத்தமாக்குகிறதோ, அதே போல் எண்ணெய்க் கழிவும், நீர் நிலைகளில் கலந்து பெரும் அபாயத்தை ஏற்படுத்துகின்றது.

அண்மையில் பிரேஸில் நாட்டுத்தொழிற்சாலையில் இருந்து வெளியேற்றப்பட்ட எண்ணெய்க் கசிவு அருகில் உள்ள ஆறு ஒன்றில் கலந்து விட்டது. ஆற்றில் 30 மைல் நீளத்திற்கு ஒரே எண்ணெய்ப்படலம். இதனால் அந்த ஆற்று நீரைப் பயன்படுத்த முடியாமல் போய் விட்டது.

எனவே இந்த எண்ணெய்ப்படலத்தைக் கட்டுப்படுத்தும் மீட்புப்பணியில் ஈடுபட்டனர்.

## மனிஷா ஏமாற்றம்

'முதல்வன்' இந்தியில் 'நாயக்' என்ற பெயரில் தயாராகி வருகிறது. இந்திப் படத்தையும் ஷங்கர் தான் இயக்குகிறார். தமிழ் 'முதல்வனி'ல் மனிஷா கொய்ராலா நடித்த வேடத்தில் இந்தியில் ராணி முகர்ஜி நடித்து வருகிறார்.

'இந்தியன்', 'முதல்வன்' ஆகிய படங்களில் தன்னை நாயகியாக்கிய ஷங்கர், 'நாயக்'கில் தன்னை நாயகியாக்காததால் ஏமாற்றமடைந்துள்ளார் மனிஷா.

## பெயர் மாறிய இயக்குநர்

சரத்குமார்-தேவயானி நடித்த 'மூவேந்தர்' படத்தை இயக்கியவர் சுந்தர் சியிடம் உதவியாளராக இருந்த சுராஜ் என்பவர். இவர் இப்போது சத்யராஜ்-கௌசல்யா நடிக்கும் 'குங்குமப்பொட்டுக் கவுண்டர்' என்ற படத்தை இயக்கி வருகிறார்.

இப்போது இவர் தனது பெயரை சாய்சுரேஷ் என்று மாற்றிக் கொண்டு இப்படத்தை இயக்கிவருகிறார்.

## மும்மொழிக் கலைஞர்கள்

விஜயகாந்த் நடிக்கும் புதிய படம் 'வாஞ்சிநாதன்'. இப்படத்தை பிரபல மலையாள இயக்குநர் ஷாஜி கைலாஷ் இயக்கி வருகிறார். இப்படத்தின் கதையை எழுதியுள்ளார் சின்னி கிருஷ்ணா என்னும் தெலுங்குக் கதாசிரியர்.

தமிழ்-மலையாளம்-தெலுங்கு ஆகிய மூன்று மொழிக்கலைஞர்களும் இப்படத்தில் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள்.

## ஒதுங்குகிறார் சிம்ரான்

சிம்ரான்-நடன இயக்குநர் காதல் கல்யாணத்தில் முடியும் என எதிர்பார்க்கப்பட்டது. இப்போது இதைப் பொய்யாக்கி விட்டு இருவரும் பிரிந்து விட்டனர்.

தமிழில் கைவசம் இருக்கும் 'உதயா', 'பிரியமானவளே' ஆகிய படங்களை நடித்துக் கொடுத்து விட்டுத்தமிழில் இருந்து ஒதுங்கவுள்ளார் சிம்ரான்.

தெலுங்கில் இவரது படங்கள் எல்லாம் வெற்றி பெறுவதால் இவருக்கு தெலுங்கில் நல்ல வரவேற்பு. இப்போது பல தெலுங்குப்படங்களில் நடிக்க ஒப்புக் கொண்டுள்ள சிம்ரான் விரைவில் ஆந்திராவில் சென்று தங்கிவிடுவார் போல் தெரிகிறது.

## கார்த்திக் நடிக்கும் 'ஒருவர் மனதிலே ஒருவரடி'

எம்.ஜி.ஆர்., சிவாஜி, என்.டி.ஆர் போன்ற பெரிய நடிகர்களை வைத்துப் பல படங்களைத் தயாரித்தவர் கோவை செழியன். முத்துராமன் நடித்த 'சுமைதாங்கி' படத்தையும் இவர் தான் தயாரித்தார்.

கோவை செழியன் மறைவுக்குப் பின் இவரது மகன் கபிலன் தயாரிப்பாளராகியுள்ளார். இப்படத்தில் கார்த்திக் கதாநாயகன். படத்திற்கு 'ஒருவர் மனதிலே ஒருவரடி' என்று பெயரிடப்பட்டுள்ளது. கார்த்திக்கிற்கு ஜோடியாக நடிக்கும் இரு கதாநாயகிகள் தேர்வு நடைபெறுகிறது. இவர்களுடன் மணிவண்ணன், ராதாரவி, செந்தில், விவேக், சார்லி, தாமு, அம்பிகா, ஜோதி, சத்யப்பிரியா மற்றும் பலர் நடிக்கின்றனர்.

கார்த்திக் நாயகனாக நடித்த 'பூவேலி', 'ரோஜா வனம்' ஆகிய படங்களை இயக்கிய 'தலைவாசல்' செல்வா இப்படத்தை இயக்குகிறார். கதை, திரைக்கதை, வசனமும் இவரே. தேவா இசையமைக்க, வைரமுத்து பாடல்களை எழுதுகிறார்.



குஷ்பு-ரோஜா-கோவை சரளா
படம்: கூடி வாழ்ந்தால் கோடி நன்மை





## சங்கவி சந்தோஷம்

சங்கவியின் கையில் இருக்கும் ஒரேயொரு தமிழ்ப்படம் 'ஸ்ரீராமஜெயம்'. இப்படத்தின் படப்பிடிப்புகள் சில காலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

இப்போது 'ஸ்ரீராமஜெயம்' படத்தின் பெயர் 'ரிஷி' என்று மாற்றப்பட்டு மீண்டும் படப்பிடிப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன. இதனால் சந்தோஷத்தில் இருக்கிறார் சங்கவி.

## பாராட்டும் படவாய்ப்பும்

இளம் நகைச்சுவை நடிகர்களின் வருகையால் படங்கள் எதுவும் இல்லாமல் இருந்தவர்களில் ஒருவர் சார்லி. ஓடிக்கொண்டிருக்கும் 'வெற்றிக்கொடி கட்டு' படத்தில் நகைச்சுவை, குணசித்திரம் இரண்டிலும் அசத்திய சார்லியை பாராட்டாத பத்திரிகைகளே கிடையாது.

அதே போல் சார்லியைப் பார்ப்பவர்களும் பாராட்டுத் தெரிவித்து வருகிறார்கள். அதுமட்டுமில்லாமல் இப்படத்தின் வெற்றியால் பல புதிய படவாய்ப்புக்களும் வந்து கொண்டிருக்கின்றன.



சங்கீதா

## திகில் மழை

குரு சக்ரா என்னும் புதிய படநிறுவனம் 'பருவமழை' என்னும் படத்தைத் தயாரித்து வருகிறது.

நாயகன்-நாயகியுடன் சுற்றுலா சென்ற குழு ஒன்று நடுக்காட்டில் வழி தெரியாமல் மாட்டிக் கொள்கிறது. அவர்களில் ஒவ்வொருவராக மாயமாக மறைந்தும் விடுகிறார்கள். மறைந்தவர்கள் என்ன ஆனார்கள், என்பதை திகிலுடன் படமாக்கி வருகிறார்கள்.

இதில் புதுமுகம் உஸ்மான், அல்போன்ஸா, பாபி, சிலோன் மனோகர், இந்து, மதுமிதா போன்றோர் நடிக்கின்றனர்.

இப்படத்தின் கதை, திரைக்கதை, வசனம் அமைத்து இயக்குகிறார் ஷிவா.

## இரட்டையர்கள் இயக்கும் 'சகியே....'

எஸ்.வி.கிரியேஷன்ஸ் என்னும் புதிய பட நிறுவனம் தயாரிக்கும் படம் 'சகியே..'. இப்படத்தில் நாயகன்-நாயகியாகப் புதுமுகங்கள் நடிக்கிறார்கள். இவர்களுடன் முன்னணி நட்சத்திரங்களும் பங்கு பெறுகிறார்கள்.

ரவி-ராஜா என்னும் இரட்டையர்கள் இப்படத்தை இயக்க பிரதீப்-ரவி இரட்டையர்கள் இசையமைக்கிறார்கள். தயான் ஒஷோ என்பவர் ஒளிப்பதிவு செய்கிறார்.

## முகப்பில்

நாசர்-குஷ்பு
படம் : கூடிவாழ்ந்தால் கோடி நன்மை

பிரபுதேவா-ஜெயாசீல்
படம் : பெண்ணின் மனதைத் தொட்டு

## மினி சினி

✪ அஜித்குமாருக்கு நட்சத்திர அந்தஸ்தை ஏற்படுத்திக் கொடுத்த படம் வசந்த் இயக்கிய 'ஆசை'. இப்படத்தின் பின் வசந்த் இயக்கும் படமொன்றில் அஜித் நாயகனாக நடிக்கவுள்ளார்.

✪ தமிழில் அறிமுகமாகி வாய்ப்பில்லாமல் இருக்கும் கீர்த்தி ரெட்டி, லைலா, ரியா சென் ஆகிய மூன்று நடிகைகளும் தற்போது இந்திப் படங்களில் நடித்து வருகிறார்கள்.

✪ சின்னி ஜெயந்தின் 'உனக்காக மட்டும்' படத்திற்கு இசையமைத்திருப்பவர் பாபிஷங்கர் என்னும் புதியவர். இவர் இரட்டை இசையமைப்பாளர்களில் ஒருவரான சங்கரின் (கணேஷ்) மகன் ஆவார்.

✪ மலையாளப் படவுலகில் கதாநாயகிகளுக்கென்று எப்போதும் தனிப்பட்ட மவுசு கிடையாது. இப்போது அங்கு சம்யுக்தா வர்மா நடிக்கும் படங்களுக்கு விநியோகஸ்தர்கள் மத்தியில் நல்ல எதிர்பார்ப்பு இருக்கிறது.

✪ 'அலைபாயுதே' படத்தை அடுத்து மணிரத்னம் இயக்கும் படத்தில் கதாநாயகனாக மாதவனே நடிக்கவுள்ளார். இந்தப் புதிய படத்தில் இசையமைப்பாளராக புதியவர் ஒருவர் அறிமுகமாகவுள்ளார்.

✪ 'சேது' படத்தின் பின் புதுப் படவாய்ப்பில்லாது நொந்து போயிருந்த அபிதா இப்போது சந்தோஷத்தில் இருக்கிறார். 'சீறி வரும் காளை', 'பூவே பெண் பூவே' உட்பட 4 படங்களில் தனிக் கதாநாயகியாக நடிப்பதே இதற்குக் காரணம்.

✪ 'என்றென்றும் காதல்', 'குட்லக்' ஆகிய படங்களைத் தயாரித்த மனோஜ் பட்நாகர் இப்போது விஜயகாந்த் நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளார். இப்படத்தை 'கண்ணுபடப் போகுதய்யா' பாரதி கணேஷ் இயக்கவுள்ளார்.

✪ விஜய்-சிம்ரன் நடிக்கும் 'உதயா' படத்தின் தயாரிப்பாளர் 'பிரமிட்' நடராஜன் நிதிநெருக்கடியில் இருப்பதால், இப்படத்தை மேற்கொண்டு தயாரித்து வெளியிட முடிவு செய்துள்ளார் எஸ்.ஏ.சந்திரசேகரன்.



புதுமுகங்கள் கமலேஷ்-நிஷா
படம்: டிக்

# பிரபல நடிகருக்குக் கொலை மிரட்டல்

'சீமான்' என்று பொருள்படும் ஆங்கில வார்த்தையைத் தனது பெயருக்கு முன்னால் அடைமொழியிட்டுக் கொண்ட தயாரிப்பாளரால் 'காதல்' படமொன்றில் அறிமுகமானவர் அந்த நான்கெழுத்து இளம் நாயகன்.

முதல் படத்தின் மூலம் மிகப் பிரபல மான அந்த இளம் நாயகன் சரியாகப் படங்களைத் தேர்ந்தெடுத்து நடிக்காத தால் வந்த வேகத்திலேயே மறைந்து விட்டார்.

இவர் பிரபலமாக இருந்த நேரத்தில் 'மணி'யான இயக்குநரிடம் உதவியாளராக இருந்த ஒருவர் இவரை வைத்து கன்னடப் படம் ஒன்றை இயக்கினார். 'அமைதி அமைதி அமைதி' என்பதை வேறு விதமாகச் சொல்லும் வகையிலான அப்படம் கன்னடத்தில் பெரிதாக ஓடவில்லை.

அந்தப் படத்திற்காக இளம் நடிகருக்குப் பேசப்பட்ட தொகையில் ஒரு பகுதி தயாரிப்பாளரால் கொடுக்கப்படவில்லை. நடிகரும் பேசாமல் இருந்து விட்டார்.

இப்போது அந்தப் படத்தில் இளம் நடிகரது நண்பர்களில் ஒருவராக நடித்த நடிகரின் தமிழ்ப்படம் ஒன்று வெற்றிகரமாக ஓட, அந்தக் கன்னடப்படத்தைத் தமிழில் மொழிமாற்றி வெளியிடும் வேலைகளில் இறங்கினார் தயாரிப்பாளர்.

அப்படத்தை தமிழிலோ அல்லது வேறு மொழிகளிலோ மொழி மாற்றி வெளியிட்டால் 5 இலட்சம் ரூபாய் இந்த இளம் நடிகருக்குக் கொடுக்க வேண்டும் என்பது ஒப்பந்தம்.

அப்படம் தமிழில் வெளியிடப்படும் செய்தி அறிந்ததும் இளம் நடிகர், தன்னிடம் தயாரிப்பாளர் செய்த ஒப்பந்தத்தின்படி 5 இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்று தனது மனேஜர் மூலம் தெரிவித்தார்.

இளம் நடிகரின் மனேஜர் படத்தயாரிப்பாளிடம் சென்று, நடிகருக்கு வர வேண்டிய பணத்தைக் கேட்டிருக்கிறார்.


அதற்கு ஒழுங்காகப் பதிலளிக்காத அந்தத் தயாரிப்பாளர்,

"பணம் என்று என்னிடம் பேசினால் உன்னையும் அந்த நடிகரையும் பிணமாக்கி விடுவேன்" என்று சினிமாப் பாணியில் மிரட்டி அனுப்பிவிட்டார்.

அத்துடன் நிற்காமல், அந்த இளம் நடிகரின் குடும்பத்தினருக்கு ஃபோன் செய்து, "என்னிடம் பணம் கேட்டால் அவனைக் கொன்று விடுவேன்" என்றும் மிரட்டியுள்ளார்.

இதனால், அந்த இளம் நடிகர், தயாரிப்பாளர் மீது ஃபிலிம் சேம்பரில் புகார் செய்துள்ளார்.

## சினி விசிட்



சத்யராஜ்-ரவளி
படம்: உன்னைக் கண்தேடுதே

### நெப்போலியனின் நம்பிக்கை

கன்னடம்-மலையாளம் ஆகிய மொழிகளில் ஓரிரு படங்களிலும் தமிழில் இரண்டு படங்களிலும் நடித்து வந்தார் நெப்போலியன். புதுப்படவாய்ப்புகள் எதுவும் அவருக்கு வரவில்லை.

நீண்ட காலத்திற்குப் பின் முரளியுடன் 'மனுநீதி'யிலும் பிரபுவுடன் 'மிட்டா மிராசு' விலும் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இவை இரண்டும் வெளிவந்ததும் தான் மீண்டும் தமிழில் வலம் வருவேன் எனக் கூறி வருகிறார் நெப்போலியன்.



சின்னிஜெயந்த்-புதுமுகம் பூனம்-சத்யபிரியா
படம்: உனக்காக மட்டும்

### வித்தை கற்கும் விக்ரம்

'சேது' படத்தை அடுத்து விக்ரம் நடித்து வரும் படங்களில் ஒன்று 'விகடன்'. அகத்தியனின் உதவியாளர் ஏ.எல். பிரபு இயக்கும் இப்படத்தில் விக்ரமிற்கு மாஜிக் நிபுணர் வேடம்.

தனது வேடம் படத்தில் சிறப்பாக வரவேண்டும் என்பதற்காக மாஜிக் கற்று வருகிறார் விக்ரம். பெங்களூரைச் சேர்ந்த பிரபல மாஜிக் நிபுணர் ரமேஷ் என்பவர் தான் விக்ரமிற்கு வித்தை கற்றுக் கொடுக்கும் குரு.

### தமிழுக்கு வரும் பூமிகா

'குஷி' படத்தின் தெலுங்குப் பதிப்பில் நடித்துவருகிறார் தெலுங்கில் முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் இளம் நடிகை பூமிகா. தெலுங்கில் பூமிகாவின் வளர்ச்சியைக் கண்ட இயக்குநர் பவித்ரன் சரத்குமார் நடிக்கும் 'புகழ்' படத்தில் இவரை நாயகியாக்கி விட்டார்.

### சங்கீதாவின் முயற்சி

சங்கீதா என்று தனது பெயரை மாற்றிக் கொண்ட ரசிகாவுக்குத் தமிழில் பாண்டியராஜனைத் தவிர வேறு ஒருவரும் கை கொடுப்பதில்லை. இதனால் மலையாளப் படங்களில் வாய்ப்புத் தேடி வருகிறார். இருந்தும் தமிழில் ஓர் இடத்தைப் பிடிக்க வேண்டும் என்ற முயற்சியில் இறங்கியுள்ளார்.

இதற்காகத் தனது கவர்ச்சிப்படங்களை பத்திரிகைகளுக்கு அனுப்பி வருகிறார்.

### காதோடு சொல்லுகிறோம்

இயக்குநர் ஜீவாவின் 'கடலில் மலரும் மலர்கள்' படத்தில் வைகைப்புயல் நகைச்சுவை நடிகருக்கு ஜோடியாக புதிய நடிகை ஒருவர் நடிக்கிறாராம். கண்ட மாத்திரத்திலேயே அந்த நடிகை மேல் மையல் கொண்டு விட்டாராம் நடிகர். அது மட்டுமல்லாமல் அந்த நடிகையைத் தனது அடுத்த படங்களில் ஜோடி சேர்த்தும் விட்டாராம் புயல்.

முதலிடத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் வெளிச்சமான 'கா' நடிகை புதுப் படங்களில் ஒப்பந்தமாவதற்கு முன், அந்த முன்னெழுத்து இயக்குநரிடம் ஆலோசனை கேட்கிறாராம். கதையைக் கேட்டு அந்த இயக்குநர் 'குஷி'யானால் தான், நடிகை சம்மதம் தெரிவிப்பாராம்.

வருடம் ஒரு முறை படமெடுக்கும் 'மணி'யான இயக்குநரது அண்மைய படத்தின் வெற்றி விழா அவரது அலுவலகத்தில் கொண்டாடப்பட்டதாம். வெற்றி விழாவில் ஒரு பிரபல நடிகரும், பிரபல நடிகையும் உற்சாகமான உபயத்தில் கட்டிப் பிடித்து நடனமாடியது கண்கொள்ளாக்காட்சியாக இருந்ததாம்.

## வானத்தைத் தொலைத்துவிட்டு...

அடையாளம் காட்டிச்சொல்ல
அட்டையில்லாததால்
ஒரேயொரு நாள் மட்டும்
கூண்டுக்குள் தவித்தேன்!
கைதான செய்தியன்றே
தோட்டம் முழுவதும்
காற்றாய் பறந்தது!
நீண்ட லயத்தில்
பல்லாண்டுக் காலமாய்
கூடி வாழ்ந்த
'சுமனே' கூட
என்னைக் கண்ட பின்
ஒதுங்கிப் போகிறான்...
பதுங்கி வாழ்கிறான்....!
இவனுமொரு 'அவனாயிருப்பானோ'
என்கின்ற பயம்
இவனுக்குள்ளும்....!
புரிந்து வாழும் மனமிருந்தாலும்
யுத்தம் ஆளுகின்ற
தேசநிலை அதுவென்றால்
இவன்மட்டுமேன் விதிவிலக்கா?
யுத்தம் இருள் விட்டு
அமைதி ஆளுமாயின்
புத்தக் கோயிலுக்குள்
முருகனும் போகலாம்!
ஆனாலிங்கு....
வானத்தை தொலைத்து விட்டு
விடிவைத் தேடும் நிலையில்
நாமிருக்கும் போது
அமைதி என்பது
உதட்டில் ஊறும்
எட்டாத மொழியாகும்!

ஹப்புத்தளையூர்-
எப். லெனாட்குமார்.

## காதலித்தால்...

கவிதைகள்
எழுதுவாய்
பரீட்சைகள் மட்டும்
எழுத மாட்டாய்....
***
இரவுகள்
நீண்டுவிடும்
ஆயுளோ
குறைந்துவிடும்....!
***
தனிமையில்
சிரிப்பாய்
எதிர்காலத்தில்
அழுவதற்காய்....!
***
காதல்தான் உலகம்
என்பாய்
யதார்த்தம்
புரியாததால்....!
***
கனவுகள்
அடிக்கடிக்
காண்பாய்
கற்பனை மிகுதியால்...!
***
பொலிஸ்காரன் கூட
தபால்காரனாய்
தெரிவான்
காக்கி போட்டிருப்பதால்...
***
உன்னில்
மாற்றத்தை
உணர்வாய்
ஏமாற்றத்திற்காய்...

பி. சி. அன்ரன்-
மட்டுநகர்.

## மனிதம்!

தெருவோரம்.....
ஆரவாரம்....
எட்டிப் பார்க்கிறேன்
மனித....?
உடலொன்று
மண்ணில் குப்புற
குண்டு துளைத்து....
வீதியெல்லாம் ஒப்பாரி
வீடெல்லாம் கூப்பாடு.
பிள்ளையை...
உறவை....
தேடும் படலம்
"சின்னவன் எங்கே?"
"பெரியவன் எங்கே?"
"அண்ணா ஓடிவா?"
"அப்பாவைத் தேடு!"
"மாமா சென்ற
இடமே தெரியாது"
அத்தானை ஓடிப்போய்
கடையில் பாருங்கடா..!"
யார்.... எவர்....
என்றே தெரியாமல்
ஊரே மாரடிக்குது...
எல்லோர் வீட்டிலும்....
எண்ணிக்கைகள்
முழுக்க முழுக்க சரி.
அப்படியானால்....
அந்த மனித உடல்...
யாருமற்ற....
உறவற்ற....
ஒரு....
அனாதை
என்பதை அறிந்ததும்
"அப்பாடா....!"
ஒரு ஆறுதல்....
பெருமூச்சு....
எல்லோர்
முகங்களிலும்....
முறுவல்....
முகை விட...
தங்கள் உறவினர்கள்
அந்தப்பிணம்...
"இல்லை" என்றதால்....
மகிழ்ச்சி மலர்ந்தது
ஓ.....?
அந்த மகிழ்ச்சியும்....
ஒரு நாள்....
நிஜமாகலாம்
மனிதா....
மனிதனை....
மதிக்கப்பழகடா....!!!

கயல்வண்ணன்-
வவுனியா.



## செப்டம்பர் 07

துயரம்
சொல்லவொணாத்துயரம்
என்னை
துன்பங்கள்
தத்தெடுத்த
துயரம்....!
***
இன்றுதான்
அவளின்
பிறந்த தினம்
என் பாசங்களைக்
கொன்றவளின்
பிறந்த தினம்....!
***
என்
இதயத்தை
இரண்டே வார்த்தைகளில்
எரித்தவளின்
பிறந்த தினம்....!
***
எனக்கு
மட்டும்
எரிக்க முடியவில்லை
அவளையும்
அவள் சார்ந்ததையும்
***
காயம் பட்ட
என் காதல்
மனதால்
கவிதையெழுதி
காணிக்கையாக்குகிறேன்
கல் நெஞ்சக்காரிக்கு!
வசந்தத்தை தொலைத்த
நம் வட கிழக்காய்
வரண்டு போனது
என் (மனம்) இதயம்...!
***
இருப்பினும்
வசந்தமானதொரு
வாழ்க்கையமைய
வாழ்த்துகிறேன்
அவளை
வாழ்நாள் தோறும்!

இலண்டன்-

## ஏக்கம்!

அன்பான என் அருமை அண்ணனே!
அலுத்து விட்ட தெனக்கு
கொழும்பு வாழ்க்கை...!
***
யாழ் மண்ணிலிருந்து
நானிங்கு, வந்து
நாலு நாள் நாலு மாதங்களென
நாலு வருடங்கள் கடந்து விட்டன
***
ஊரை மறந்து விட்டேன்.
உறவுகளைப் பிரிந்து விட்டேன்.
உறக்கத்தை இழந்து விட்டேன்.
நிம்மதி என்பது இம்மியளவும்
இல்லாது போய் விட்டது.
***
நாலு சுவற்றுக்குள்ளிருந்து நாளும்
தொலைக்காட்சியைப் பார்த்துப்... பார்த்து
தொலைத்து விட்டேன் என்
கண்பார்வையை.
உண்டு... உண்டு சும்மா படுத்து
உடலும் பருத்து விட்டது.
***
"ஹலோ! காசு!" என்றதும்
கிலோவில் அனுப்புகிறாய்,
காலை மாலை எனக்
கதைக்கிறாய் 'ரெலிபோனில்'
இருந்தும் தனிமை எனை வாட்டுகிறது.
அன்று!-நீ எனை இங்கு அழைக்காது
சும்மா இருந்திருந்தால்
சொந்த மண்ணில் நான்
சுதந்திரப் பறவையாக
சுற்றித் திரிந்திருப்பேன்.
***
இன்று! சிறு அறையினுள்
சிறைக் கைதியைப் போல்
சிறையிருக்கிறேன்!.

வி. றோஜனா-யாழ்/ஆரியாலை.

## செந்தாமரை

எத்தனையோ காளையர்கள்
எனக்காக ஏங்க...?
உன்னிடம் மையல் கொண்ட
நானோ...
நாணத்தை மூட்டைகட்டி விட்டு
என் காதலைச் சொன்னேன்!
***
நீயோ....
மௌனத்தால்
எனைக் கொன்றாய்!
அதுமட்டுமா...?
ஏறெடுத்தும் பாராமல்
எட்டிச் சென்றாய்!
உன்
உதாசீனம் தெரிந்தும்
போனால் போகட்டும் என்றிருந்தால்...
பாழாய்ப் போன மனம் கேட்குதா-
***
உன்
மௌனத்தைக் கலைய வைக்க உன்
ஐந்தெழுத்து நாமத்தை
முதலெழுத்தாகக் கொண்டு
கவிதையல்வா
எழுதி அனுப்ப வைத்தது
உன் பிறந்த நாளுக்கு...!
***
இனியாவது
இதழ் பிரியும்
இதயம் கனியுமென
இன்பவானில்
இறக்கைக்கட்டிப் பறந்தேன்!
இரும்பு மனம்
இளகவும் இல்லை.
மௌனப் பூட்டு
திறக்கவும் இல்லை
எறிந்து விட்டாய் குப்பைக்குள்
அதையும்...!
எனையும் தான்!
***
மலையுச்சியிலிருந்து
கொண்டு
முகிலைத் தழுவும் உனக்கு
இந்த....
ஏழை அபலையின்
சொல்லும் செயலும்
சேறும் சகதியுமாகத்தான்
தெரியும்!
***
ஆனால்
அந்தச் சேற்றில் தான்
தெய்வத்தைப் பூஜிக்கும்
செந்தாமரை மலர்ந்துள்ளது
என்பதை
என்றோ ஒரு நாள் நீ
அறியத்தான் போகிறாய்!
அறிவாய்....!

பொ. விஜயமலர்-
சம்பூர் 04.

## பொன்னாவாய் பெண்ணே...

பெண்ணாய் பிறந்ததும்
பெற்றவர் வருந்தியது-இறந்தகாலம்
பெண்ணும் பொன்னாய்
போற்றப்படுவது-நிகழ்காலம்!
அதனால்
நீ வருந்த வேண்டாம்;
பெண்ணாய் பிறந்ததற்காய்
பெருமைகொள்!
உன்போல் உயர்ந்த பிறவியது
உலகில் வேறில்லை!
தாயாய்; தாரமாய்; சகோதரியாய்;
சகதோழியாகி தருவாய் மாந்தர்க்கு
தரமான சேவைதனை!
பெண்வாழ்வை பொன் வாழ்வாக்கிய
பெருமைமிகு தெய்வங்கள் பல
மலர்ந்து
உதிர்ந்த போதும் உதிராத வாசம் தந்த
உத்தம செல்வி அன்னை தெரஸாவை
அறிவாய்!
அன்றோர் கலங்கரை தீபமாய்
விளங்கிட்ட
அவர் தம் கொள்கையை மனதிருத்தி
நீயும் ஒரு ஒளிவிளக்காவாய்!
விலங்குகளை பெண்ணே உன்
உயர்வுக்கு
விதையாக்கி வெற்றிநடை போடலாம்;
விரும்பினால்! நீயும். பெண்ணே
பொன்னாவாய்......

எஸ். ஜெயா-பேராதனைப்
பல்கலைக்கழகம்.

## பேனா நண்பர்கள்



பெயர்: என். சியாம்
வயது: 21
முகவரி: 28, குரண,
கட்டுநாயக்கா.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்: என். சரோஜா,
வயது: 35
முகவரி: 19/2, களனி,
எட்டியாந்தோட்ட.
பொழுது போக்கு:
வானொலி, பத்திரிகை

## நில்-கவனி-முன்னேறு

ஒருவனுக்கு அவன் செய்து வரும் வேலை மன அமைதியையும் மனநிறைவையும் கொடுக்கும்போது தான் அவனுடைய வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக அமையும். சந்தோஷ மான வாழ்க்கை வாழ ஒருவன் தன் மனதுக்குப் பிடித்த வேலையை தேடிக் கொள்ள வேண்டும். மனைவி, பெற் றோர்கள் போன்றவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக ஒருவன் தனக்கு சிறிதும் பிடிக்காத ஒரு வேலையை செய்து வந்தால், அவன் சிரிப்பதைக் கூட மறந்து விட வேண்டியிருக்கும்.

ஒவ்வொருவனுக்கும் இயற்கையாகவே ஏதாவது ஒருவேலையின் மீது ஆசை ஏற்பட்டு விடுகிறது. ஒருவன் டாக்டராக வரவேண்டும் என்று ஆசைப்படுகிறான். இன்னொருவன் வியாபாரம் செய்து பெரிய பணக்காரனாக வரவேண்டும் என்று மட்டும் ஒருவன் விருப்பப்படுகிறான். புகழ் பெற்ற பெரிய எழுத்தாளனாக வர வேண்டும் என்ற ஆசை சிலருக்கு ஏற்பட்டு விடுகின்றது. நடிகன், விளையாட்டு வீரன், ஆராய்ச்சியாளன், விமான ஓட்டி, என்ஜினியர் போன்ற நிறைய விதவிதமான வாழ்க்கை முறைகள் இந்த உலகில் நிறைந்திருக்கின்றன.

தனக்குப் பிடித்த வாழ்க்கை முறையை தேடிக் கொள்ளுபவனுக்குத்தான் வாழ்க்கையில் சந்தோஷம் கிட்டும்.ஒரு பெரிய இலக்கிய கர்த்தாவாக உருவெடுக்க விரும்புபவனை ஒரு சாதாரண அரசாங்க உத்தியோகத்தைச் செய்யும் படி வற்புறுத்தினால், அவனுக்கு வாழ்க்கையின் மீது வெறுப்பு ஏற்படத்தான செய்யும்.

தனக்குப் பிடிக்காத வேலையைச் செய்து வருபவன் சீக்கிரத்தில் களைத்து விடுகிறான். சந்தோஷம் சிறிது கூட இல்லாத வாழ்க்கை ஒருவனை நோயாளியாக மாற்றி விடும். அப்படிப்பட்டவன் இளம் வயதிலேயே தலைமுடி நரைத்து முகத்தில் சுருக்கங்கள் உருவாகி வயோதிகனைப் போன்று காட்சி தருவான்.




தனக்கு பிடித்த வேலையைச் செய்து வருபவன் நீண்ட நேரம் தொடர்ந்து வேலை செய்து வந்த போதிலும் களைப்படைந்து விடுவதில்லை. அவன் செய்து வரும் வேலை அவனுக்கு உற்சாகத்தைத் தருவதினால் அவன் தினமும் அதிக அளவில் வேலைகளை சுலபமாக செய்து முடிக்கிறான்.

அதனால் அவனுக்கு பேரும், புகழும், செல்வமும் கிட்டுகின்றன. தங்களுக்குப் பிடித்த வேலைகளைச் செய்து வருபவர்கள் சந்தோஷமாக வாழ்ந்து வருவதை நாம் பார்த்து வருகிறோம். அதற்கு மாறாக தனக்குப் பிடிக்காத வேலையைச் செய்து வருபவன் எப்போது பார்த்தாலும் புலம்பிக் கொண்டும், சலித்துக் கொண்டும், அனைவரையும் சபித்துக் கொண்டும், கோபித்துக் கொண்டும், வெறுத்துக் கொண்டும், குறை கூறிக் கொண்டும் வாழ்ந்து வருவதையும் நாம் பார்த்து வருகிறோம்.

சிலருக்கு தாங்கள் செய்து வரும் வேலைகள் சலிப்பையும் அலுப்பையும் தருவதாக அமைந்து விடுகின்றன. ஆணவத்துடன் செயல்பட்டு வரும் மோசமான உயர் அதிகாரிகளின் கீழ் வேலை செய்ய வேண்டிய அவலமான நிலை ஏற்பட்டுவிடுகிறது.

## இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கிரனி'

20.08.2000 முதல் 26.08.2000வரை

**மேடம் :**
மனதில் மகிழ்ச்சி. தூர இடத்து உறவினர் வருகையுடன் புதிய பற்பல முயற்சிகள் கைகூடும். வங்கிக்கடன் கிடைக்கும். புதிய இடங்களுக்கு சென்று வர இடமுண்டு. நெடுநாள் கனவு பலித்துக் கொள்ளும். அச்சுவினி, பரணிக்காரருக்கு, வெற்றியான வாரமாக அமையும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 21, 24.

**இடபம் :**
ஆலய வழிபாடும் புதியோரின் சேர்க்கை. மாமன் வழித் தொடர்புகளால் நன்மை ஏற்படும். பலபேரின் உதவிகள் வாழ்க்கையை உயர்த்துவதுடன் பலமாற்றம் நிகழும். செலவுகள் கூடும். அலைச்சல்கள் வந்துபோக பலன் உள்ளது. துலாராசிக்காரரால் உதவிகள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 02.
அதிஷ்ட திகதிகள் : 20, 25.

**மிதுனம் :**
தடைப்பட்ட விடயங்கள் தொடரும். அரச, தொழில் நிலை செய்பவர்கள் உயர்வுகளைப் பெறுவார்கள். வசதியான சில வாய்ப்புக்கள் தேடிவரும். திருமணப் பேச்சுக்கள் கைகூடி வரும். உறவினர்களின் வருகையும், திருவாதிரை நட்சத்திரர் நன்மையடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 24, 25.

**கடகம் :**
சுபகருமம் செயற்பாடு. வெளியிடச்சொந்த உறவினர்களின் வருகையும் ஏற்படும். எடுத்த கருமசெயற்பாடுகள் வெற்றியைக் கொடுக்கும். புதிய தொழில் சேர்க்கையும் அமையும். நீண்டநாள் கனவுகள் நனவாகும். பூச நட்சத்திரர் நன்மைகளைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 21, 23.

**சிம்மம் :**
பணச்சேர்க்கையும் மனதில் புதிய நம்பிக்கையும் உண்டாகும். புதியபொருட்களும் குடும்பத் தில் மாற்றமும் ஏற்படும். அதிகார நிலை, பயண வெற்றிகளுடன் எடுத்த கரும நிலை ராகுவின்பார்வை. அமோக வெற்றியைக் கொடுக்கும். மக, பூர நட்சத்திரர் பெரிய வசதிகளை பெற உள்ளனர்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 23, 24.

**கன்னி :**
பெண்களுக்கு குடும்பத்தில் பெரிய பிரச்சனைகள் வந்துபோகும். மாற்றங்கள் அவ்வப்போது வரப்பெறும். இடமாற்றங்கள் நன்றாக அமையும். கல்வித்துறை ஏற்றம் பெறும். பெரியோர்களின் ஆசீர்வாதமும் வெளிநாட்டுப் பயண முயற்சி சீராக அமையும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மரூண்; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 21, 24.

**துலாம்:**
மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடைபெற்று முடியும். தூர இடத்து சகோதரர்களின் நன்மைகள் கிடைக்கும். பெண்களால் தொழில் முயற்சிகளுக்கு ஊக்கம் கிடைக்கும். கணவர் அல்லது காதலரின் நற் செய்தி வசதிகள் கிடைக்கும். சுவாதி நட்சத்திர பெண்களுக்கு விருத்தி கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : றோஸ்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 23, 25.

**விருட்சிகம் :**
முழுமையான புதிய திட்டம் கிடைக்கும். பிரிந்த உறவினர் வந்து சேருவார்கள். பல விடயங்களால் பண வரவு வந்து சேரும். நோய்த் துன்ப நிலை மாறும். இரும்பு தொழில் செய்வோர்கள் பல வசதிதொழில் உயர்வுகள் கிடைக்கும். அரச உதவிகள் வந்துசேரவுள்ளது.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம் : சாம்பல் வர்ணம்; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 24, 21.

**தனுசு :**
பெண்களுக்கு சுபகரும அமைப்பு கிடைக்கும். போசன சயன சௌக்கிய நிலையுடன் பரீட்சைகள், உயர் நிலை கல்வி பெறுவோருக்கு வெற்றியாக அமையப் பெறும். உயர்கல்வி பெறுவோர்க்கு வெற்றியாக உயாவுபெற பலன் உள்ளது. மூல நட்சத்திர பெண்களுக்குப் பல நல்ல சந்தர்ப்பங்கள் ஏற்பட பலன் உள்ளது.
அதிஷ்ட நாட்கள் : திங்கள்,புதன்.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 20, 23.

**மகரம் :**
எதிர்பார்த்த விடயங்கள்யாவும் கைகூடும். பயணநிலை வெற்றியாக அமையப் பெறும். தூரஇடத்து உறவினர், பணவசதிகள் சந்தோஷத்தைக் கொடுக்கும். நோய்துன்ப நிலை மாற்றமடையும். திருவோண நடசத்திரர் நன்மை அடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : பசியமஞ்சள்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 23, 26.

**கும்பம் :**
ஒரு தெளிவு தென்படும். கடன் கொடுக்கல் வாங்கல் பிரச்சனைகள் தீரும், சில சிக்கல்களைக் கொடுக்கும். பெண்களுக்கு மனமகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்து முடியும். தொழில் முயற்ச்சிகள் வாரப்பகுதியில் ஆரம்பமாகும். கல்வி தொடரும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : மண்ணிறம்; எண்: 08.
அதிஷ்ட திகதிகள் : 22, 26.

**மீனம் :**
பயண ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரும். பணவசதியும் தூர இட நண்பர்கள் வரவும் ஏற்படும். கல்வி முயற்சிகள் புதிய வடிவமைப்பதும். மாற்றமான காலபலன் தொழில் அமைப்பு இவ்வாரம் கிடைக்கும். உத்தரட்டாதி நட்சத்திரர் ஸ்தலயாத்திரை மேற்கொள்ளுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 23, 25.

## சின்னச் சின்னத் துளிகள்



வழக்கமாகக் கடலைப்பருப்பு, துவரம்பருப்பில் தானே வடை செய்வீர்கள் கொஞ்சம் வித்தியாசமாகச் செய்துதான் பாருங்களேன். முதல் நாளே கொண்டை கடலையை எடுத்து ஊற வையுங்கள். அத்துடன் உளுத்தம் பருப்பையும் சேர்ந்து ஊற விடுங்கள். இரண்டையும் நருவல் துருவலாக அரைத்து வடை சுட்டுப் பாருங்கள் வித்தியாச சுவை மட்டுமல்லாது நல்ல சத்தான உணவும் கூட.



சில பெண்கள் கால், மேல் வலிகளால் அவதிப்படுவார்கள். இதற்கென விற்கப்படும் தைலங்களைப் பூசுவார்கள். அப்படி வலிகளால் அவதிப்படுபவர்கள் வலி நிவாரணத் தைலங்களுடன் சிறிது உப்புக் கலந்து தடவிப்பாருங்கள் வலி முழுமையாகப் போய் விடும்.

சில பெண்கள் உடல் மெலிந்து ஆள் இளைத்துப் போய் இருப்பார்கள் அவர்கள் பருப்பதற்கு இதைச் செய்தால் போதும்.

அரிசி, கோதுமை, கடலைப்பருப்பு, பாசிப் பருப்பு ஆகியவற்றைச் சம அளவு எடுத்துத் தனித்தனியே சிவக்க வறுத்தெடுக்கவும். பின் அனைத்தையும் ஒன்றாக மாவாக அரைத்து வைத்துக் கொள்ளுங்கள்.

இதனைக் கஞ்சியாகக் காய்ச்சி, சிறிதுசீனி, ஏலக்காய், பால் சேர்த்துச் சாப்பிட்டு வரக் கொளுத்து விடுவீர்கள்.

எலுமிச்சம்பழ விதையை நன்கு காய வையுங்கள். பிறகு அந்த விதையோடு மிளகையும் சம அளவில் எடுத்து மிக்ஸியில் அரைக்க வேண்டும். அரைத்த விழுதைப் பால், புளித்த தயிர் கலந்து தலையில் தடவி அரை மணித்தியாலம் ஊறவைத்துப் பின் ஷம்புவால் தலையை அலசி விடலாம். இப்படி வாரம் ஒரு முறை செய்து வந்தால் பொடுகுத் தொல்லை இருக்காது.

## 100 வயதைத் தொட்ட பட்டத்து ராணியம்மா

கிரிக்கெட்டில் சதமடித்திருப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் வாழ்க்கையில் சதமடிப்பவர்கள்-நூறு வயது வரை வாழ்பவர்கள்-மிகக் குறைவு.

இத்தகைய அதிஷ்டசாலிகளில் இங்கிலாந்து பட்டத்துராணியின் அம்மாவும் ஒருவர்.

கடந்த ஆகஸ்ட் 4ம் திகதி இவர் தனது நூறாவது வயதைத் தொட்டார். தற்போதைய இங்கிலாந்து மகாராணி எலிசபெத்தின் அம்மாவான இந்த ராஜமாதாவின் பெயரும் எலிசபெத் தான்.

இவரது 100 வது பிறந்தநாள் விழா உலகம் வியக்கும் வண்ணம் கொண்டாடப்பட்டது. இத்தினத்தில் ராஜமாதா எலிசபெத்தின் உருவம் பொறித்த சிறப்புத் தபால் தலைகள் வெளியிடப்பட்டன.



100 வயது கண்ட ராஜமாதா



கணவர் 6ம் ஜோர்ஜ் மற்றும் மகள்கள் மார்க்ரெட், எலிசபெத் (மகாராணி) உடன் பட்டத்து ராணி

ராஜமாதாவின் பிறந்த தினக்கொண்டாட்டங்கள் கடந்த ஜூலை மாதம் முதலே களை கட்டத் தொடங்கி விட்டன. கடந்த ஜூலை 10ம் திகதி இறைவனுக்கு நன்றி கூறும் பிராத்தனைக் கூட்டம் இலண்டனில் நடைபெற்றது.

அதன் பின் ஜூலை 19ம் திகதி 320 நிறுவனங்கள் இணைந்து எழில்மிகு ஊர்வலத்தை இலண்டன் மாநகரில் நடத்தின. இந்த ஊர்வலத்தில் நாய், கோழி, குதிரை, ஒட்டகம், காளை எனப் பல உயிரினங்கள் அணிவகுத்தன.

இந்த விழாக்களில் எல்லாம் பேரனும் இளவரசருமான சார்ள்ஸுடன் கலந்து கொண்டார் ராஜமாதா.

இங்கிலாந்து மக்களின் நேசத்துக்கும் பாசத்துக்கும் உரியவராக விளங்கும் ராஜமாதாவின் முழுப்பெயர் 'எலிசபெத் ஏஞ்சலா மார்க்ரெட் பவுஸ் லியோன்.'

தாய்-மகள் இருவருக்கும் எலிசபெத் என்று ஒரே பெயர் இன்றைய மகாராணியை 2வது எலிசபெத் என்கின்றனர். ராணியின் தாயாரான ராஜமாதாவை ராணியம்மா என்கின்றனர்.

1900ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4ம் திகதி ஸ்கொட்லாண்ட் அரச பரம்பரையில் 9வது மகளாக பிறந்தார் ராணியம்மா. முதல் உலகப்போரின் போது கிளாமிஸ் அரண்மனை மருத்துவமனையாக மாறியது.

போரில் காயமடைந்தவர்களுக்கு உதவும் வகையில் தாதியாகப் பணி புரிந்தார்.

சிறு வயது முதலே இங்கிலாந்து மன்னர் 5ம் ஜோர்ஜ் குடும்பத்தினருடன் நெருக்கமாக இருந்தார் எலிசபெத். இதுவே பின்னர் 5ம் ஜோர்ஜ் மன்னரின் இரண்டாவது மகன் இளவரசன் அல்பேர்ட்டை மணம் முடிக்க வழி சமைத்தது.

எலிசபெத்துக்கு 20 வயது இருக்கும் போது இளவரசர் அல்பேர்ட் மீது காதல் மலர்ந்தது. அல்பேர்ட்டும் எலிசபெத்தை உயிருக்கு உயிராகக் காதலித்தார். இவர்களின் காதல் விவகாரம் அரச குடும்பத்தினருக்கு தெரிய வர, 3 வருடங்கள் கழித்து 1923ல் திருமணம் நடந்தது.

இளவரசர் அல்பேர்ட்-இளவரசி எலிசபெத் தம்பதிக்கு இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தன. ஒருவர் இளவரசி எலிசபெத் (இன்றைய மகாராணி) மற்றவர் இளவரசி மார்க்ரெட்.

1936ம் ஆண்டு இங்கிலாந்து மன்னர் 5வது ஜோர்ஜ் மரணமடைந்தார். அவருக்குப் பின் அவருடைய மூத்த மகன் 8வது எட்வேட் பட்டத்துக்கு வந்தார். 8வது எட்வேட் காதலித்த பெண் ஏற்கனவே திருமணமாகி விவாகரத்தானவர். எனவே அப்பெண்ணை மணமுடிக்க அரசு அனுமதிக்கவில்லை. எனவே காதலுக்காக அரியணையைத் துறந்தார் 8வது எட்வேட்.

இதனால் 5வது ஜோர்ஜ் மன்னரின் இரண்டாவது மகன் அல்பேர்ட்டும் எலிசபெத்தும் அரியணை ஏறினார்கள். 1937ம் ஆண்டு மே மாதம் 12ம் திகதி இவர்களுக்கு முடிசூட்டப்பட்டது.

இங்கிலாந்து மன்னரான அல்பேர்ட் 6ம் ஜோர்ஜ் என அழைக்கப்பட்டார். கணவர் மன்னரானதும் எலிசபெத் பட்டத்து ராணியானார். 1952ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ம் திகதி எலிசபெத்தின் கணவர் 6ம் ஜோர்ஜ் மன்னர் மரணமடைந்தார்.

6ம் ஜோர்ஜ் மன்னருக்கு ஆண் வாரிசு இல்லாததால் முத்த மகளான இளவரசி எலிசபெத் மகாராணியாக முடிசூட்டப்பட்டார். இதுவரை பட்டத்து ராணியாக இருந்த எலிசபெத் பட்டத்து ராணியின் அம்மாவானார்.



இளவயதில் ராஜமாதா



மகாராணியம்மாவின் படங்கள் பொறித்த தபால் தலைகள்

மகள் பட்டத்து ராணியாக, அம்மா எலிசபெத் இலண்டனில் 'கிளரென்ஸ்' அரண்மனைக்கு மாறினார். இன்று வரை அந்த மாளிகையிலேயே வசித்து வருகிறார்.

பொது நல சேவையில் நாட்டமுள்ள ராஜமாதா இங்கிலாந்திலுள்ள 350 பொதுநல ஸ்தாபனங்களுக்குப் புரவலராகவும், தலைவியாகவும் இருந்து வருகிறார். இவற்றை விட தரைப்படை, விமானப்படை, கப்பல்படைகளின் தளபதியாகவும் அரச குடும்ப 'போர்க் கப்பல்' பெண்கள் படைப்பிரிவுக்கு சிறப்புத் தளபதியாகவும் பதவி வகித்து வருகிறார்.

மகளைப் போலவே இவருக்கும் குதிரைப் பந்தயம் என்றால் உயிர். ஏராளமான பந்தயக்குதிரைகளை வைத்திருக்கிறார். அதைப் போல் முத்துமாலைகள் என்றால் ராணியம்மாவுக்குக் கொள்ளை ஆசை.

நூறு வயதைத் தாண்டியும் ராஜமாதா மிகவும் சுறுசுறுப்பாகவே இருக்கிறார்.

## தாய்ப்பால் கொடுப்பதால் ஏற்படும் நன்மைகள்



குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுப்பதால் என்னென்ன நன்மைகள் ஏற்படும் என்று எப்போதாவது நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா?

இதோ! அறிவியல் பூர்வமான அருமையான தகவல்கள்.

தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு மார்பகப் புற்று நோய் வரும் வாய்ப்பு மிக, மிகக் குறைவு.' தாய்ப்பால் கொடுப்பதால் உடலில் உள்ள அதிகப் படியான கொழுப்பு தாய்ப் பாலாக மாறி விடுகிறது. இதனால் உடல் பெருப்பதில்லை. சதை போடுவதில்லை.

தாய்ப்பால் கொடுப்பதால் தாய்க்கும், குழந்தைக்கும் இடையேயான நெருக்கமும், அன்பும் கூடுகிறது.

தாய்ப்பால் குழந்தைக்குத் தேவையான புரதம் கொழுப்பு, விட்டமின்கள், இரும்புச் சத்து என எல்லா சத்துக்களையும் வழங்கி விடுகிறது.

குழந்தைக்கு தேவையான வெப்ப நிலையில் தாய்ப்பால் இருப்பதால் அது எளிதாக ஜீரணமாகிறது.

ஆஸ்துமா, எக்சிமா போன்ற நோய்கள் தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளை தாக்குவதில்லை.

தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளை நோய் ஏதாவது தாக்கினாலும் அவை சீக்கிரமே குணமடைந்து விடுகின்றன.

தாய்ப்பால் குடித்து வளரும் குழந்தைகளின் இறப்பு விகிதம் குறைவு.

இத்தனை பெரிய நன்மைகள் கொண்ட தாய்ப்பால் உங்கள் குழந்தைக்கு அவசியமா? இல்லையா? இப்போது சொல்லுங்கள்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்.

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** IB

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

தொழில்:..............................

கையொப்பம்:..............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 26.08.2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

### இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

### கொச்சிக்கடை வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | திருமதி.ந.சிவா<br>62,பாத்திமா வீதி,வெலிகேன, கொச்சிக்கடை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


**தவிர்க்க முடியாத காரணங் களினால் மோனிக்கா என் மோனிக்கா தொடர் இம்முறை இடம் பெறவில்லை, அடுத்த வாரம் முதல் தொடரும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.**

– ஆசிரியர்–

# பாப்பா முரசு சிறுகதை

# கனவு பலித்தது

முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் விஸ்வநாதன் என்ற வியாபாரி ஒருவன் வாழ்ந்து வந்தான். 'கொடுத்து சிவந்தக் கை' என்று சொல்வார்களே அந்த குணமுடையவன் விஸ்வநாதன். ஏழைகளுக்கு உதவி செய்யும் விஸ்வநாதன், மக்கள் மனதில் இடம் பிடித்ததில் வியப்பொன்றும் இல்லை.

நல்ல உள்ளம் கொண்ட விஸ்வநாதனுக்கு வியாபாரத்தில் மிகுந்த நஷ்டம் ஏற்பட்டது. திடீரென்று ஏற்பட்ட சரிவை தாங்க முடியாமல் தவித்தான். அதைவிட விஸ்வநாதனின் கஷ்டம் புரியாமல் அவனிடம் உதவி கேட்டு வந்த மக்களுக்கு ஒன்றும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டவுடன் மிகவும் தவித்துப் போனான்) துக்கம் தாளாமல் கடவுளிடம் கதறி அழுதான்.

அன்று இரவு கனவில் தோன்றிய கடவுள், "நீ பக்கத்து ஊரான மங்கலபுரிக்குச் செல். அங்கே நீ பணக்காரனாக வழி கிடைக்கும்," என்று கூறினார். விஸ்வநாதனுக்கு உதவ வேண்டும் என்பதற்காகவே கடவுள் அவன் கனவில் தோன்றி இவ்வாறு கூறினார்.

திடுக்கிட்டு எழுந்த விஸ்வநாதன், மறுநாள் விடிந்ததும் மனைவியிடம் சொல்லி விட்டு புறப்பட்டான். மங்கலபுரியில் எந்த இடத்திற்குப் போவது என்றே தெரியவில்லை. எனவே மனம் போன போக்கில் ஊருக்குள் நுழைந்த விஸ்வநாதன், அங்கிருந்த கோவில் மண்டபத்தில் சற்று இளைப்பாறினான்.

மாலை மங்கி விடவே, ஒரு நாள் முழுதும் பயணம் செய்த களைப்பு நீங்க அப்படியே அந்த மண்டபத்தில் படுத்து உறங்கினான்.

அப்போது கோவிலுக்கு அருகில் உள்ள வீடு ஒன்றில் திருடன் ஒருவன் புகுந்து விட்டான். அவனை மக்கள் கூட்டம் விரட்ட ஆரம்பித்தது. தப்பி ஓடிய திருடன் கோவிலுக்குள் புகுந்து ஒளிந்துக் கொண்டான்.

சப்தம் கேட்டு கண்விழித்து எழுந்து நின்ற விஸ்வநாதனை திருடன் என்று சொல்லி மக்கள் கூட்டம் பிடித்துச் சென்றது.

எவ்வளவோ கெஞ்சினான் விசுவநாதன். ஆனால் யாரும் அவனை நம்பத் தயாராக இல்லை. மங்கலபுரி நீதிபதியிடம் சென்று ஒப்படைத்தனர்.

'இதற்குத் தான் கடவுள் என்னை இந்த ஊருக்கு போகச் சொன்னாரோ' என்று மனதிற்குள் அழுது புலம்பினான் விஸ்வநாதன். விசாரித்த நீதிபதி உண்மையை புரிந்து கொண்டார். அவனிடம் ஒன்றும் இல்லை என்பதும் தெரிந்தது. எனவே விஸ்வநாதனைப் பார்த்து, "இந்த




மாதிரி கனவை நம்பி இப்படி தெரியாத ஊருக்கெல்லாம் போகாதே. என்னோட கனவுல கூடத்தான் நேத்து கடவுள் வந்து, இந்த ஊர் எல்லையில் உள்ள ஏரிக்கரையின் அருகில் உள்ள ஆலமரத்தடியில் பத்து செப்புக்குடங்களில் தங்க நாணயங்கள் உள்ளன என்று சொன்னார். அதையெல்லாம் நம்பி நான் போனேனா?. எனவே கனவு, கினவை மறந்து பிழைக்கிற வழியைப் பார்," என்று சொல்லி விஸ்வநாதனை விடுதலை செய்தார்.


மகிழ்ச்சியுடன் வெளியே வந்த விசுவநாதன் மனதில் சின்னதாக ஒரு பொறி. 'இவ்வளவு தூரம் தன்னை காப்பாற்றிய கடவுள் இங்கு நம்மை வரச் சொல்கிறார் என்றால் அதில் ஓர் அர்த்தம் இருக்கும். எதற்கும் நீதிபதி சொன்னபடியே ஊர் எல்லைப் பக்கம் போனால் என்ன?' என்று நினைத்துக் கொண்டான். அந்த இடத்திற்குச் சென்றான். நீதிபதி சொன்ன எல்லாம் சரியாக இருந்தது.

இரவு வரும் வரை காத்திருந்தான். ஆலமரத்துக்கு கீழ் இருந்த பொந்தில் கைவிட்டு மண்ணைத் தோண்டினான். அதில் நீதிபதி சொன்னது போலவே பத்து செப்புக் குடம் நிறைய பொற்காசுகள் இருந்தன. அவற்றை மகிழ்ச்சியுடன் தோண்டி எடுத்துக் கொண்டு ஊருக்குச் சென்றான் விஸ்வநாதன்.

பழையபடி வியாபாரம் 'ஓஹோ' என்று ஓடவே மகிழ்ச்சியுடன் கடவுளை தொழுது கொண்டு இன்னும் நிறைய தான தர்மங்கள் செய்து வளமாய் வாழ்ந்தான் விஸ்வநாதன்.



பசியோடு இருக்கும் வாத்துக்கு கீழே இருக்கும் பழங்களைச் சாப்பிட்டுப் பசியாற்றிக் கொள்ள வழி காட்டுங்கள்.



# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **26.08.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **356**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 354

பரிசுக்குரியவர்:
கோ. வினேஸ்வரன்,
நெளுக்குளம் கலை மகள் மகா வித்தியாலயம், வவுனியா.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| என்.எம். நிஸாம்,<br>மட்/அல்-ஹிறா வித்தியாலயம், காத்தான்குடி. | பிரவீண் ப்ரகாஷ்,<br>திருத்துவக் கல்லூரி, கண்டி. |
| ஆா.சுதேஸ்வரன்,<br>அசோகா வித்தியாலயம், கண்டி. | ஆ.அருண்,<br>சென்.ஜோன் பொஸ்கோ கல்லூரி, அட்டன். |
| அ.விஜயதாஸ்,<br>ஸ்ரீ/இ/கி/கோ/இந்துக் கல்லூரி, திருகோணமலை. | எஸ்.மைக்கல் வினோத்,<br>சென்.தோமஸ் கல்லூரி, கல்கிசை. |
| பாத்திமா ருஸ்னா,<br>முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு-04. | க.சந்திரமோகன்,<br>விபுலானந்தா மத்திய கல்லூரி, காரைதீவு. |
| பே.ஜயகணநாதன்,<br>அக்/கோ/வி/மகா வித்தியாலயம், அக்கரைப்பற்று. | ஆர்.மஹாலக்ஸ்மி,<br>முவான்கந்த, மாவத்தகம. |

## வழக்கைத் தலை உகரி



படத்தில் இருக்கும் வழுக்கைத்தலைக் குரங்கின் பெயர் உகரி.

இவை தென்னமெரிக்காக் காடுகளில் அதிகம் உள்ளன.

இந்தக் குரங்கின் சிறப்பம்சம் என்னவென்றால் இவற்றின் கன்னங்கள் இரண்டும் சிவந்து காணப்படும். எவ்வளவு தான் வெய்யிலில் அலைந்து திரிந்து களைத்துத் திரும்பினாலும், இவற்றின் கன்னங்கள் செக்கச் சிவந்து காணப்படும்.

இதைவிட இவற்றின் தலையில் முடிகள் மிகவும் குறைவாகவே காணப்படும். அதுவும் வயது போகப் போக கொட்டி, வழுக்கைத் தலை ஆகிவிடும். இதனால் இவற்றை 'வழுக்கைத்தலை உகரி' என்றும் அழைப்பார்கள்.

## ஆயுட்காலம்

மனிதர்கள் வாழும் அதிகபட்ச வயது 120. அபூர்வமாகச் சிலர் இதையும் தாண்டுவது உண்டு.

சில விலங்குகளின் ஆயுட் காலத்தைப் பாருங்கள்:

| | | | |
|---|---|---|---|
| சிங்கம் | - 29 ஆண்டுகள் | குதிரை | - 55 ஆண்டுகள் |
| யானை | - 75 ஆண்டுகள் | காட்டெருமை | - 33 ஆண்டுகள் |
| சிறுத்தை | - 31 ஆண்டுகள் | குரங்கு | - 50 ஆண்டுகள் |
| கரடி | - 47 ஆண்டுகள் | கொரில்லா | - 40 ஆண்டுகள் |
| காண்டாமிருகம் | - 48 ஆண்டுகள் | நீர் யானை | - 54 ஆண்டுகள் |

## புறாவுக்குக் கிடைத்த விருது




இரண்டாம் உலகப்போரின்போது, போரின் முக்கிய செய்திகளை இலண்டனுக்கு எடுத்துச் செல்ல புறாக்கள் பயன்பட்டன.

ஜெர்மனியால் பிடிக்கப்பட்ட ஃபிரான்ஸில் இருந்து, கடுமையான துப்பாக்கிச் சூட்டின் போதும் தப்பித்தப்பி, இங்கிலாந்திற்கு 710 கிலோமீட்டர் தூரத்திற்குப் பிரயாணம் செய்து முக்கியமான ஒரு செய்தியைக் கொண்டு வந்து சேர்த்தது ஒரு புறா.

இப்புறாவின் வீரத்தைப் பாராட்டி 'அனிமல்ஸ் விக்டோரியா க்ரொஸ்' என்ற விருது வழங்கப்பட்டது.

சில நாடுகளில் இராணுவ தகவல்களைப் பரிமாறிக் கொள்ள புறாக்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.



விறு விறு தொடர்

09

மர்மக்கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்


'ஹலோ இந்தியா' பத்திரிகை அலுவலகம். அந்த இரவிலும் ஏதோ நெருப்புப் பிடித்து விட்டதைப் போல ஒரு குரூப் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

உதவி ஆசிரியர்களுக்கான பகுதியில் பவானி கண்ணாடி மாட்டிக் கொண்டு சில 'லே-அவுட்' செய்த பக்கங்களை வரி வரியாகப் படித்துப் பார்த்துக் கொண்டிருக்க... அடுத்த நாற்காலியில் அப்ஸரா டென்ஷனோடு யாரையோ ஃபோனில் தொடர்பு கொள்ள டைரி பார்த்து வேறு வேறு எண்களில் முயன்று கொண்டிருந்தாள்.

"அடிக்குது! அடிக்குது!" என்று குதித்தாள்.

"ஹலோ!" என்று எதிர்முனையில் பதில் வந்ததும்...

"ஹலோ ... அது எம்.எல்.ஏ. சக்கரவர்த்தி சார் வீடுதானே?"



"ஆமாம்.!"

"நான் ஹலோ இந்தியா பத்திரிகையிலர்ந்து அப்ஸரா பேசறேன். சார்கிட்ட பேச முடியுமா?"

"ஏம்மா, இப்ப நேரம் என்ன தெரியுமா?"

"மன்னிச்சுக்குங்க சார். ரொம்ப அர்ஜெண்ட்டான விஷயம். நேத்து சாரை வீட்லவைச்சி ஒரு பேட்டி எடுத்தேன் நான். அப்ஸரான்னு சொல்லுங்க, தெரியும்."

"மீட்டிங் போய்ட்டு வந்து அசந்து தூங்கறார். இப்ப எழுப்ப முடியாதுங்க. காலைல கூப்டுங்க."

"நாளைக்குக் காலையில அவர் டெல்லி போறதாச் சொன்னாரே"

"ஆமாம் ஆறு மணிக்குப் புறப்படறார்."

"அதுக்கு முன்னாடி அஞ்சே அஞ்சு நிமிஷம் அவர் எனக்காக ஒதுக்கணும். ரெண்டே ரெண்டு ஃபோட்டோ எடுக்கணும்."

"நேத்துத்தானே ஏழெட்டு ஃபோட்டோ எடுத்தீங்களேம்மா.!"

"அது... அது.... ஃபிலிம் ஓல்டு ஸ்டாக் போலிருக்கு, சரியா வரலை. நாளைக்கு அந்த பேட்டி கட்டுரை அச்சுக்குப் போயாகணும். ஃபோட்டோவுக்காக வெய்ட் பண்றாங்க. ப்ளீஸ்.... நீங்க யார் பேசறீங்க?"

"இங்க பாருங்கம்மா, நீங்க என்ன சொன்னாலும் இப்ப அய்யாவை எழுப்ப முடியாது. காலைல டெல்லி போயிடுவாரு. ரெண்டு நாள்ல திரும்பிடுவாரு. அதுக்கப்புறம் வந்து பாருங்க."

லொடக்கென்றுஃபோன் வைக்கப்பட, அப்ஸரா வெறுப்பாக வைத்தாள்.

"என்னாச்சு?"

"காலையில அஞ்சரை மணிக்கு அவர் வீட்டுக்குப் போய்ப் பார்க்கறேன். மூடு இருந்தா ஃபோட்டோவுக்கு போஸ் கொடுக்கலாம். எடிட்டர் என்னை அநியாயத்துக்குத் திட்டிட்டார்."

"உனக்கு வேணும்! உன்னையாரு நீச்சல் அழகனை எல்லாம் பர்மிஷன் இல்லாம ஃபோட்டோ எடுக்கச் சொன்னது?"

"அதுக்காக? ஃபிலிம் ரோலை அந்த தடியன் உருவிப் போட்டது சரின்னு சொல்றியா?"

"அதுவும் அதிகம்தான்!"

"இப்பப் பாரு மாட்டிக்கிட்டு முழிக்கிறேன். என்னை இவ்வளவு தூரம் டென்ஷன் பண்ணின அவனைத் தூக்கத்திலேர்ந்து எழுப்பி நாலு வார்த்தைத் திட்டட்டுமா?" என்று ஃபோனை எடுத்தாள் அப்ஸரா.

பவானி சிரித்துக் கொண்டாள்.

"மேல மேல வம்பு இழுக்கப் போறியா?"

"என்ன செஞ்சிடுவான் அந்த ராஸ்கல்?" அப்ஸரா எண்களை அழுத்தி எதிர்முனையில் ஹோட்டல் ரிசப்ஷனிஸ்ட் எடுத்ததும் அறை எண் சொல்லி, காத்திருந்தாள்.

"ஹலோ....!" என்ற குரலில் விஸ்கி நெடி இருந்தது.

"ரஞ்சித்?"

"யா!"

"யோவ்! உன்னால எனக்கு ஏகப்பட்ட டென்ஷன் தெரியுமா?"

"ஏய்! யார் பேசறது?"

"இன்னிக்கு உன்னைக் கேக்காம ஃபோட்டோ எடுத்துட்டதுக்காக ரொம்பதான் சிலிர்த்துக்கிட்டு என் ஃபிலிம் ரோலை எக்ஸ்போஸ் பண்ணினியே, எவ்வளவு திமிர் இருக்கணும் உனக்கு?"

"ஓ! அந்தப் பெண்ணா நீ? இதபாரு, மரியாதை இல்லாமல் பேசறே! நடுராத்திரி கூப்புட்டுப் பேசறே! நீ பத்திரிகைக்காரின்னா எனக்கென்ன, கன்னம் சிவக்கற மாதிரி ரெண்டு அறை விடாமல் . போனேன்னு நினைச்சு சந்தோஷப்படு!"

"யூ ராஸ்கல்! என்னை அறைவியா நீ?"

"ஏன் நீ என்ன ஜாக்கிசான் தங்கச்சியா?"

"ரொம்ப இன்சல்ட் பண்ணிட்டே நீ! என் பவர் புரியாமல் பேசிட்டே! நீ ஆம்பளையா இருந்தா நாளைக்குக் காலைல ஒன்பது மணிக்கு உன் ரூம்லவெய்ட் பண்ணு. நான் வர்றேன். அப்போ என்னைப் புரிஞ்சுக்குவே!"

"அது எதுக்கு நாளைக்குக் காலைல வரைக்கும் வெய்ட் செய்யணும்? இப்பவே வாம்மா, நான் ஆம்பளைதான்னு நிரூபிக்கிறேன்."

"ச்சீ! மேனர்ஸ்லெஸ் இடியட்!" என்று ஃபோனை வைத்தாள்.

"என்ன, ஆபாசமாப் பேசறானா?" என்று சிரித்தாள் பவானி.

"சிரிக்காதே! இவனை விடப் போறதில்லை. நாளைக்குக் காலைல போலீஸோட போய் இவன் முன்னாடி நிக்கத்தான் போறேன். அசிஸ்டெண்ட் கமிஷனர் ராஜீவ் என் ஃபிரண்டு தெரியுமா?" என்று அப்ஸரா பரபரப்பாக ராஜீவின் ஃபோன் எண்ணைத் தேடினாள்.

பதினெட்டாவதாக விசாரிக்கப்பட்ட டாக்ஸி டிரைவர் ஞானமணி பரத் நீட்டிய புகைப்படத்தைப் பார்த்த மாத்திரத்தில் பிரகாசமானான்.

"ஆமாம் சார், இந்தத் தாத்தாவை கல்யாண மண்டபத்திலேர்ந்து நான் தான் ஏத்திக்கினுப் போனேன்."

பரத் - சுசீலா பரபரப்படைந்தார்கள்.

"எங்கே, எங்கே டிராப் செஞ்சே?"

"ஹோட்டல் ஜெம் இல்லே, அங்கே!"

"அவர் அங்கே தங்கியிருக்கிறவரா?"

"அது எனக்கென்னா தெரியும். இறங்கிக்கினு உள்ளாரப் பூட்டாரு."

பரத் தன் காரில் டாக்ஸிடிரைவர் ஞானமணியையும் ஏற்றிக் கொண்டு ஹோட்டல் ஜெம்மை நோக்கி விரைந்தான்.

'ஜெம்' வந்து சேர்ந்ததும் பரத், சுசீலா ரிசப்ஷன் பகுதிக்கு வந்தார்கள்.

"எக்ஸ்க்யூஸ் மி... இங்கே ரஞ்சித்ன்னு யாராச்சும் ரூம் எடுத்துத் தங்கியிருக்காங்களான்னு கொஞ்சம் பார்த்துச் சொல்ல முடியுமா? ப்ளீஸ்..."

"ஒன் மினிட் ப்ளீஸ்..."

அந்த இளைஞன் கம்ப்யூட்டரைத் தட்டிப் பார்த்து, "யெஸ்!" என்றான்.

"ரூம் நம்பர்?"

"ரூம் நம்பர் 517."

பரத் சுசீலாவிடம், "முட்டாள் மாதிரி சொந்தப் பேர்லயே ரூம் எடுத்துத் தங்கியிருக்கான் பாரு! இப்ப என்ன செய்யணும் தெரியுமா?" என்றான்.

ஜெம் ஹோட்டலின் ரிசப்ஷன் இளைஞனிடம், "ரூம் நம்பர் 517ல் ரஞ்சித் இப்போ இருக்காரா?" என்றான் பரத்.

"யெஸ் சார்."

"எப்படிச் சொல்றீங்க?"

"பத்து நிமிஷம் முன்னாடி அவருக்கு ஒரு ஃபோன் வந்தது. நான் தான் அவர் ரூமுக்கு கனெக்ஷன் கொடுத்தேன்."

"ஐஸீ... தேங்க் யூ....!"

விலகி வந்த பரத் அங்கிருந்த ஒரு ஸோஃபாவில் அமர்ந்தான்.

"இப்ப என்ன செய்யப் போறோம்?" என்றாள் சுசீலா.

"இவ்வளவு சீக்கிரம் அவன் சிக்குவான்னு நான் எதிர்பார்க்கவே இல்லை சுசி. செல் கொடு. இப்போ போலீஸ் வந்தாகணும்."

சுசீலா தன் கைப்பையிலிருந்து எடுத்துக் கொடுத்த செல் ஃபோனில் கிரைம் பிராஞ்ச் இன்ஸ்பெக்டர் நியூட்டனைத் தொடர்பு கொண்டான்.

"சார், உங்க உத்வி வேணுமே.!"

"இந்த ராத்திரி வேற எதுக்குக் கூப்புடப் போறீங்க. சொல்லுங்க.

பரத் விளக்கினான்.

"ஓகே. நான் ஏரியா சப்-இன்ஸ்பெக்டருக்கு தகவல் சொல்லிவிட்டு முடிஞ்சா அவரையும் கூட்டிக்கிட்டு ஹொட்டலுக்கு வர்றேன். அங்கயே இருங்க."

"தேங்க் யூ சார்!"

பரத் தொடர்பைக் கத்தரித்து விட்டு விஷாலிடம் பேசினான்.

"விஷால், அந்த ராஸ்கல் இருக்கிற இடத்தைக் கண்டுபிடிச்சிட்டோம். ஹொட்டல் ஜெம்ல நிம்மதியா தூங்கிட்டிருக்கான். போலீசுக்கு இன்ஃபார்ம் பண்ணிட்டேன். இன்னும் கொஞ்ச நேரத்தில அவங்க வந்துடுவாங்க. வந்ததும் அவனை அரெஸ்ட் பண்ண ஏற்பாடு செஞ்சிடறேன். நாளைக்கு கல்யாணம் முடிஞ்சதும் தீபிகா ஒரு கம்ப்ளைண்ட்ல கையெழுத்துப் போட வேண்டியிருக்கும். ஸ்டேஷனுக்கு வந்து ஆளை அடையாளம் காட்ட வேண்டியிருக்கும்."

"கல்யாணம் நடந்து முடிஞ்சதுக்கு அப்புறம்தானே? நோ ப்ராப்ளம் பரத், ரொம்ப தேங்க்ஸ்ப்பா. இப்பதான் எனக்கு மூச்சே வருது. யு ஹெவ் டன் எ கிரேட் ஜாப்!"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. உடனே அவனைக் கண்டுபிடிக்க முடிஞ்சதுக்கு அதிர்ஷ்டம்தான் காரணம்!."

"இப்ப நான் அங்கே வரட்டுமா?"

"எதுக்கு? அவசியமில்லை. நாங்க பார்த்துக்கறோம். அரெஸ்ட் பண்ணி அழைச்சிட்டுப் போனதுக்கப்புறம் மறுபடி ஒரு தடவை ஃபோன் செய்றேன்."

ஃபோனை அணைத்துவிட்டு சிகரெட் பற்றவைத்தான்.

"போலீஸ் வர்றவரைக்கும் சைட் அடிக்கலாம்னா ரிசபஷன்ல பாரு எல்லாரும் மீசை வெச்ச ஆளுங்க!"

சுசீலா, "பரத், எனக்குக் கொஞ்சம் நெருடுது."

"எந்த இடத்துல கொசு எதுவும் கடிச்சதா?"

"பீ சீரியஸ். ரஞ்சித்தை எப்படி வகைப் படுத்துவீங்க? புத்திசாலியா, முட்டாளா?"

"கொஞ்சம் புத்திசாலி. கொஞ்சம் முட்டாள்."

"ஏன்?"

"தன்னை அடையாளம் கண்டு பிடிச்சிடக் கூடாதுன்னு மாறுவேஷம் போட்டதும், டாக்ஸில வந்ததும் புத்திசாலின்னு சொல்லுது."

"சரி..."

"டாக்ஸில தெருமுனையில இறங்கிக்காம ஹோட்டல் வாசல்ல வந்து இறங்கினதும் ஹோட்டல்ல தன் சொந்தப் பேர்ல ரூம் போட்டிருக்கிறதும் முட்டாள்ன்னு சொல்லுது."

"புத்திசாலித்தனமா சிந்திக்கிறவன் முட்டாள்தனமாகவும் நடந்துக்குவானா?"

"நீ என்ன சொல்ல வர்றே?"

"இப்படி சுலபமா அவன் மாட்டிக்கிறதில ஒரு அபத்தம் தெரியலை? ஏதோ உள்நோக்கத்தோட வாலண்ட்ரியா மட்டிக்கிறானோன்னு உங்களுக்குத் தோணலையா?"

"இல்லை."

"ஏன்?"

(தொடர்ந்து வரும்)

# மறுபக்கம்

02

## எம்.ஆர்.ராதா

*சிறிய வயதிலேயே எம்.ஆர்.ராதாவிடம் ஒப்பனைக் கலைஞராக ('மேக்-அப் மேன்') பணியாற்றியவர் கஜபதி. எம்.ஆர்.ராதாவின் மறைவிற்குப் பின் அவரது மகன் ராதாரவிற்கும் ராதாவின் பேரன் வாசு விக்ரமிக்கும் (இவர் எம்.ஆர்.ஆர்.வாசுவின் மகன்) ஒப்பனைக் கலைஞராகப் பணியாற்றிவருகிறார்.*

*எம்.ஆர்.ராதாவுடன் பணியாற்றிய காலத்தில் அவரிடம் கண்ட-கேட்ட விஷயங்களை சில வருடங்களுக்கு முன் தமிழகப் பத்திரிகை ஒன்றின் வார இணைப்பில் பகிர்ந்திருந்தார். அவற்றில் இருந்து சிலவற்றை உங்களுக்குத் தருகிறோம்.*

ரங்கராவும் எம்.ஆர்.ராதாவும் இணைந்து நடித்த 'நானும் ஒரு பெண்' படப்பிடிப்பின் போது, தினமும் லேட்டா ஷூட்டிங்கிற்கு வருவார் ரங்கராவ். மதிய உணவிற்கு வீட்டிற்கு சென்றால் சில நாள் மீண்டும் ஷூட்டிங்கிற்கு திரும்பியே வரமாட்டார். ஒருநாள் மேக்கப்புடன் காலை ஒன்பது மணிக்கே ரெடியாகிவிட்டார் ராதா.

பதினொரு மணிக்குத்தான் வந்தார் ரங்கராவ்.

ராதா, அவர் முன்னாலேயே மற்றவர்களிடம்.... "பாருங்கள் படத்திலே கெட்டவனா அயோக்கியனா நடிக்கிறவன் சரியான நேரத்துக்கே வந்துடுறேன். படத்திலே ரொம்ப யோக்கியமானவனாக நடிக்கிற இவரு, தினமும் அவர் இஷ்டத்துக்கு வர்றாரு," என்றார்.

அவ்வளவுதான்! ரங்கராவ் உடனே ராதாவிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். சரவணனிடம் சொல்லி, "இனிமேல் நான் மதிய சாப்பாடுக்கு வீட்டுக்கே போக மாட்டேன். இங்கேயே சாப்பிடுகிறேன். மதியம் சாப்பிட்டதும் நான் ஒரு குட்டித்தூக்கம் போடுவதற்கு ஒரு அறையை ஏற்பாடு செய்து விடுங்கள். அது போதும்," என்றார்.

சரவணனும், ராதாவுக்கு ஓர் அறையும், ரங்கராவுக்கு ஓர் அறையும் ஏற்பாடு செய்து தந்தார்.

ராதா ரங்கராவ் இருவரும் மிகுந்த ஒத்துழைப்பு கொடுத்து அடுத்த பத்து நாட்களில் 'விறுவிறு' என்று முழுப்படத்தையும் முடித்துக் கொடுத்து விட்டனர்.

ராதா பணத்துக்காகத்தான் நடித்தார் என்றாலும் அதிலும் நேர்மையைக் கடைபிடிக்கக் கூடியவர். 'எங்க வீட்டுப் பிள்ளை, மிகப் பெரிய வெற்றியை பெற்றதும், தயாரிப்பாளர் நாகிரெட்டி, அதேபாணியில் 'எங்க வீட்டுப் பெண்' என்றொரு படம் தயாரிக்க முன் வந்தார்.

பி.கே.கிருஷ்ணசாமி என்பவர்தான் அந்தப் படத்தின் டைரக்டர். கதை கேட்டு, அட்வான்ஸ் வாங்குவதற்காக நாகிரெட்டியை சந்திக்கப் போனார் ராதா. அங்கிருந்த டைரக்டர் கிருஷ்ணசாமி படத்தின் கதையைச் சொன்னார்.

ராதாவுக்கு கதை பிடிக்கவில்லை. "இந்தக் கதையை படமாக்கினால் ஓடாது. இதிலே ஒண்ணும் சுவாரஸ்யமில்லே," என்றார்.

'உங்களை வைத்துதான் இந்தக் கதையையே தேர்ந்தெடுத்துள்ளோம். நீங்கள் கால்ஷீட் தராவிட்டால் இந்தப் படத்தையே நான் 'டிராப்' செய்துவிடுவேன்," என்றார் நாகிரெட்டி.

"நீங்கள் பணம் தருகிறீர்கள் என்கிற போது, நான் நடிக்கத் தயாராகத்தான் இருக்கிறேன். ஆனாலும், படம் ஓடாது என்பதுதான் என் அபிப்பிராயம்." என்றார் ராதா.

அந்தப் படமும் எடுக்கப்பட்டது. ஆனால், ராதா சொன்னது போலவே, அது படுதோல்வி அடைந்தது.

என்.எஸ்.கிருஷ்ணனுக்கு ஒரு முறை ஏதோ ஒரு விழாவில் பொன்னாடை போர்த்தினார்கள்.

அந்த விழாவில் பேசிய ராதா, "இங்கே என்.எஸ்.கே...,வுக்கு பொன்னாடை போர்த்தியதால் அவர் மகிழ்ச்சி அடைந்திருப்பார் என்று யாரும் நினைக்க வேண்டாம். அவர் மிகவும் பொருளாதார கஷ்டத்தில் வாழ்கிறார். அவரது வறுமையைப் போக்க அவர் ஒரு சொந்தப் படம் எடுக்க வேண்டும். அதற்கு நம்மைப் போன்ற நடிகர்கள் இலவசமாக நடித்துக் கொடுக்க வேண்டும். பொதுவாக படங்களில் நடிக்க தயாரிப்பாளரிடமிருந்து நான்தான் பணம் வாங்குவேன். இப்போது கலைவாணரின் படத்தில் நான் இலவசமாக நடிக்க சம்மதம் தெரிவிப்பதோடு, அந்த படத்தில் நான் நடிப்பதற்கு நானே அவருக்கு பணம் கொடுக்கிறேன்," என்று கூறி, மேடையிலேயே பத்தாயிரம் ரூபாய் பணத்தை கலைவாணரிடம் கொடுத்தார்.

காருக்குறிச்சி அருணாசலம் புகழ் பெற்ற நாதஸ்வர வித்வான். அவர் ஒருமுறை, ஒரு படம் எடுக்க வேண்டும் என்று ராதாவிடம் வந்து கால்ஷீட் கேட்டார்.

"நாதஸ்வர கலையில் புகழோடு விளங்கும் நீங்கள் ஏன் சினிமா எடுக்க வருகிறீர்கள்?" என்று கேட்டார்.

"என் குரு திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளையின் குடும்பத்திற்கு ஏதாவது நிதியுதவி செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். இந்தப் படத்தின் மூலம் கிடைக்கும் லாபத்தை அந்தக் குடும்பத்திற்கு கொடுக்க விரும்புகிறேன்," என்றார் காருச்குறிச்சி.

"அதற்கு நீங்கள் பல நாதஸ்வர கச்சேரிகள் செய்து, அதன் மூலம் கிடைக்கும் லாபத்தை ராஜரத்தினம் குடும்பத்திற்கு கொடுக்கலாமே?" என்றார் ராதா.

காருக்குறிச்சி கேட்கவில்லை.

ராதா விடாமல், "படத்தயாரிப்பாளருக்கு நிர்வாகத் திறமை வேணும். உங்களை மாதிரி கலைஞர்களாலே, அது முடியாது. புரொடக்ஷன் வேலைகளை கவனிக்க இறங்கினீர்களானால், உங்களிடமுள்ள சங்கீத ஞானமும் கெட்டுப் போய்விடும்," என்று பலவாறாக சொல்லி, அவர் கொடுத்த அட்வான்ஸ் பணத்தையே வாங்கமறுத்துவிட்டார்.



ஆனால், காருக்குறிச்சி அருணாசலம் பிடிவாதமாக ராதாவிடம் அட்வான்ஸ் கொடுத்து விட்டுப் போய் விட்டார். அதேபோல அந்தப் படத்திற்கு ஏ.பி.நாகராஜனை தான் டைரக்டராகவும் 'பிக்ஸ்' பண்ணி இருந்தார். இப்படி ஒரிருவருக்கு அட்வான்ஸ் கொடுத்ததோடு சரி, பிறகு காருக்குறிச்சியால் படம் தயாரிக்க முடியவில்லை. அத்தோடு அந்தப் படமுனைப்பு நின்று போய் விட்டது.

காருக்குறிச்சியை "படம் தயாரிக்காதே;! சரிப்படாது" என்று சொன்னார் ராதா, பிறகு தானே ஒரு சொந்தப்படம் தயாரிக்கத் தொடங்கினார். ஆனால், அந்தப் படமும் பாதியோடு நின்று விட்டது.

ஏன்?

ஏ.பி.நாகராஜனும், ராதாவும் ஒருவருக்கொருவர் அன்பு கொண்ட நண்பர்கள். அதனால் ஏ.பி.என்..., னையே தனது சொந்தப் படத்துக்கு டைரக்டராகப் போட்டார் ராதா. அந்தப் படத்தின் பெயர்: 'ஆளப் பிறந்தவன்.' படத்தின் முதல் கட்டப் படப்பிடிப்பு நல்லபடியாகத் தான் முடிந்தது.

ஒரு மாதம் கழித்து, அடுத்த ஷெட்யூலுக்கான ஏற்பாடுகளை செய்து விட்டு, ராதா ஏ.பி.என்....,னை சந்திக்கப் போன போது, அவர் பலமுறை வீட்டில் இருந்து கொண்டே, ராதாவை சந்திக்கவில்லை.

எப்போது போனாலும், "தூங்குகிறார் சார்," என்று தான் பதில் சொல்வார்கள்.

ஒரு நாள் ரொம்ப கடுப்பாகிப் போன ராதா, "டேய்.... அந்த 'ஆளப் பிறந்தவன் படத்தை எடுத்த வரைக்கும் தூக்கிப் போட்டுக் கொளுத்துங்கடா," என்றார்.

அவர் உத்தரவுப்படியே அந்தப் படம் கொளுத்தப்பட்டது.

இத்தனைக்கும் இந்தப் படத்தில் எம்.கே.ராதா, பாலையா, டி.ஆர்.மகாலிங்கம், மாதுரி தேவி போன்ற அந்தக் காலத்திய பெரிய நடிகர்கள் எல்லாரும் நடித்திருந்தனர். ராதா நினைத்திருந்தால் டைரக்டரை மாற்றிப் போட்டு படத்தை முடித்திருக்க முடியும்.

(தொடர்வார்)

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 16

## தோழர் கிருஷ்ணக்குட்டி

எனது தலையின் பின்புறத்தில் ஏற்பட்ட காயத்திலிருந்து இரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது. ஓர் அரை அங்குலம் மேலாக அடிபட்டிருந்தால் நிச்சயமாக அதே கணத்தில் எனது உயிர் பிரிந்திருக்கும். தெய்வாதீனமாக நான் உயிர் பிழைத்தேன். நான் கண் விழித்த போது தொழிற் திணைக்களத்தில் பணி புரிந்த நண்பர் ஜோசப் அவர்களும், தோழர் கிருஷ்ணக்குட்டி அவர்களும் எனக்கும், மற்றொரு புறம் அடிபட்டுக் கிடந்த பாலா அவர்களுக்கும் முதலுதவி செய்துகொண்டிருந்தனர்.

வாசிகசாலையுள் வைக்கப்பட்டிருந்த நூல்கள் எல்லாம் நடுத்தெருவில் கிழித்து வீசப்பட்டிருந்தன. கறுப்புச் சிவப்பு கொடியும் கிழித்து வீசப்பட்டிருந்தது. ஜோசப் அவர்கள் இரு நண்பர்களின் சைக்கிளை ஏற்பாடு செய்து எங்களை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்.

அன்றிரவு தோழர் கிருஷ்ணக்குட்டி அவர்கள் எங்கள் வாசிகசாலையிலேயே தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மெலிந்த உடலும் உறுதியான உள்ளமும் கொண்ட அவரிடம் "இந்த இடத்தில் தங்குவதற்கு அச்சம் கொள்ளவில்லையா?" என்று கேட்டேன். பல வருடங்கள் இலங்கையில் வாழ்ந்த போதும் அவருடைய தமிழ் பேச்சுசில் மளையாள வாடை சற்றும் நீங்கவில்லை. "ஞான் இதுக்கெல்லாம் பயப்பட மாட்டாங்" என்று பதிலளித்தார். அன்று இரவு அவர் அங்கேயே தங்கினார்.

கிருஷ்ணக்குட்டி அவர்கள் அன்றிரவு படுக்கையில் சாய்ந்து சில நிமிடங்களில் அக்கட்டடத்தின் முகட்டில் தீச் சுவாலைகள் தோன்றின. அவர் உடனடியாகவே எழுந்து கதவைத் திறந்து கொண்டு வெளியேறினார். எதிர்ப்புறமிருந்த கட்டடத்தின் மாடியில் படுத்திருந்த ஜோசப் அவர்களும் விழித்துக் கொண்டார். ஓலையால் வேயப்பட்டிருந்த அவ் வீட்டிடு முகட்டில் வேகமாகத் தீ பரவிக் கொண்டிருந்தது. அயலிலுள்ளவர்கள் துணைக்கு ஓடி வந்தனர். எல்லோருமாகச் சேர்ந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

பகலில் எங்களுக்கு அடித்துக் காயப்படுத்தியவரும் நூல்களை கிழித்து தெருவில் வீசியவருமான அந்த நபரே இரவில் அக் கட்டடத்துக்குத் தீ மூட்டினார் என்ற உண்மை வெளிப்படையாகத் தெரிந்து விட்டது.

இக்கட்டுரைத் தொடரின் ஆரம்ப அங்கங்களில் மட்டக்களப்பில் தலைவிரித்தாடிய சாதிக் கொடுமைகள் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருந்ததை வாசகர்கள் அறிவீர்கள். ஒரு நாள் நான் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தபோது, சாதியில் குறைந்தவராகக் கருதப்படும் ஒருவரை என் முன்னிலையில் வைத்து இருப்புக் கம்பியினால் அவருடைய மண்டையில் தாக்கி வீழ்த்திய அதே நபர் தான் பின்னர் பகுத்தறிவு இயக்கப் பணிமனையை த்தாக்கி, பாலாவையும் என்னையும் காயப்படுத்தியதுடன் கட்டடத்துக்கும் தீ மூட்டியுள்ளார். இரும்புப் பொல்லால் என் முன்னிலையில் ஒருவர் அடித்துக் கொலை செய்ய முயன்றார் என்று அவர் மீது தொடுக்கப்பட்டிருந்த வழக்கில் அவருக்கு சில வருடங்கள் (சரியான காலம் தெரியவில்லை) கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பின் முன்னாள் மாநகர சபை முதல்வராக இருந்த திரு. ஆர்.அம்பலவாணருடன் ஒரு தடவை கொழும்பு வந்திருந்த போது, தண்டனை பெற்று வெளிக்கடை சிறைச்சாலையில் இருந்த அந்த நபரைப் பார்க்கச் சென்றிருந்தோம். சிறைச்சாலையின் முன்புறமிருந்த அதிகாரியிடம் அவருடைய பெயரைக் குறிப்பிட்டு அவரை பார்க்க விரும்புவதாக விண்ணப்பித்திருந்தோம். அந்த அதிகாரி, அந்த நபர் கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிப்பவராதலால் வேலைக்காக ஏனைய கைதிகளுடன் வெளியில் சென்றிருப்பதாகவும் கூறி சற்று தாமதிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

சற்று நேரத்தில் கைதிகள் சிலர் தள்ளு வண்டிகளை இழுத்துக் கொண்டும் தள்ளிக் கொண்டும் வந்துகொண்டிருப்பதைப் பார்த்தோம். அவர்களில் ஒருவராக நாங்கள் சந்திக்க வந்திருந்த அந்த நபரும் வந்து கொண்டிருந்தார்.

கன்னங்கரேல் என்ற நிறத்துடனும் மெலிந்த தோற்றத்துடனும் வந்து கொண்டிருந்த அவரை எனது நண்பர் அம்பலவாணர் கண்டு கொண்டார். அவர்கள் தாமதியாமல் சிறைக்குள் அனுப்பப்பட்டனர்.

ஒரு மணி நேரம் நாங்கள் இருவரும் காத்திருந்தோம். அதன் பின் எங்கள் இருவருடைய பெயர்களும் அறிவிக்கப்பட்டன. உள்ளே சென்றோம். பார்வையாளர்கள் தங்கியிருக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டோம். இரும்புக் கம்பிகளால் அரண் செய்யப்பட்ட மண்டபத்திற்கு அந்த நபரை அழைத்து வந்தார்கள். எங்களைக் கண்டதும் அவர் தடுப்புக் கம்பிகள் இரண்டையும் கைகளால் பிடித்துக் கொண்டு கதறியழுதார். "தாழ்ந்த சாதிக்காரன் என்று ஒருவரைக் கொலை செய்ய நான் முற்பட்டு இன்று இந்தச் சிறைக் கூண்டில் அடைக்கப்பட்டுள்ளேன். ஆனால் இன்று நான் ஒரு கைவண்டியை ஏனைய கைதிகளுடன் சேர்ந்து தள்ளிக் கொண்டு வருவதை நீங்கள் பார்த்தீர்களல்லவா? அந்த வண்டிக்குள் காணப்பட்ட முடிச்சுகள் இந்தக் கைகளால் அழுக்கு நீக்கித் துவைக்கப்பட்ட துணிகள். அரச மருத்துவமனையில் உள்ள நோயாளிகள் பாவிக்கும் அழுக்குத் துணிகளை நான் இந்தக் கைகளால் தேய்த்து கழுவினேன். நமது ஊரில் இந்த வேலையைச் செய்யும் தொழிலாளிகளை 'தாழ்த்தப்பட்டவர்கள்' என்று ஒதுக்கி வைக்கிறோம். இன்று நானும் அதே வேலையைச் செய்து விட்டு வந்திருக்கிறேன். எனவே செய்யும் தொழிலைக் கொண்டு தாழ்ந்தவன் உயர்ந்தவன் என்று கணக்குப் பார்ப்பது எத்தகைய முட்டாள் தனம் என்பதை திடமாக அறிந்து கொண்டேன்" என்று அழுதழுது கூறினார்.





மட்டக்களப்பில் 1961ல் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தில் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் தோழர்கள் அணிவகுப்பு

இவ்வாறு தன்நிலை உணர்ந்து பட்சாதாபப்பட்ட அதே நபர் சில வருடங்களுள் பகுத்தறிவு இயக்கத்தைச் சேர்ந்த எங்களுடன் போர் தொடுக்க முன்வந்தார். அவருக்கு எங்கள் மீது ஏற்பட்ட கோபத்துக்குக் காரணம் சாதிவெறி தான். கீழ்சாதி மேல் சாதி என்று எவருமே இல்லை. செய்யும் தொழிலால் பேதமடைந்துள்ள ஒரே இனமக்கள் ஏற்றத் தாழ்வு இல்லாத சமூகமாக மாற்றமடைய வேண்டும் என்பதை பிரதானமான கொள்கையாகப் பிரகடனப்படுத்திச் செயற்பட்ட பகுத்தறிவு இயக்கம் மீது அவருக்கு கடுங்கோபம் ஏற்பட்டமையினால் தான், ஏற்கனவே தான் பெற்ற சிறைத் தண்டனையை மறந்து வெறியாட்டம் ஆடினார்.

பகுத்தறிவு இயக்கம் தாக்கப்பட்ட செய்தி அடுத்த சில நாட்களில் சென்னையிலிருந்து வெளியான தி.மு.க நாளிதழான 'நம் நாடு' தினசரியின் முன் பக்கத்தில் இடம் பெற்றிருந்தது. 'சாதி வெறியர்களின் சாக்கூத்து' என்ற மகுடத்துடன் அச்செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது. 'நம் நாடு' நாழேட்டின் ஆசிரியராக அன்று கடமைபார்த்தவர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள். சென்னை இராயபுர்த்தில் இருந்த தி.மு.க. தலைமையகத்திலிருந்து இப்பத்திரிகை வெளியாகிக் கொண்டித்தது. இப்பத்திரிகையின் பிரதிகள் ஒவ்வொன்றும் கழகத்தின் அறிக்கைகள், உத்தியோக பூர்வ அறிக்கைகள் அனைத்தும் பகுத்தறிவு இயக்கத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

## இரா.பத்மநாதன்

தோழர் கிருஷ்ணக்குட்டி பற்றிக் கூறுவதானால், அவருடைய வாழ்க்கை முறை பற்றி எவ்வளவோ செல்லலாம். உண்மையிலேயே அவர் சொல்லிலும் செயலிலும் பொதுவுடமைவாதியாகவே வாழ்ந்து வந்தார். எங்கேயோ பிறந்து வளர்ந்து இந்நாட்டுக்கு வந்து மட்டக்களப்பு நகரில் மிக எளிமையாக வாழ்ந்து, தன்னுடன் எந்த வகையிலும் உறவில்லாத மக்களுடன் அம் மக்களுக்காகவே வாழ்ந்து அமரராகிவிட்டார்.

கிருஷ்ணக்குட்டி அவர்கள் தனக்கென்றொரு குடும்பத்தையோ, சொத்து சுகத்தையோ தேடிக் கொண்டவரல்ல. அன்றாட உணவைப் பற்றிகூடக் கவலைப்படுபவருமல்ல. யாராவது உணவளித்தால் உண்பார். அல்லது போனால் ஒரு வடை, ஒரு 'பிளேன் டீ' மட்டுமே அவருக்கு மதிய உணவுக்குப் போதுமானது.

மட்டக்களப்பிலுள்ள தொழிலாளர் வர்க்கத்தின் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதற்கு தோழர் கிருஷ்ணக்குட்டி எத்தகைய சிரமத்தையும் ஏற்றுக் கொள்ளத் தயங்க மாட்டார். ஓர் அந்நியராக இருந்த போதும் அரசாங்க அதிகாரிகள் அனைவரையும் ஆட்டிப் படைத்தார். எங்காவது அநீதி இழைக்கப்பட்டால் தட்டிக் கேட்டு நீதி நிலைபெற ஓடிச் சென்று துணை புரிவார்.

தோழர் கிருஷ்ணக்குட்டி அவர்கள் சம்பந்தப்பட்ட ஒரு நிகழ்ச்சி பற்றி இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று நம்புகிறேன். அவரை அரசாங்க உயர் அதிகாரிகளிடம் மாட்டி வைப்பதற்காக சில குறும்புக்காரர்கள் திட்டமிட்டு ஒரு வேடிக்கை செய்தனர்.

மட்டக்களப்பு நெல் சந்தைப்படுத்தும் சபைக்குச் சொந்தமான நெல் குற்றும் ஆலையில் பணிபுரியும் சிலர், அங்கு அரிசி குற்றும் போது நிலத்தில் சிதறும் அரிசிகளை தூசுகளுடன் சேர்த்துக் கூட்டி ஒரு கடதாசியில் எடுத்து தோழர் கிருஷ்ணக்குட்டியிடம் கொடுத்தனர். குறிப்பிட்ட ஓர் ஐக்கிய பண்டகசாலையில் "இதே அரிசி தான் பொது மக்களுக்கு விநியோகப்படுகிறது," என்று அந்த அரிசிப் பொட்டலத்தை அவரிடம் கொடுத்ததும், அதனைப் பிரித்துப் பார்த்த அவருக்கு கடுங்கோபம் உண்டாயிற்று. இதனை எவரிடம் முறையிடுவது என்று அவராகவே தீர்மானித்து நேரடியாகவே அப்போதிருந்த அரசாங்க அதிபரிடம் சென்றார். அதிபரின் மேசையின் மீது பொட்டலத்தைப் போட்டு, "இந்த அரிசி தானா மக்களுக்குச் சாப்பிடக் கொடுப்பது?" என்று சிம்ம கர்ஜனை புரிந்தார்.

அரசாங்க அதிபருக்கு எதுவுமே புரியவில்லை. பின்னர் தனது குற்றச்சாட்டை அரசாங்க அதிபருக்கு விளக்கிக் கூறினார். தான் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக அவர் வாக்களித்து கிருஷ்ணக்குட்டி அவர்களைச் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தார்.

அரசாங்க அதிபரின் விசாரணையின் போது தோழர் கிருஷ்ணக்குட்டியைச் சீண்டுவதற்காகவே விஷமிகள் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்பதை அவர் அறிந்து கொண்டார்.

அப்போது மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகள் மேலோங்கியிருந்தன. அக்கட்சியின் தொண்டர்களான எங்களுக்கும் தோழர் கிருஷ்ணக்குட்டிக்கும் இடையில் எப்போது சிநேகப் பூர்வமான வாய்ச்சண்டைகள் ஏற்படுவதுண்டு. அப்போதெல்லாம், "இமயமலையில் மீனைப் பொரித்துச் சாப்பிட்ட நீங்கள் தானே?" என்று எங்களைக் கிண்டல் பண்ணுவார்.

தமிழரசுக் கட்சித் தலைவர்கள் மேடைகளில் பேசும்போது, பண்டைத் தமிழர்களின் வரலாற்றைப் பற்றிக் கூறுவார்கள். அப்போது சேரன் செங்குட்டுவன் இமயமலைக்குப் படை நடத்திச் சென்று தமிழைப் பலித்த கன-கவிசையர் தலையில் கல் சுமக்க வைத்த வரலாற்றினையும் இமயமலையில் மீன் சின்னத்தை பொறித்த வரலாற்றையும் அழகாகக் கூறுவார்கள். இந்த வாசகங்களை அடிக்கடி கேட்ட கிருஷ்ணக்குட்டி அவர்கள் எங்களைக் கிண்டல் பண்ணும் போது "இமயமலையில் மீன் பொரித்துச் சாப்பிட்ட தமிழர்தானே நீங்கள்!" என்று கிண்டலும் கேலியுமாக்க கூறுவார்.

உண்மையில் அவருக்கு 'ரி'க்கும் 'றி'க்குமிடையுலுள்ள வித்தியாசமும் தெரியாது.

(இன்னும் வரும்)

---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர். 70**

# அரங்கம் அந்தரங்கம்

**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

~கண்ணதாசன்~

சந்திரபுஷ்கரணி அழுகையையும் நிறுத்தினாள்.

நான் சொன்னேன்:

"சில விஷயங்களை எதிர்பார்த்துத் தைரியமாக இருக்க வேண்டும். எதிர்பாராத விதமாக நடந்துவிட்ட விஷயங்களைச் சந்திப்பதில் துணிச்சல் வேண்டும். பம்பாயில் விமானத்தில் ஏறும்போதே இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் எதிர்பார்த்தேன். ஏறிய பிறகு உன்னை இறக்கிவிட வேண்டாம் என்றுதான் கூட்டிக் கொண்டு வந்தேன். அதற்காக என்ன? இது ஜனநாயகமா, சர்வாதிகாரமா? பார்த்துவிடுவோம்!"

சந்திரபுஷ்கரணி மிகுந்த நிம்மதியடைந்தாள்.

இப்போது அவள், என்னைக் காதலிப்பவள் போலவே காணப்பட்டாள். ஒரு மனைவியின் பாணியில் சேவைகள் செய்யத் தொடங்கினாள்.

என் அலுவலகத்தில் என் அறை ஓரளவுக்கு வசதி உள்ளதாக இருக்கும்.

அவள் டிரசிங் டேபிளில் அமர்ந்து தலையை வாரிக் கொண்டாள்; குங்குமம் இட்டுக் கொண்டாள்; கழுத்திலே மாங்கல்யம் இல்லை; அவ்வளவுதான்!

இத்தகைய உறவுகள் தவறானவை என்று நான் எப்போதுமே கருதியது இல்லை.

நல்ல குடும்பத்துப் பெண்களை ஆடவர்கள் கெடுத்து விடாமல் இருப்பதற்குத்தான் விலை மாதர்களை உலகம் அங்கீகரித்தது. விலைமகளிலும் கலைமகள் போன்றவர்கள் உண்டு.

சந்திரபுஷ்கரணி அப்படிப்பட்டவள்.

சிறிது நேரத்தில் எனக்கு ஏதோ தோன்றிற்று. டெலி:போனை எடுத்துச் சந்திரசூரியனைக் கூப்பிட்டேன்.

அவர் பெரிய இடத்தில் இருப்பவர். அவ்வளவு சீக்கிரம் பேசுவாரா?

பல தடைச் சுவர்களைத் தாண்டி அவர் டெலி:போனுக்கு வந்தார்.

"என்ன தோழரே...?" என்றுதான் நான் விசாரித்தேன். அதற்காக நான், "கனம் சந்திரசூரியன் அவர்களே..." என்று கூப்பிட முடியுமா? இந்தக் 'கனம்' எப்போது இறங்கும் என்று எனக்குத் தெரியாதா?

"என்ன கவிஞரே! சௌக்கியமா...?" என்றார் அவர்.


"பம்பாயிலேயே சந்திக்க நினைத்தேன்; முடியவில்லை!" என்றேன்.

"என்ன விஷயம்...?" என்றார்.

"எல்லாம் கற்பகம், சந்திரபுஷ்கரணி விஷயம்தான்!" என்றான்.

"இதோ பாருங்க கவிஞரே! கவிஞர்கள் என்றாலே பைத்தியக்காரர்களாக இருக்க வேண்டும் என்பதில்லை. நீர் எப்போதுமே ஓர் ஏமாளி. அவர்கள் இரண்டுபேரும் சாகசக்காரிகள், உம்மை நன்றாக வளைத்துப் போட்டிருக்கிறார்கள். இதுவரையிலே உமது முகத்துக்காகத்தான் நான் பொறுத்தேன். இனி அது என் கையில் இல்லை. சட்ட ஒழுங்கைப் பாதுகாப்பது போலீசார் கடமை! அவர்கள் நடவடிக்கையில் நான் குறுக்கிட முடியாது. ஏற்கனவே இருந்தவர்கள் அப்படிக் குறுக்கிட்டுக் குறுக்கிட்டுத்தான் கெட்ட பெயரைச் சம்பாதித்துக் கொண்டார்கள். அது கிடக்கட்டும், உடம்பு எப்படி இருக்கிறது? உடம்பை ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்ளும்!" என்றார் அவர்.

சில நேரங்களில் வருகின்ற வினை இதுதான். நாம் மற்றவர்களுக்குப் புத்தி சொல்ல நினைப்போம். அவர்கள் நமக்கு புத்தி சொல்ல ஆரம்பித்து விடுவார்கள்.



புத்தி சொல்கின்ற வாத்தியார் வேலை சந்திரசூரியனுக்குக் கைவந்த கலை.

"இதோ பாருங்கள், நானொன்றும் சிபாரிசுக்கு வரவில்லை. அப்பாவியான ஒரு பெண்ணை இப் படிச் சித்திரவதை செய்கிறதே உங்கள் சட்டம், ஒழுங்கு! இது என்ன நியாயம்?" என்றேன்.

"அவள் அப்பாவியா, இல்லை பெரும் பாவியா என்பதைக் கோர்ட்டு அல்லவா முடிவு கட்ட வேண்டும்!" என்றார் அவர்.

எனக்குச் சிரிப்பு வந்தது.

"எதற்கும் அரசாங்க வக்கீல் வரதராஜனிடம் பேசுங்கள்!" என்று கூறி டெலி:போனை வைத்து விட்டார்.

ஒரு உத்தமரைப் பார்த்தாகி விட்டது; இனி அடுத்த உத்தமர்.

வரதராஜனுக்கு உடனே :போன் செய்தேன்.

அவர் நல்ல சுதியில் இருந்தார் போலிருக்கிறது. "சட்டம், சட்டம்தான்! அதன் ஒழுங்கு குலைவதை அனுமதிக்க முடியாது! அதிலும் விபசாரத்தை அரசாங்கம் அனுமதிக்கவே.. வே... வே... முடியாது!" என்றார் அவர்.

டெலி:போனில் சில பெண்களின் சிரிப்புச் சத்தம் கேட்டது. ஒரு கண்ணாடிக் கிளாஸ் விழுந்து உடைகின்ற ஓசையும் கேட்டது.

"நீர் இன்னும் 'பெர்மிட்'டைத் திருப்பிக் கொடுக்கவில்லையா...?" என்று கேட்டேன், நான்.

"அப்பொழுதே கொடுத்து விட்டேன்! முதலாலே நான் தானே!" என்றார் அவர்.

"நமக்கு எல்லாம் 'பெர்மிட்' எதற்கு?

## கவியரசு கண்ணதாசன்

இனி நாமே காய்ச்சினால் கூட நம்மை யாரும் கேள்வி கேட்க முடியாது! அரசாங்கம் நம்முடைய கையில் அல்லவா...! என்றேன் நான்.

"நன்றாகச் சென்னீர் கவிஞரே!" என்று உரத்த குரலில் சத்தமிட்டார் அவர்.

மெதுவாக அவர் வாயைக் கிளறினேன்.

(அந்தரங்கம் வரும்)

# மனதில் உறுதி வேண்டும்



உத்திரன்-இணுவில்.

"உங்களாலை ஒரு சேலை எடுத்துத் தரமுடியுமா?"

நம்பிக்கையோடு வாழ்க்கையில் காலடி எடுத்து வைத்த அருணுக்கு விழுந்த முதல் அடி அது. அவநம்பிக்கையை விதைத்த வார்த்தை அது. அந்த கடற்கரை மண்ணில் கடலுக்குள் மூழ்கிக் கொண்டு இருக்கும் சிகப்புசூரியனை வெறுப்போடு பார்த்தான். "மச்சான் அருண் அதையே நினைச்சுக்கொண்டு இருக்காதை!" என்றான் ராகுல். ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் அருணும் ராகுலும் அந்தகடற்கரைக்கு வருவார்கள்.

"துரை ஒரு ரிக்கற் எடுங்க. லட்சரூபா பரிசு துரை!"

"வேண்டாம் தொல்லை பண்ணாமல் போப்பா!."

அதிஷ்ட ரிக்கற் விற்றுக் கொண்டு இருந்த அந்தப்பையன், ஏமாற்றத்தோடு விலகிப்போனான்.

"மச்சான் ராகுல், எனக்கு பேராசை எண்டு நினைக்கிறியா? நான் ஒண்டும் கிளியோப்பட்ராவையோ, ஐர்வர்யாவையோ நினைச்சு ஏங்கேல்லையே. அந்த மூஞ்சிக்கு இந்த மூஞ்சி பொருத்தமே இல்லையா? காசு இருந்தால் சீலை வாங்கலாம். ஆனால்! மனசை வாங்க முடியுமா? அவளுக்கெல்லாம் நினைவு பெருத்து போச்சு மச்சான். நான் ஒரு விசரன்!."

"டேய் அருண் ரிலாக்ஸ் பிளீஸ். திரும்பவும் அதையே நினைச்சு கொண்டு இருக்காதை. இப்படித்தான் சிலருக்கு பிறர் மனம் நோகாமல் கதைக்கவே தெரியாது. இதை நாகரிகமாகவே மறுத்து இருக்கலாம். சரி போகட்டும். நாங்கள் கிரிக்கெட்டைப் பற்றிக் கதைப்பம் சச்சின் இப்ப...."

"துரை வந்தால் லட்சரூபா உங்களுக்கு! போனால் பத்து ரூபா நாட்டுக்காக! ஒரு ரிக்கட் எடுங்க துரை!." மீண்டும் அதே சிறுவன். அருண் கோபத்தோடு முறைத்துப் பார்த்தபோது, ஏமாற்றத்தோடு அப்பாலே போனான்.

"மச்சான் நான் அவளோடை எவ்வளவு நம்பிக்கையோட பழகினன். இவளே இப்படி என்றால் எனி வேறை யார்தான் என்னை மதிக்கப் போயினம்? மரத்திலை ஏறி மாங்கை பிடுங்க தெரியாதவனுக்கு எவறஸ்ட் சிகரம் எதுக்கு? மச்சான் இந்த உலகத்திலை வாழுறதிற்குரிய எந்த தகுதியுமே எனக்கு இல்லை மச்சான்!" அவன் கண்கள் கலங்கின.

"டேய் அருண் முட்டாள்தனமாய் பேசாதை!" உறுதியோடு பேசத்தொடங்கினான் ராகுல். "அவள் கேட்டதிலை என்ன தப்பு இருக்கு? யோசிச்சுப்பார்.

உன்னாலை ஒரு சேலை எடுக்கமுடியுமா? நாங்கள் முன்னேற வேணும். எனிமேல் தான்! ஒரு மனுசன் எதை இழந்தாலும் தன்னம்பிக்கையை மட்டும் இழக்கவே கூடாது. இதொண்டும் பள்ளிக்கூடக் காதல் இல்லை. படலையோடையே முடியிறதிற்கு. முதல் காதல் இல்லை, உணர்ச்சியை மட்டுமே காதலிக்கிறதிற்கு. இது முழுமையான காதல். யோசிக்கவேணும். எல்லாத்தையுமே யோசிக்க வேணும். எங்களை தயார்ப்படுத்திக் கொள்ள வேணும். உன்னை நம்பி வாழுறவளுக்கு உன்னாலை என்ன செய்ய முடியும்? படித்தால் மட்டும் போதாது. நல்ல தொழிலைத் தேடு. வாழ்க்கையிலை போராடவேணும். ஜெயிக்க வேணும்!."

"அருண் தெருவிளக்கிலை படிச்ச ஏபிரகாம் லிங்கன்தான் அமெரிக்க ஜனாதிபதி யானார். சென்னை தெருவிலை மூட்டை சுமந்த விஜிபி சகோதரர்கள் பெரிய தொழிலதிபர் ஆச்சினம். ஏன் வீதியோரத்திலை நித்திரை கொண்ட உன்ரை ரஜனிகாந்த் தான் பெரிய சூப்பர் ஸ்ரார் ஆனார். எல்லாம் முயற்சி! முயற்சி! முயற்சி! நீ அமெரிக்க ஜனாதிபதி ஆக வேண்டாம். ஒரு சேலை எடுத்து கொடுக்க கூடிய அளவுக்காவது வரவேமுடியாதா?" அருணின் முகத்தில் ஒருவித அமைதி.

"துரை ஒரே ஒரு ரிக்கற்தான் இருக்கு எடுக்கிறீங்களா துரை? மீண்டும் அதே சிறுவன். அவனைப்பார்க்கப் பாவமாக இருந்தது. பத்து ரூபாவை கொடுத்து ஒரு ரிக்கற்றை வாங்கிக் கொண்டான் அருண்.

"பார்த்தியா படிச்சமுட்டாளே! படிப்பே இல்லாத பத்துவயதான அந்தச் சிறுவனிட்டை இருந்த நம்பிக்கை, உறுதி, முயற்சி உன்னட்டை இருந்துதா? முதல் தரம் மறுத்தாய். இரண்டாம்தரம் முறைச்சாய். விட்டேனே பார் என்று மீண்டும் உன்னட்டையே ஒரு ரிக்கற்றை தந்திட்டு போட்டானே. அந்த விடா முயற்சி....? வாழ்க்கையில் நாங்கள் இவனிட்டை இருந்தே கற்றுக் கொள்ளவேண்டிய பாடங்கள் நிறைய இருக்கு மச்சான்!."

ஒரு கவிஞன் சொன்னான். நம் இளைஞர்கள் 'வெளிச்சத்திலே வாழ்க்கையை தொலைத்துவிட்டு இருட்டினிலே தேடுகின்றார்கள்' என்று.

"மச்சான் அருண் அவள் அப்பிடிஎன்ன தான் கேட்டாள். உன்னாலை ஒரு சேலை எடுத்துத் தர முடியுமா? என்றுதான்! அப்பிடி என்றால் என்ன அர்த்தம்! அவளுக்கு வேண்டியது வசதியான ஒரு வாழ்க்கை அவ்வளவுதான். அதை ஏன் நீ கொடுக்க முடியாது? யோசி மச்சான். நல்லாய் யோசி?"

மெல்ல எழுந்தான் அருண். முகத்தில் ஒரு தெளிவு. "முடியும் மச்சான்! முடியும். என்னாலை எதுகுமே முடியும். அவளுக்கு ஒரு சேலை என்ன சேலைக்கடையையே வாங்கிக் கொடுக்கமுடியும். என்ரை அறியாமையாலை என்னை நானே தாழ்த்திக் கொண்டேன். நீ தான் சிந்திக்கத் தெரிந்த சினேகிதன். உன்ரை அட்வைஸ்சுக்கு தாங்க்ஸ் மச்சான்!" என்று கூறியபடி தன் காற்சட்டையில் ஒட்டி இருந்த மண்ணை தன் சுண்டுவிரலாலே தட்டிவிட்டான் அருண்.

# "நாய்க்கு லைசன்ஸ் இருக்கு!"



வீணை வேந்தன்

"அக்கா! அக்கா!! உங்கட நாயை, நாய்பிடிகாறன் பிடிச்சுக் கொண்டு போறானக்கா!"

பதறிக்கொண்டு வந்து, சொன்னாள் பக்கத்து வீட்டுப் பர்வதம்.

"சத்தம் போடாதடி! நாய, நாய்பிடிகாறன் பிடிக்காமல், பிள்ளை பிடிகாறனா பிடிப்பான்? சனியன் எப்படா தொலையுமெண்டு காத்துக்கொண்டிருந்தன். அப்பாடா இண்டைக்குத்தான் அதுக்குக் காலம் வந்திருக்கு!."

குசினியுள் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டே கூறினாள் பாக்கியம்.

"அண்ணன் வந்து கேட்டால்.....?"

"அதை நான் பார்க்கிறன், நீ மட்டும் வாயைத் திறக்காமல் இருந்தால் போதும்!"

இடை மறித்துக் கூறிய பாக்கியம், தொடர்ந்தாள்.

"முதல்ல இந்த இடத்தவிட்டு போ. பூசை அறையில இருக்கிற மனிசன், வெளிய வந்து உன்னைக்கண்டாரெண்டால், எல்லாம் போச்சு!" என்று கூறி பர்வதத்தைக் கலைத்தாள் பாக்கியம்.

பூசை அறையுள் தேவாரத்தை வாய் பாட, செவி இரண்டையும் அகலவிரித்தபடி அண்டைவீட்டு, அயல் வீட்டுக் காலைச் சண்டைகளைக் கேட்டுக் கொண்டிருந்தவருக்கு தன்னுடைய வீட்டுச் செய்தி காதில் விழுந்ததும் அதிர்ந்தார்.

பாடிக்கொண்டிருந்த தேவாரத்தையும் இழுத்துக் கொண்டு பயந்து குசினிக்குள்வரவும், பர்வதம் வெளிக்கதவைச் சாத்திக் கொண்டு போகவும் சரியாக இருந்தது.

வாயில் இருந்த பாதித்தேவாரத்தை குசினிவாசலில் துப்பிப்போட்டுவிட்டு,

"ஏன்டி! என்ற நாய்க் குட்டி உனக்குச் சனியன்? வந்து பேசிறன்!" என்று கூறிக் கொண்டே வீட்டினுள் விரைந்தார். நாயின் பெல்ட்டைக் கையில் எடுத்துக் கொண்டு வெளியே வந்தார். வெளிக்கொடியில் தொங்கிக் கொண்டிருந்த சேட்டை இழுத்துத் தோளில் போட்டுக் கொண்டார்;

"நான் ஒண்டும் சும்மா நாய் வளக்கண் இல்ல. லைசென்ஸ் எடுத்துத்தான் வளக்கிறன். என்னைப்பற்றி இந்த நாய்ப் பயலுக்குத் தெரியாது. இத்தனை வருசத்தில எத்தனை செக்கிங் நடந்திருக்கும். ஒரு நாளெண்டாலும் என்ற வாசல்படியில கால்வைச்சிருக்க மாட்டாங்க இந்தப் பொலிஸ்காரங்க. அந்த அளவிற்கு இந்த சென்றியில என்ன நல்லாத தெரிஞ்சு வைச்சிருக்கிறாங்க. இவங்களைக் கொண்டே இவனுக்கு ஒரு பாடம் படிப்பிச்சுக் காட்டுறன்!"

இரைந்து கத்திக்கொண்டே, என்னவோ தெறிக்க வேகமாகப் போய்க் கொண்டிருந்தான் சண்முகம்.

"ஐயோ! இந்த மனுசனுக்குப் புத்தி ஏன் தான் இப்படிப் போச்சோ தெரியல்லையே. அவனவன் பெத்த பிள்ளையளை எப்படி வளக்கிறது எண்டு ஆலாப்பறக்கிறாங்க. 'இந்த மனுசன் ஒரு பேத்தக் குட்டியைத் தூக்கிக்கொண்டு அலைபாயுது. ஆனமான ஒரு அல்சசன் குட்டி கிடைச்சா நான் நினைக்க இல்ல!" என்று கூறிக்கொண்டே கழுவின பாத்திரங்களை அப்படியே விட்டு விட்டு, துணியால் கையைத் துடைத்துக் கொண்டே வெளியே வந்தாள் பாக்கியம்.

"மகன்! மகன்!! அப்பர் அந்தப் பேத்தக் குட்டியை நாய்பிடிகாறங்க பிடிச்சுக்கொண்டு போறாங்க எண்டு பாய்ந்து கத்திக்கொண்டு போறாரடி. எழும்படி எழும்பு. ஓடிப்போய்ப் பாரடி. அப்பர் தேவையில்லாமல் அவங்களோட சண்டகிண்ட பிடிச்சாலும் பிடிப்பார். எழும்படி!"

செல்லமாகத் தட்டி மகனை எழுப்பினாள் பாக்கியம்.

எழுந்து சோம்பல் முறித்துக்கொண்டு வெளியேவந்தான் குமார். வாசலில் இருந்த தண்ணிவாளியில் முகத்தை அலம்பினான். கொடியில் கிடந்த துண்டால் முகத்தைத் துடைத்தான். உடுப்பை மாற்றிக் கொண்டான். தலைவாரி பவுடர் போட்டுக் கொண்டு வீதிக்கு வந்தான் குமார்.

சந்தியால் திரும்பி வீட்டைநோக்கி ஒடிவந்து கொண்டிருந்தது அந்த நாய்க் குட்டி கழுத்தில் பெல்ரோடு.

"அக்கா! அக்கா!! உங்கட நாய்க்குட்டி வருதக்கா!" என்று மீண்டும் கத்திக் கொண்டு வந்தாள் பர்வதம்.

"சத்தம் போட்டுப் பேசாத எண்டன் கேட்டியாடி? போன சனியனைப் போகவிடாம, ஏணிவைச்சு இறக்கிற்றிது இந்த மனுசன்.... ம்... நாய் வீட்ட வந்திற்று, இந்த மனிசன் அங்க என்ன செய்யிறார்? இதுக்கு இருக்கிற அறிவு கூட...."

பாதியில் நிறுத்தி விட்டுப் பாக்கியம் மகனைப் பார்த்து, "அப்பர் தன்ர வீரப்பிரதாபத்த அளந்து கொண்டு நிற்பார். நீ போய்க் கூட்டிக் கொண்டு வா" என்றாள்.


குமார் நடந்தான்.

வேகமாகச் சைக்களில் வந்து ஒரு பையன் சொன்னான்;

"உங்களை, அவற்ற அடையாள அட்டையை எடுத்துக் கொண்டு பொலிஸ் ரேசனுக்கு வரட்டாம்!"

சந்தியால் சென்று கொண்டிருந்த நீலபஸ்ஸிற்குள் இருந்து, ஒருவர் கைகாட்டிக் கொண்டுபோனதை அங்கு நின்ற அனைவரும் பார்த்தனர்.

# பட்டதாரி



அ.கோகுலதீபன்-கல்முனை.

தவம் பற்பொடியைக் கையில் கொட்டியபடி மரத்திலிருந்த குருவியொன்றைப் பார்த்துக் கொண்டிருந்தான். 'இந்தக் குருவிக்கு இருக்கும் நிம்மதியான வாழ்க்கை கூட எனக்கில்லையே?'... சுதந்திரமாக எங்கும் பறந்து வாழ்க்கையை இன்பமாக அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. சீ... இனிமேல் பிறந்தாலும் மனிசனாகப் பிறக்கக் கூடாது. அதிலும் ஏழையென்ற வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்விகளையும், காயங்களையும் பிரதிபலிப்பதாக அமைந்தது.

"என்ன தவம் பல்லுத் தீட்டாம அப்படியொரு யோசனை?" பக்கத்து வீட்டு நல்லசிவம் கேட்டுக் கொண்டு போனார். "தம்பி.... தேத்தண்ணியக் குடிப்பா. ஆறிப் போகுது." தாய் குசினிக்குள் இருந்து கூப்பிட, "மூடி வையம்மா முகம் கழுவிட்டு வாறன்!" என்றபடி வேகமாகப் பல் துலக்கிக் கொண்டு கிணற்றடிப் பக்கம் போனான். முகம் கழுவிய கையோடு தேனீரை எடுத்துக் குடித்தான்.

"அண்ணா... இன்றைக்கு இன்டவியுல கலக்க வேணும்...!" குறும்புச் சிரிப்புடன் சொன்னாள் அவன் தங்கை. அவள் பத்தாம் தரத்தில் படித்துக் கொண்டிருக்கிறாள். தந்தையில்லாத அக்குடும்பத்திற்கு வருமானம் கிடைப்பது தவத்தின் தாய் தோட்டம் செய்து காய்கறிகளை சந்தையில் கொண்டு விற்பதனால்தான்.

'படித்தால் நல்ல வேலையிலிருக்கலாம். உழைத்துக் குடும்பத்தை நல்லபடியாகக் காப்பாற்றலாம். அத்துடன் தங்கச்சிக்கும் நல்ல வரன் பார்க்கலாம்' என்ற எண்ணத்தோடு படித்துப் பல்கலைக்கழகம் சென்று பட்டப் படிப்பை முடித்து வெளியேறியவன் தவம். மூன்று வருடமாகியும் இன்றும் வேலை கிடைக்கவில்லை. இரண்டு தடவை கூட உண்ணாவிரதப் போராட்டமும் நடாத்தி முடிந்தாயிற்று. ஆனாலும் ஏமாற்றம் தான் மீதமானது. இது இன்றைக்கு அவன் போகும் மூன்றாவது நேர்முகப் பரீட்சையாகும். ஒவ்வொரு இன்றவியிலயும் ஏமாற்றம்தான்- இதுவரை எவருக்கும் வேலை கொடுத்த மாதிரி தெரியவில்லை.

சப்பாத்தைப் போட்டுக் கொண்டு பட்டம் பொறிக்கப்பட்ட சான்றிதழை எடுத்து ஒரு முறை பார்த்தான். அதைப் பார்த்து அழுவதா? அல்லது சிரிப்பதா? என்று அவனுக்குத் தெரியவில்லை. பைலுக்குள் அதை வைத்துவிட்டு சுவாமி கும்பிட்டான். "கடவுளே இந்தத் தடவையாவது வேலை கிடைச்சுட வேணும்... அதற்கு நீதானப்பா பொறுப்பு...!" அவனது வேண்டுதல் கடவுளிடம் கட்டளையிடுவதாகவே இருந்தது.

"தவம்.. சாப்பாடு எடுத்து வச்சிருக்கன். சாப்பிட்டுட்டுப் போப்பா..." அவன் தாய் குசினிக்குள் இருந்து கூப்பிட்டாள். "நான் வந்து சாப்பிடுறன்... இப்ப எனக்குப் பசிக்கல்ல...!" என்றபடி வீட்டை விட்டு வெளியேறினான். வேலை ஒன்று கிடைக்கும் வரையில் அவனால் நிம்மதியாகச் சாப்பிடக் கூட முடியவில்லை.

பக்கத்து வீட்டு நல்லசிவத்தின் சைக்கிளை கேட்டு வாங்கிக் கொண்டு அவசர அவசரமாகப் புறப்பட்டான்.

"என்னடா தவம் பாக்காமப் போற.. என்னப் பார்க்க விருப்பமில்லையா?" வழியில் உழவு இயந்திரத்தில் வந்து கொண்டிருந்த அவனது முன்னாள் பாடசாலை நண்பன் சுகந்தன் கேட்டான். "ஆ... சுகந்தனா கவனிக்கலடா மச்சான்... இன்டவிக்குப் போற அவசரம்.. அது சரி யார்ர ட்ரக்டர் இது...?" ஆச்சரியத்துடன் தவம் கேட்டான். "என்னோடது தான். போன கிழம தான் வாங்கினது... போன போகம் நல்ல விளைச்சல் தானே... அதால ஆறுலட்சம் மட்டில லாபம் வந்திச்சு... எல்லாத்துக்கும் உதவுமெண்டிற்று இத வாங்கிற்றன்!" சுகந்தனின் பேச்சில் சந்தோசம் தெரிந்தது. தவத்தால் ஒன்றும் பேச முடியவில்லை. வாய் பிளந்து நின்றிருந்தான். "தவம் உனக்கு இன்டவியுக்கு லேட்டாகிடும்... நான் பின்னேரம் வீட்ட வர்றன்!" புறப்பட்டான் சுகந்தன்.

'இடையில் படிப்பை விட்டவன். இன்றைக்கு சந்தோசமாகத்தானே வாழ்கிறான். நானும் வயல் செய்திருந்தாலாவது நாலு காசு உழைச்சிருக்கலாம். வேலை கையில் இருக்கும் போது ஏன் மற்றவர்களிடம் கைகட்டி நிற்கணும்.... இது தான் நான் போற கடைசி இன்டவியாக இருக்கும்' உறுதியான முடிவோடு சைக்கிளை வேகமாக மிதித்துச் சென்றான் தவம்.

# இலக்கிய நயம்

# காற்றின் கோபம்!

**தருவது முழடில்யன்**

**ஒரு** பூங்கொடியென அஜயன் தோளைத் தழுவிக் கிடந்தாள் தாரிணி. ஏகப்பட்ட வளைவுகள் திருப்பங்களோடு அவனைப் பற்றிப் படர்ந்திருந்தது கொடி. அவன் கழுத்தருகே முதுகுப் புறமாக மலர்ந்து கிடந்தது கொடியின் பூ.

நன்றாக மூச்சை இழுத்து விட்டுக் கொண்ட தாரிணி சொன்னாள்: "சூரியன் போனபிறகும் அவன் விட்டுச் சென்ற சூட்டைப் பிடித்துவைத்துக் கொண்டிருக்கிறது இந்தக் காற்று. எப்படிச் சுடுகிறது பாருங்கள்..."

அஜயன் சிரித்தான். "அது கதிரவன் குற்றமில்லை, நம் காதலின் குற்றம்!"

"என்ன?"

"நம் உடலிலிருந்து பிறந்த சூட்டை வாங்கி உலவுகிறது காற்று." சொல்லி அவள் தோள்களை மென்மையாக முத்தமிட்டான்.

"நெருங்கியிருக்கையில் சூடேது அத்தான்! நீங்கினால் சுடுகின்ற நெருப்புதானே காதல்!"

அஜயன், தன்மீது பின்னிக் கிடந்த கொடியை மேலும் இறுக்கி அணைத்தான். அவள் காதுக்குள் முனகியபடியே, "காற்றுக்கு நம்மீது கோபம் போலும்!" என்றான்.

"காற்றுக்கு என்ன கோபம்!" அவன் கன்னத்தில் தன் உதடுகளால் ஆச்சரியத்தை எழுதினாள்.

"நம் இருவருக்குமிடையில் புகமுடியாத கோபம்." சொல்லிவிட்டு



அவளை மூச்சுத்திணற வைத்தான்.

மூச்சுமுட்டியதில் சிறிதுநேரம் பேச்சு வரவில்லை தாரிணிக்கு. அவன் தோள்களில் கன்னத்தைச் சாய்த்துக் கண்மூடிக் கிடந்தாள்.

திடீரென்று விழித்துக் கொண்டு, அவன் தோளிலிருந்து முகத்தை நிமிர்த்தாமலே கேட்டாள்: "இந்தச் சித்திரவதையில் ஏன் அப்படி ஒரு தேன் மாந்தும் இன்பம் விளைகிறது?"

"தேன் விளையும் பல இடங்கள் உன் உடலிலேயே இருக்கிறதே..." என்று தாரிணியின் உதடுகளை இரு விரல்களிடையே அழுத்தியபடி சொன்னான் அஜயன்.

அவள் செல்லமாகச் சிணுங்கினாள்.

"ச்சீ... உண்மையாய்க் கேட்கிறேன். வலிக்க வலிக்க இன்பம் சுரக்கிற இரகசியத்தை இந்த உடல் எங்கே ஒளித்து வைத்திருக்கிறது?"

"வலியா? காதலில் வலி கிடையாது கண்ணே! உச்சி வெயிலின் கீழ் அமர்ந்திருந்தாலும் நம்மை குளிரோடையில் மிதக்கவிடும் ஆற்றல் காதலுக்குண்டு. உன் மேனி தழுவும் இன்பத்துக்கு நிகராய் ஒரே ஒரு இன்பம்தான் உண்டு...."

"என்ன அது?"

"நம்மால் பிறர் மகிழ்ச்சிப்படுவதைப் பார்க்கும் இன்பம்!"

"அதெப்படி மொட்டத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டதுபோலச் சொல்லுகிறீர்கள்?"

அஜயன் அவள் கரத்தை எடுத்துத் தன் மடியில் வைத்தான். விரல்களுக்குள் தன் விரல்களைக் கோர்த்தான். அப்படியே எடுத்து அவள் புறங்கையைத் தன் உதடுகளால் ஈரமாக்கினான்.

"உன்னைத் தழுவுகையில் எனக்கு ஏற்படும் உன்மத்தம் இன்னொருவர் மகிழ்ச்சிக்கு நான் காரணமானேன் என்று அறிகையிலும் ஏற்படுகிறது... மனம்தானே கண்ணே மகிழ்ச்சியை வாங்குகிறது, வெளிப்படுத்துகிறது..."

"அதனால்...?"

"உச்சபட்சமான மகிழ்ச்சி அந்த இரண்டும்தான் என்று தோன்றுகிறது. உன் அழகு, இந்த நிலவூறித் ததும்பும் விழிகள், இந்தத் தளிர் மேனி அணைப்பு... எல்லாம் என்னை மனித நிலையிலிருந்து உயர்த்தி தேவனாக உணர வைக்கிறது. அந்த இன்பத்தை நான் அப்படித்தான் விபரிக்க முடியும். அதுபோலத்தான், இன்னொருவர் வாழ்வுக்கு நான் இன்றியமையாதவனாக இருந்தேன் என்கிற உணர்வு என்னைத் தேவனாக, சாதாரண மனிதனிலிருந்து மேம்பட்டவனாகக் களிப்பினில் மிதத்துகிறது...."

"தழுவும் இன்பம் பிறருக்கு உதவும் இன்பத்துக்குச் சமம் என்கிறீர்கள்....."

"ஆமாம் அதிலும் வள்ளுவர் கூறுகின்ற பரோபகாரம் இன்னும் விசேடமானது. தானே உழைத்துச் சம்பாதித்ததைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுத்து வாழ்கிறபோது ஏற்படுகிற களிப்புக்கு இணையாக அழகிய மனையாளைத் தழுவும் இன்பத்தைச் சொல்கிறார் அவர். அரசாங்கச் சொத்தைப் பலருக்கும் பகிர்ந்து கொடுக்கிற பரோபகாரம் இல்லை இது. நாமே உழைத்துச் சேர்த்ததை மற்றையோருக்கும் பயனுடையதாக்குவதில் கிடைக்கிற இன்பம்!

அதுதான் இந்தக் காற்றுக்குக் கோபத்தை ஏற்படுத்தியது நம் அணைப்புக்கு ஈடு!"

**தம்மில் இருந்து தமதுபாத்**
**துண்டற்றால்**
**அம்மா அரிவை முயக்கு.**

(குறள்: 1107)

# ஸ்போர்ட்ஸ்

## சச்சின் சந்தித்த சச்சின்



**த**ங்களுக்குப் பிடித்த கிரிக்கெட் வீரர்களின் பெயர்களைத் தமது குழந்தைகளுக்குச் சூட்டி மகிழ்வர் சிலர். அதே போல பல பிரபல கிரிக்கெட் வீரர்கள் கூட தமது வாரிசுகளுக்குப் பிரபல கிரிக்கெட் வீரர்களின் பெயர்களைச் சூட்டுவார்கள்.

இந்தியாவின் முன்னாள் கப்டன் சுனில் கவாஸ்கர் தனது மகனுக்கு, பிரபல மேற்கிந்தியத்தீவு வீரர் ரோகன் கன்காயின் பெயரில் இருந்து ரோகன் என்ற பெயரைச் சூட்டியிருக்கிறார்.

அஸாருதீன் தனது மூத்த மகனுக்கு பாகிஸ்தானின் பிரபல வீரர் ஸாகிர் அப்பாஸ் பெயரில் இருந்து அப்பாஸ் என்று பெயர் சூட்டியுள்ளார்.

இந்திய அணியின் முன்னாள் கப்டனும் சுழற்பந்து வீச்சாளருமான பிஷன் சிங் பேடி தனது மகனுக்கு சுனில் கவாஸ்கர் என்று பெயர் வைத்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகளில் பல 'சுனில் கவாஸ்கர்கள்' உள்ளனர். கவாஸ்கருக்குக் கிடைத்த பெருமை இப்போது சச்சின் டெண்டுல்கருக்குக் கிடைத்துள்ளது.

கவாஸ்கர் மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனான போட்டிகளில் விளையாட ஆரம்பித்துப் பிரபலமாகியது போல் டெண்டுல்கரைப் பிரபலமாக்கியது அவுஸ்திரேலியாவுடனான போட்டிகள்.

இவ்வருடத் தொடக்கத்தில் அவுஸ்திரேலியாவில் நின்ற இந்திய அணி அங்கு பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. அப்போது கூட்டத்தோடு கூட்டமாக 7 வயதுச் சிறுவன் ஒருவனும் டெண்டுல்கரைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சுமர் 3 மணிநேரமாக டெண்டுல்கர் பயிற்சி பெறுவதைப் பார்த்துக் கொண்டிருந்த அச்சிறுவன் பயிற்சி முடிந்ததும் டெண்டுல்கரிடம் கையெழுத்து வாங்கச் சென்றான்.

அச்சிறுவனிடம் டெண்டுல்கர், "உன் பெயர் என்ன?" என்று கேட்க, "சச்சின் வோட்" என்றான்!

அதிர்ச்சி கலந்த ஆச்சரியத்துடன் சிறுவனின் தந்தை வோட் என்பவரை அழைத்து விசாரித்தார் டெண்டுல்கர், தன் மகனுக்குப் பெயர் சூட்டியதை விளக்கினார் வோட்.

1991-92ல் 18 வயது இளைஞரான டெண்டுல்கர் இந்திய அணியில் இடம்பெற்று அவுஸ்திரேலியா சென்றார். அங்கு 2 சதங்கள் அடித்தார். டெண்டுல்கரின் ஆட்ட நுணுக்கங்களில் கவரப்பட்டு, அதே ஆண்டு பிறந்த தனது மகனுக்கு சச்சின் என்று பெயர் சூட்டிவிட்டார்.

அந்தச் சச்சின் தான் கையெழுத்து வாங்க வந்து டெண்டுல்கரை ஆச்சரியத்தில் மூழ்க வைத்த சிறுவன்.

## குறைந்த எண்ணிக்கை

**அ**ண்மையில் கிரிக்கெட்டின் மக்கா எனப்படும் இங்கிலாந்தின் லோர்ட்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற 100வது டெஸ்ட் போட்டி இங்கிலாந்து-மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையே நடைபெற்றது.

இப்போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் மேற்கிந்தியத்தீவு அணி 54 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. இது மேற்கிந்தியத் தீவுகள் பெற்ற மூன்றாவது குறைந்த டெஸ்ட் ஓட்ட எண்ணிக்கை ஆகும்.

மேற்கிந்தியத் தீவுகள் பெற்ற மிகக்குறைந்த 6 ஓட்ட எண்ணிக்கைகள் வருமாறு:

51 அவுத்திரேலியாவுக்கு எதிராக 1998-99 ;போர்ட் ஓ;ப் ஸ்பெயின்
53 பாகிஸ்தானுக்கு எதிராக 1986-87 ;பைஸாலாபாத்
54 இங்கிலாந்துக்கு எதிராக 2000 லோர்ட்ஸ்
76 பாகிஸ்தானுக்கு எதிராக 1958-59 டாக்கா
77 நியூஸிலாந்துக்கு எதிராக 1955-56 ஒக்லாண்ட்
78 அவுதிரேலியாவுக்கு எதிராக 1951-52 சிட்னி.

# சிந்தியா பதில்கள்

**கே: தமிழ்ப் படங்களிலே வரும் கணவர்மார் மனைவிக்கு மல்லிகைப் பூவோடு அல்வாவும் வாங்கி வருகிறார்களே, அல்வாவில் அப்படியென்ன விசேஷம் சிந்தியா?**

என். சூரியகுமாரன், ஹற்றன்.

ஆஹா! என்ன ஓர் அறிவுப் பசி! கூட்டுக் குடும்பத்தில், இரவு நேரம் பக்கோடா, முறுக்கு என்று வாங்கிக் கொடுத்தால், மனைவி அதைக் கடிக்கும் சத்தத்தில் மற்றவர்களும் முழித்துக் கொண்டு பங்குக் கேட்பார்களே... அதனால்தான் சத்தம் இல்லாத இனிப்புக் கேட்டாள். அல்வா கண்டுபிடிக்கப் பட்டது. என்ன ஒரு கண்டுபிடிப்பு!

●●

**கே: உண்மையான நண்பர்களை எப்படி அடையாளம் காண்பது?**

சிவராஜா பஸ்மியா, காத்தான்குடி-06.

மற்றவர்களிடம் உங்களைப் பற்றி என்ன பேசுகிறார் என்பதை வைத்து!

●●

**கே: ஓடுண்டு ஆமையில்லை; முடியுண்டு முனிவரில்லை; முக்கண் உண்டு சிவனுமில்லை... விடுகதைக்கு விடை தெரியுமா சிந்தியாவுக்கு?**

க. மலர்விழி, வவுனியா.

ம்ம்.... தாடிக்காரன், மீசைக்காரன்; போட்டுடைத்தால் வெள்ளைக்காரன். சரிசரி, முடியுண்டு முனிவரில்லையா, மன்னனில்லையா....?

●●

**கே: சிந்தியா! குட்டிக் கவிதை ஏதாவது?**

ச.முகுந்தன், 1ம் பிரிவு, மண்டூர்.

நீலமணியின் 'தீர்க்கரேகை' தொகுப்பிலிருந்து.....

என்ன வரம் வேண்டும்
என்கிறார் கடவுள்
அது தெரியாத
நீர் என்ன கடவுள்?

●●

**கே: இந்த நாட்டு மக்களின் அவலம்?**

வி. பிரியதர்ஷினி, கொழும்பு-06.

ஏழு பனையின் ஓலையில் எழுதி முடித்தாலும் தீராது....

●●

**கே: காதலிப்போருக்கு நீங்கள் கூறும் அறிவுரை?**

ஹஸன் ராஸா, பாலாவி, எருக்கலம்பிட்டி.

காதலியுங்கள். பாட்டனும் சொன்னான்: 'அது வொன்றே இவ்வுலகத் தலைமையின்பம்!'

●●

**கே: காதலை தெய்வம் என்கிறார்களே, காதலின் சக்தி என்ன சிந்தியா?**

வாணி மார்க்கண்டு, கிரான்.

சாதாரண மனித இயல்புகளிலிருந்து மனிதனைக் கடத்திவிடுகிறது காதல். கி.பி. 17ம் நூற்றாண்டில் வட இந்தியாவில் வாழ்ந்த கவிஞர் கானானந்தர், சுஜன் என்பவள் மீது கொண்ட ஒருதலைக் காதலில் பாடுகிறார்: "இறைவா! உன்னை யாசிக்கிறேன். என்னை மென்மயான சின்னஞ்சிறு பூச்சியாக்கி விடு. நான் பறந்து சென்று அவளுடைய உள்பாவாடையின் நாடாவில் குடியிருப்பேன். அவளின் மென்மையான இடுப்பை அவ்வப்போது ஸ்பரிசம் செய்து, முத்தமிட்டு இனி என் வாழ்நாளைக் கழிப்பேன். எப்போதாவது அவளுடைய விரல்கள் பட்டு நான் இறக்க நேர்ந்தால், எனக்கு மகிழ்ச்சியே! என் மூச்சை நிறுத்தியதும் அவளுடைய விரல்கள் அல்லவா!"

●●

**கே: கூடிக் கூடிப் பேசுகிறார்கள். பிறகு தீர்வுத் திட்டத்தில் இருப்பது என்னவென்றே தெரியாதென்கிறார்கள். இதெல்லாம் என்ன கூத்து சிந்தியா?**

கே.சுபாகரன், மட்டக்களப்பு.

பிடிக்காததிலிருந்து நழுவிக்கொள்ள எத்தனையோ வழி-எல்லோருக்கும் தான்!

'வயலின் தெரியுமா வயலின்' என்று கேட்டால்,

'வாயில் வைத்து மேளம் மாதிரி ஊதுவதுதானே' என்றானாம்.

●●

**கே: கிரிக்கெட்டிலிருந்து விடைபெறும் அர்ஜுனா பற்றி?**

ஞானம் சரோஜா, அக்கரப்பத்தனை.

கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்று அவர் போகுமிடம் பற்றித் தெரிவிக்கப்படும் தகவல்கள் மகிழ்ச்சியளிப்பதாயில்லை. ஆனாலும் இலங்கையின் கிரிக்கெட்டைத் தலைநிமிர வைத்ததில் அவருடைய பங்கு யாராலும் மறுக்கப்பட முடியாதது. அந்த ராஜநடையை களத்திற்குள் இனி காண முடியாது என்பதில் வருத்தமே. அவரது துடுப்பாட்ட நளினத்திற்கும் நான் பரம விசிறி. இலங்கையில் கிரிக்கெட் விளையாடப்படும்வரை அர்ஜுனா பெயர் நினைவுகூரப்பட்டுக் கொண்டேயிருக்கும்.

●●

**கே: தமிழ் சினிமாத் துறையில் மிகவும் குறைவாகி வருவது எது?**

என்.எம். நிஸாம் காத்தான்குடி-02.

நடிகையர் உடை!

●●

**கே: பாடல்கள் எல்லாம் இதயத்தைக் கலக்குகிறதே... 'இதயக்கோயில்' படத்தின் கதாநாயகன் யார்?**

ஆர். மூர்த்தி, வட்டகொடை.

இவ்வளவு காலம் எங்கிருந்தீர்கள் மூர்த்தி? மைக்கைப் பிடித்து மேடையில் பாடி நடிப்பதற்கென்றே முரளிக்கு முன்னர் ஒருவர் இருந்தார். மோகன் என்று அவருக்குப் பேர்!

●●

**கே: 'உன்னைக் கொடு என்னைத் தருவேன்' எப்படி?**

யா. ரொஷான், ஒந்தாச்சிமடம்.

வேண்டாம், ஆளை விடுங்கள்! தேசபக்தி என்ற பெயரில் மற்றவர்களையெல்லாம் கொல்லச் சொல்கிறது படம். இனவாதம், மதவாதம், தேசிய வாதம் என்றெல்லாம் அவர்கள் உணர்ச்சி ஆவேசங்களைத் தருவார்கள். பதிலாக நாம் உயிரைக் கொடுக்க வேண்டும். அல்லது மற்றவர்களின் உயிரை எடுக்கவேண்டும். காதலைச் சொல்லும் தலைப்பில் கள்ளூற்றித் தந்திருக்கிறார்கள்.

●●

**கே: F.M 99, கலைஒலி, சுவர்ண ஒலி, வித்தியாசம் என்ன?**

பாத்திமா சுபைதா, கொழும்பு-02.

வளர்ந்தவை-ஒலிபரப்பு நேரம், நிகழ்ச்சி வகைகள், அறிவிப்பாளர்களின் எண்ணிக்கை, விளம்பரங்கள்......

வளராதவை- உச்சரிப்புத் தெளிவும், உள்ளூர்ப் பாஷையும்.

சுவர்ண ஒலியில் எனக்குப் பிடித்தது, நிலையத்தை அறிமுகப்படுத்தும் பாடல்கள் தான்! கூடவே, வேகமாகப் பேசும் அந்தப் பெண் அறிவிப்பாளரின் துடிதுடிப்பும்.

●●

**கே: சிந்தியா! சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் ரூபவாகினியில் உதயதரிசனம் பார்க்கிறீர்களா?**

ஆர்.எம்.றிஸாத், ஹொரவப்பொத்தானை.

ம்... பார்க்கிறேன். தமிழ் நிகழ்ச்சிகளுக்கு நேரம் ஒதுக்கியது போதவில்லை... போதவில்லை என்று குறைப்பட்டுக் கொள்கிறார்களே.... ஒதுக்கினால் என்ன நடக்கும் என்பதைப் பார்க்க வருத்தமாக இருக்கிறது.

●●



**கே: நிறைவேறாத ஆசையை எப்படி நிறைவேற்றிக் கொள்வது?**

ஷகிலா வேலுப்பிள்ளை, நானுஓயா.

நிறைவேற்றிக் கொண்டால் எப்படி அது நிறைவேறாத ஆசையாகும்!

●●

**கே: தோற்ற கட்சியிலிருந்து உடனே விலகுகிறவர்களுக்கு நாலு உவமைகள் சொல்ல முடியுமா?**

ஆர். அசோக்குமார், டிக்கோயா.

செத்த நாயிலிருந்து உண்ணி கழருவது போல....

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவை போல....

காய்ந்த புண்ணிலிருந்து கடி விலகுவது போல....

பிணத்தின் தலையிலிருந்து வெளியேறும் பேன்கள் போல.....

# மன்னாதி மன்னன் 19

## அழகியை விழுங்கிய அரக்கன்!

இராஜகுமாரன்

அரசன் வம்சமார்க்கனும் அவருடைய அமைச்சரும் கப்பலேறி அடுத்த ஊருக்குச் சென்றனர். கரையிலிருந்து காளிகோயிலைச் சென்றடைந்தனர். அக்கோயிலடியிலுள்ள மேடையொன்றில் அமைச்சர் ஏற்கனவே பார்த்த அதே அழகிய இளம் பெண் படுத்திருப்பதை இருவரும் கண்டனர்.

அந்த பேரழகியின் அழகில் கலாரசிகனான அரசன் வம்சமார்க்கன் மயங்கிவிட்டான். அவனை எப்படியாவது தான் மணம் முடித்தேயாக வேண்டும் என்ற உறுதியுடன் காணப்பட்டான்.

அரசனின் இந்த ஆசையைப் பார்த்து அமைச்சன் பெரும் சங்கடப்பட்டான். அரசன் அவளருகில் துணிந்து சென்று அவளுடைய உடலில் நீர் தெளித்தான். அவளும் தூக்கம் கலைந்து எழுந்தாள்.

அப்பேரழகியிடம் மன்னன், தன் விருப்பத்தைத் தெரிவித்தான் அவளும் அரசனுடைய விருப்பத்திற்கு இணங்கினாள்.

அடுத்தநாளே அதே காளிகோயிலில் இருவருக்கும் திருமணம் நடைபெற்றது.

அன்றைய தினமே தன்னுடைய நாட்டுக்கு வருமாறு அரசன் அந்த அழகிக்கு அழைப்பு விடுத்தான். ஆனால் அவள் அரசனுடன் செல்ல மறுத்துவிட்டாள். தான் ஒரு விரதம் அனுஷ்டித்து வருவதாகவும் அது நிறைவேறியதும் தான் புறப்பட்டு வர முடியும் என்றும் கூறினாள்.

அவளுடைய விரதம் முடியும் வரையும் தான் அந்த ஊரிலேயே தங்கியிருக்கப் போவதாக மன்னன் கூறிவிட்டான். தனது விரதம் முடியும் வரைக்கும் தன் கணவன் தன்னை தீண்டலாகாது என்றும் நிபந்தனையிட்டாள். பெரும் மனக்குழப்பத்துடன் மன்னனும் ஒப்புக் கொண்டான். இருப்பினும், தனது மனைவியின் பேரழகில் மயங்கியவன் என்பதால் அவளை எங்கு சென்றாலும் பார்த்து ரசித்தவண்ணமே இருந்தான்.

அவளின் விரதம் நிறைவு பெறும் நாளன்று அவள் குளத்தில் நீராடப் போயிருந்தாள். அப்போது குளத்திலிருந்த அரக்கன் ஒருவன் அவளை ஒரேயடியாக விழுங்கி விட்டான்.

நீரில் மூழ்கிய தன் மனைவி நீண்ட நேரமாகியும் வெளியே வராததைக் கண்ட அரசன் நீரில் குதித்து சுழியோடினான். நீரின் அடியில் ஒரு பெரிய அரக்கன் அயர்ந்து படுத்து தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டான். அவன் அருகில் தன் மனைவியின் அணிமணிகள் சில கிடப்பதையும் கண்டான். அரக்கனின் வயிறு அளவுக்கு மீறிப் படுத்திருப்பதையும் அவ்வயிற்றுக்குள் மற்றோர் உயிரினம் துடித்துக் கொண்டிருப்பதையும் அரசனால் காண முடிந்தது. தன் மனைவியை இந்த அரக்கன் தான் விழுங்கியிருக்க வேண்டும் அவனுடைய வயிற்றுள் அவள் உயிருடன் தான் இருக்கிறாள் என்பதை அரசன் தெரிந்து கொண்டான்.

உடனடியாகவே தன் உடைவாளை எடுத்து தூங்கிக் கொண்டிருந்த அரக்கனின் வயிற்றைக் கீறினான். அவன் எதிர்பார்த்தது போல் அவன் மனைவி அரக்கனின் வயிற்றில் இருந்து வெளிப்பட்டாள்.

இருவரும் நீரிலிருந்து வெளியேறி கரையை அடைந்தனர். கரையில் அமைச்சர் செய்வதறியாது திகைத்தவண்ணம் காத்திருந்தான். குளத்திற்குள் அரக்கனின் வயிற்றை அரசன் கீறியமையினால் இரத்தப் பெருக்கு ஏற்பட்டு குளம் முழுவதும் இரத்தமாக மாறியிருந்தது. இதைப் பார்த்ததும் அமைச்சன் துணுக்குற்றான். சற்று நேரத்துக்கெல்லாம் அரசனும் மனைவியும் நீரிலிருந்து வெளியேறியதைக் கண்டதும் மிக்க மகிழ்ச்சியடைந்தான்.

மூவருமாகச் சென்று அம்பாளை வணங்கினார்கள்.

இளைப்பாறிய வண்ணம் மூவரும் இருக்கும் போது, அப்பெண் தன்னுடைய பூர்வீக விவரத்தையிட்டு கூறலானாள்.

"நாதா, நான் நீங்கள் நினைப்பதுபோல் ஒரு மானிடப் பெண்ணல்ல. தேவலோகத்தைச் சேர்ந்தவள். மிருகாங்கன் என்ற தேவனின் மகள். என் தந்தைக்கு ஆயிரம் பிள்ளைகள் இருந்தனர். ஆனால் இளையவளான என் மீதுதான் என் தந்தைக்குப் பாசம் அதிகம். மூன்று வேளையும் அவர் உணவு உண்ணும் போது நான் அவர் அருகிலேயே இருந்தாக வேண்டும்.

அன்றொருநாள் பார்வதி நோன்பிற்காக நான் ஆலயம் சென்றிருந்தேன். தோழிகளுடன் ஆலயச் சடங்குகளில் ஈடுபட்டிருந்த நான் வீடுதிரும்பச் சற்று தாமதமாகிவிட்டது.

அன்று மதிய உணவுக்கு எனது தந்தையார் ஆயத்தமாகி இருந்தபோது அவருடன் அமர்ந்து உண்பதற்கு நான் இல்லாதிருப்பது கண்டு கோபமடைந்தார். தாமதமாகி நான் வந்து கொண்டிருப்பதைக் கண்ட என் தந்தை எனக்கு சாபமிட்டார்.

இந்தக் குற்றத்திற்காக 'நீ ஓர் அரக்கனால் விழுங்கப்படுவாய்' என்று சாபமிட்டார். நான் பலவாறாக அவரிடம் அழுது புரண்டு சாபத்தை நீக்கியருளுமாறு கேட்டுக் கொண்டேன். அப்போது மனமிரங்கிய என் தந்தை சாபவிமோசனம் அளித்தார். அரக்கன் என்னை விழுங்கினாலும் ஓர் அரசன் உன்னை மீட்டு, உன்னை அவன் மனைவியாக ஆக்கிக் கொள்ளுவான் என்று கூறினார்.

ஆகவே என் தந்தையின் சாபமும் நிறைவேறி அதற்குரிய விமோசனமும் பிறந்துவிட்டது!" என்று தன் கதையைக் கூறினாள்.

இதனைத் தொடர்ந்து தனது புதிய மனைவியை அழைத்துக் கொண்டு அமைச்சருடன் கப்பலில் ஏறித் தன் சொந்தநாட்டை அடைத்தான் அரசன்.

நாடு திரும்பிய மன்னனுக்கு மக்கள் மகத்தான வரவேற்பளித்து இருப்பினும் மன்னன் தன் பழைய போக்கை விட்டுவிடாமல் மீண்டும் தன் மனைவியையே சுற்றி சுற்றிச் வலம் வந்தான். தனக்குரிய கடமைகளைச் செய்யாமல் தன் அழகிய மனைவியுடன் அந்தப்புறத்திலேயே கிடந்தான்.

அரசன் மீது மக்கள் வெறுப்படைந்ததைப் போல அமைச்சனுரும் மிகவும் வெறுப்புற்றான். எந்த வகையிலும் இந்த மன்னனைத் திருத்த முடியாது என்று கருதிய அவர். தன்னால் தானே அரசன் மீண்டும் இந்நிலையை அடைந்திருக்கிறான் என்று தன் மீது பழியைப் போட்டுக் கொண்டு தற்கொலை செய்து இறந்தான்.

அமைச்சன் தற்கொலை செய்து கொண்டதை அறிந்த மன்னன் தானும் நஞ்சையுண்டு தற்கொலை செய்து கொண்டான்.

இவ்வாறு கதையைக் கூறிய வேதாளம் விக்கிராமாதித்தனிடம், மன்னாதி மன்னனே! அமைச்சன் ஏன் தற்கொலை செய்து கொண்டான் என்று உம்மால் கூற முடியுமா?" என்று கேட்டது.

இதற்கு பதிலளித்த விக்கிரமாதித்த மன்னன் "அரசனுடைய குணத்தை நன்றாகத் தெரிந்து வைத்துக் கொண்டு அந்த அரசனுக்கு தான் கண்ட தேவ கன்னியைப் பற்றி கூறி அரசனை அழைத்துக் கொண்டு போய் அவனைக் காண்பித்து அவள் மீது மன்னன் மையல் கொள்ளத் தானே காரணமானதால், தனே குற்றவாளி என்று கருதியமையினால் அமைச்சன் தற்கொலை செய்து கொண்டான்!" என்று புதிரை விடுவித்தார்.

விக்கிரமாதித்தனுடைய பதிலைக் கேட்ட வேதாளம் மீண்டும் ஒடிச் சென்ற பழையபடி முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது. வேதாளத்தைத் தொடர்ந்து விக்கிரமாதித்தனும் ஒடிச் சென்று முருங்கை மரத்தில் ஏறி, வேதாளத்தைப் பிடித்துக் கொண்டு தோள் மேல் சுமந்து கொண்டு விக்கிரமாதித்தன் நடக்கலானான்.

அப்போது வேதாளம் பதின் மூன்றாவது புதிர்க் கதையைச் செல்லத் தொடங்கியது.

### பதின்மூன்றாவது கதை

முன்பொருகாலத்தில் புட்பபுரம் என்ற நாடு செல்வச் சிறப்புமிக்க நாடாகத் திகழ்ந்தது. ஆனால் அந்நாட்டில் மழை பெய்யாத காரணத்தால் வரட்சி அதிகரித்து விளைச்சல் எதுவுமில்லாமல் நாடு பாழடைந்தது.

நாட்டு மக்களும் வேறிடங்களுக்கு குடி பெயர்ந்து சென்றனர். அங்கிருந்த ஆலயங்களும் பூசை, வழிபாடுகள் எதுவுமின்றி பாழடைந்து கிடந்தன. அவ்வாறு பாழடைந்த ஒரு கோவிலின் முன் மண்டபத்தில் பல நாட்கள் உணவின்றிக் கிடந்த ஒரு பிராமண இளைஞனை அங்கு வந்து பார்த்த முனிவர் ஒருவர், அவன் மீது இரக்கம் கொண்டார். அவனுக்கு வயிறார உணவளிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அந்த பாழடைந்த கோவிலுக்கு முன்புறமாக, தனது மந்திர வலிமையால் முனிவர் வீடொன்றை அமைத்தார். அங்கு ஒரு பிராமண குடும்பத்தையும் உண்டாக்கினார். அந்த இளைஞன் அந்த வீட்டிலேயே மூன்று வேளையும் நன்றாக உணவு உண்டு உற்சாகமானான்.

தன்னுடன் இருந்த முனிவர் மந்திரத்தால் பல அரிய செயல்களை செய்வது கண்டு வியந்தான். தானும் மந்திரம் படிக்க வேண்டு மென்று அவனுக்கு ஆசை மேலிட்டது. தனக்கும் சில மந்திரங்களை அருளுமாறு முனிவரை வேண்டிக் கொண்டான். முனிவரும் அதற்குச் சம்மதித்து சில மந்திரங்களை அந்த இளைஞனுக்கு போதித்தார்.



குளத்தில் குளித்து விட்டு வந்து, ஏதாவதொரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று எண்ணி மந்திர பாராயணம் செய்யுமாறு முனிவர் அவனிடம் கூறினார்.

அந்த இளைஞனும் குளத்தில் குளித்துவிட்டு வந்து முனிவர் கூறியபடி மந்திரத்தை ஜெபிக்கலானான். அனால் அவன் நினைத்தது எதுவும் நடக்கவில்லை பல தடவைகள் முயன்றும் எதுவித பலனும் இல்லாமல் போய்விட்டது.

பெரும் விசனத்துடன் முனிவரிடம் வந்து தான் மந்திரம் ஜெபித்தும் எதுவும் வெற்றியளிக்கவில்லையே என்று முறையிட்டான்.

முனிவர் சிரித்தபடி, நீ மந்திரத்தை ஜெபித்துக் கொண்டிருக்கும்போது உன் மனதில் எதைப்பற்றி எண்ணிக் கொண்டிருந்தாய்?" என்று கேட்டார்.

அதற்கு அவன் "இந்த நாடு பட்டினியால் வாடிக் கொண்டிருக்கும் போது, எனது மனைவி பிள்ளைகள் எல்லாம் உண்ண உணவின்றி அல்லல் பட்டுக் கொண்டிருக்கும் போது நான் மட்டும் தங்கள் தயவால் மூன்று வேளையும் நல்லுணவு உண்டு சிரமமெதுவும் இல்லாமல் மகிழ்ச்சியாக இருக்கின்றேனே என்று நினைத்தேன்! என்று நினைத்துக் கொண்டிருந்தேன்!" என்றார்.

இவ்வாறு வேதாளம் கதையைக் கூறி முடித்து, "மாமன்னரே! பிராமண இளைஞனுக்கு மந்திரம் ஏன் பலிக்கவில்லை?" என்று கேட்டது.

இந்த வினாவுக்கு விடையளித்த விக்கிரமாதித்தன், "மந்திரம், பிரார்த்தனை வழிபாடு, தவம், தியானம் ஆகியவை யாவும் ஐம்பொறிகளையும் அகத்தே அடக்கி 'கட்டுப்பாட்டுடன் செய்ய வேண்டியவை. இதைவிடுத்து நமது எண்ணங்களை ஒவ்வொன்றும் ஒவ்வொரு புறமாக இழுத்துக் கொண்டு ஆசாபாசங்களைப் பற்றி சிந்தனையில் மூழ்கி இருக்கும் போது எதனையுமே சாதிக்க முடியாது. ஆகவே மனத்தை தன் பாட்டில் அலையவிட்ட இளைஞன் வெறுமனே மந்திரத்தை ஓதியதினால் அவனுக்கு எந்தப் பலனும் கிடைக்கவில்லை!" என்று விக்கிரமாதித்தன் விடை கூறி முடித்தான்.


*(மன்னன் வருவான்...)*

# கத்தரித்த கடிஜோக்ஸ்

ஒருவர் : அந்த வீட்டில இருக்கிற ரெண்டு பையன்களோட பேர்களும் நேர் விரோதமாயிருக்கு.
மற்றவர் : எப்படி?
ஒருவர் : தம்பி பேர் அண்ணாதுரை. அண்ணன் பேர் தம்பித்துரை.

●●

ராமு : எங்க ஊரில ஒரே ஒரு பல் டாக்டர் இருக்கிறார்.
சோமு : ஏன், அவரோட மற்றப் பல்லெல்லாம் விழுந்திருச்சா?



●●

பானு : குறும்பு செய்யும் நட்சத்திரம் எது?
சோனு : எது?
பானு : 'வால்' நட்சத்திரம்.

●●

"அவருக்கு வியாபாரத்துல நிறைய நஷ்டம் வந்து நொறுங்கிட்டார்."
"அப்படியா, என்ன வியாபாரம் செய்தார்?"
"அப்பளம் செய்து வித்தார்"

●●

பாலு : உங்க அலுவலக வாசலில் ஒரு குண்டு ஆள் நின்னு கூச்சல் போடறாரே என்ன விஷயம்?
வேலு : அவருக்கு 'ஊதிய' உயர்வு வேணுமாம்.

●●

வாணி : கரும்பு வியாபாரி வீட்டுல வேலைக்குச் சேர்ந்தது தப்பாப் போச்சுது.
ராணி : ஏன்?
வாணி : 'இனிக்க இனிக்க'ப் பேசி வேலையில 'சக்கை'யாயப் பிழிஞ்சுடறார்.



●●

பெரிசு : நான் இந்தப் பூங்காவுக்கு அஞ்சு வருஷமா வந்துக்கிட்டிருக்கேன்.
சிறிசு : அப்ப, பூங்காவிலிருந்து உங்க வீடு ரொம்பத் தூரமா?

●●

"நான் ஒரு சட்டை எடுத்தேன். அது உன்னைப் போல இருக்கு."
"என்ன பெரிசா இருக்கா?"
"இல்லை. லூஸா இருக்கு."



●●

மாலா : சிகரெட் பிடித்தால் என்ன வரும்?
விமலா : கான்சர் வரும்.
மாலா : இல்லை. புகை வரும்.

●●

அவர் : நூலகத்துக்குள்ளே அவர் ஏன் நெளிந்து கொண்டே போகிறாரே?
இவர் : அவர்தான் புத்தகப் புழுவாச்சே.

●●

அவள் : திட்டுவதற்கு ஏற்ற கிழமை எது?
இவள் : 'சனி'க்கிழமை. சாப்பிடுவதற்கு ஏற்ற கிழமை எது தெரியுமா?
அவள் : 'திங்க'ட்கிழமை.

●●

தவம் : என்ர மகன் 'அணில்' மாதிரி.
சிவம் : அவ்வளவு 'சுறுசுறுப்பா' இருப்பானோ?
தவம் : இல்லை. எப்பவும் ஏதாவது 'கொறிச்சுக்கொண்டே இருப்பான்.

●●

டின்னி : மிகவும் மோசமான திரவம் எது?
வின்னி : அசிட்
டின்னி : இல்லை. உபத்'திரவம்'!

●●

பாபு : கொலைகாரன் எப்படிச் சிரிப்பான் தெரியுமா?
கோபு : தெரியாது. எப்படி?
பாபு : 'கொல்'லென்று.

●●






பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
Website: www.lapih.com/arul
436331


நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகள் வருகின்ற செப்டெம்பர் மாதம் 15ம் திகதி அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் ஆரம்பமாவதை அறிவீர்கள்.

இதற்காக அவுஸ்திரேலியா இந்த வருட ஆரம்பம் முதல் போட்டி ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டு வந்தது. ஒலிம்பிக் போட்டியின் ஆரம்ப விழா மற்றும் நிறைவு விழா எல்லாம் ஒத்திகை கூட பார்க்கப்பட்டு விட்டது.

ஒலிம்பிக் அணிவகுப்பில் பங்கேற்பவர்களில் முக்கியமான இருவர் தான் இவர்கள். அவுஸ்திரேலிய தடகளவீரர்களான நிகோலி போக்மன், டிகாதிட ஸ்கட் ஆகிய இருவரும் ஒத்திகை பார்க்கும் காட்சியே இது.

## ஓடும் ஆர்வம்



'ஓடி ஓடி உழைக்கணும்' என்பது அமரர் எம்.ஜி.ஆரின் படமொன்றில் இடம்பெறும் பாடலின் முதல்வரி.

இங்கே வயலின் வாசித்தபடியே சைக்கிள் ஓடுபவர் இந்தியாவைச் சேர்ந்த டொனால்ட் பொனாண்டஸ் என்ற இளைஞர்.

உலக அளவில் சாதனை படைப்போரது பெயர்கள் உலக சாதனைகளைப் பதிவுசெய்யும் 'கின்னஸ்' புத்தகத்தில் பதிவு செய்யப்படும்.

இந்திய அளவில் செய்யப்படும் சாதனைகள் 'லிம்கா' சாதனைப் புத்தகத்தில் இடம்பெறும்.

40 கிலோ மீட்டர் வயலின் வாசித்தபடியே சைக்கிள் ஓட்டிய டொனால்டின் சாதனை 'லிம்கா' சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சாதனையைப் புரிந்திருக்கும் டொனால்ட், "வயலினை வாசித்தபடி சைக்கிள் ஓட்டுவதில் வேறு இரு சாதனைகளை முறியடிக்க நான் திட்டமிட்டிருப்பினும் ஒன்றையாவது முறியடிப்பேன் என்பது எனது நம்பிக்கை," என்று கூறியுள்ளார்.






SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்று சொல்வார்கள். சிலர் திருமணங்களை தங்களுக்குப் பிடித்தமான இடங்களில் நிச்சயித்துக் கொள்வார்கள்.

அண்மையில் இவர்கள் தமது திருமணத்தை நிச்சயித்துக் கொண்டது திருக்கடியில், தெற்கு லெபனானில் இருந்து இஸ்ரேல் தனது படைகளை வாபஸ் பெற்றுக் கொண்டது கடந்த மே மாதம் 24ம் திகதி.

இத்தினத்தில் றோன் டெனியல் என்ற நீச்சல் வீரரும் மேரி ராபாத் என்ற நீச்சல் வீராங்கனையும் நகோரா என்ற கடல் பகுதியில் பிராணவாயு சகிதம் நீச்சல் உடைகளில் பல நூறு அடி ஆழத்தில் மோதிரம் மாற்றிக் கொண்டனர். இந்த நிச்சயதார்த்தத்தில் 20 நீச்சல் வீரர்கள் கலந்து கொண்டனர். அவர்களும் பிராணவாயு சகிதம் நீச்சல் உடைகளுடன்.

## முடியும் ஆரம்பம்



## நீரில் நிச்சயம்



## முதலாவது பிறந்ததின வாழ்த்து



### செல்வன் நவீன்குமார் 19.08.2000

கனடா மொன்றியல் நகரில் வசிக்கும் மட்டக்களப்பு வாழைச்சேனையைச் சேர்ந்த இராதாக்கிருஷ்ணன், அனற் தம்பதியினரின் செல்வப்புதல்வன் நவீன்குமார் தனது முதலாவது பிறந்ததினத்தை 19.08.2000 அன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தி, சித்தப்பா, மாமா, மாமி, பெரியப்பா, பெரியம்மா மற்றும் இலங்கையில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, மாமிமார், மாமாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்திமார், சித்தப்பாமார், மச்சான்மார், மச்சாள்மார், தம்பி சதுர்ஜன், தாத்தாமார், பாட்டிமார், கொள்ளுப்பாட்டி, மற்றும் ஜேர்மனியில் வசிக்கும் தாத்தா, பாட்டி, மாமி, மாமாமார், சித்தி, மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் நவீனை இறைவன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

## கவரும் வண்ணம்

செல்லும் இடமெல்லாம் எடுத்துச் சென்று பேசுவதால் செல்போன்களை செல்லிடப்பேசி என்கிறார்கள்.

செல்லிடப் பேசி இப்போது உலகெங்கும் வியாபித்திருக்கிறது. செல்லிடப்பேசி பாவனையாளர்கள் மட்டுமன்றி இவற்றை உருவாக்கும் நிறுவனங்களும் அதிகரித்துவிட்டன.

தமது செல்லிடப் பேசிகளை விற்பதற்காக நிறுவனங்களிடையே போட்டிகள் அதிகரித்து விட்டன. இதனால் பல்வேறு வடிவங்கள், பல்வேறு உருவங்கள் என்று விதவிதமாகத் தயாரிக்கிறார்கள்.

கொரியாவின் சம்சுங் நிறுவனம் தனது காட்சி அறைகளில் தம்மால் தயாரித்து வெளியிடப்படும் பொருட்களை பெரிய அளவில் உருவாக்கி வைத்துள்ளன.

இந்த மிகப் பெரிய செல்லிடப்பேசியும் சம்சுங் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட செல்லிடப்பேசியின் பெரிய மாதிரி ஆகும். இணைப்புக் கொடுத்தால் இந்தத் தொலைபேசியில் பேசலாம் என்பது இன்னொரு சிறப்பம்சம்.

இந்தப் பெரிய செல்லிடப் பேசியை அறிமுகப்படுத்துகிறார் சம்சுங் நிறுவன பெண் ஊழியர் ஒருவர்.

இந்த ஊழியரிடம் அப்பெரிய செல்லிடப் பேசியைப் பற்றிய விளக்கத்தைக் கேட்டு வியப்புறுகின்றனர் வாடிக்கையாளர்கள்.

வாடிக்கையாளர்களைக் கவருவதற்காகவே இராட்சத உருவங்களில் தமது தயாரிப்புகளை உருவாக்குகிறார்கள் இந்நிறுவனத்தினர்.

(பட உதவி: அஹமட் நியாஸ்-சியோல்)

